இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 248 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆடி 16 செவ்வாய்க்கிழமை 01.08.2017

## படையினருக்கு வடக்கில் ஆபத்து

பதறுகிறார் கம்மன்பில

கொழும்பு, ஒக 1
வடக்கிலுள்ள இராணுவத்தினர், பொலிஸாரினது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றும், >> 24



## மக்களின் குறைகள் தீர்ந்தால் மட்டுமே அமைதி ஏற்படும்

திருமலையில் கூறினார் சம்பந்தன்

திருமலை, ஒக 1
மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் நிரந்தரமாகத் தீர்க்கப்பட்டால் மட்டுமே நாட்டில் அமைதி ஏற்படும் >> 06

## தமிழ்க் கூட்டமைப்பு சிதறடிக்கப்படக்கூடாது

வடக்கு முதலமைச்சர் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஒக. 1
கூட்டமைப்பு என்ற எமது அரசியல் பலம் சிதறடிக்கப்பட - மழுங்கடிக்கப்படக்கூடாது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். மட்டுவில் தெற்கு >> 06

## இரு நாள்களில் 12 பேர் வடமராட்சியில் கைது

வன்முறைகளில் ஈடுபட்டவர்கள் என்கிறது பொலிஸ்

வடமராட்சி, ஒக. 1
வடமராட்சியில் அண்மைக்காலமாக இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் கடந்த 2 நாள்களில் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். வடமராட்சி கிழக்கில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். அதன் பின்னர் வடமராட்சியில் மக்கள் மத்தியில் குழப்ப நிலை ஏற்பட்டது. அந்தச் சம்பவத்தின் பின்னர் அங்கு இடம்பெற்ற கடலோரக் காவற்படையினர் >> 25

## நல்லூர் துப்பாக்கிச் சூடு: மறியலிலுள்ள சந்தேகநபருக்கு என்ன தேவைக்காக 'ரெஸ்ரர்'?

விசாரணை நடத்துமாறு பணிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 1
நல்லூர் துப்பாக்கிச் சூட்டுச் சந்தேக நபரைச் சிறையில் பார்வையிடச் சென்ற அவரது மனைவி 'ரெஸ்ரர்' கொண்டு சென்ற சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தி அறிக்கை >> 25

# புலி, ஆவா உறுப்பினர்களே பொலிஸார் மீது வாள்வெட்டு

## பொலிஸ்மா அதிபர் பூஜித் யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு
## சுற்றுக்காவல், தேடல், சோதனைகள் மீள ஆரம்பிக்கும்

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 1
கொக்குவிலில் நேற்றுமுன்தினம் பட்டப்பகலில் பொலிஸார் இருவரைத் துரத்தித் துரத்தி வெட்டியவர்களுக்குத் தலைமை தாங்கியவர் விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளி என்று தெரிவித்தார் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர. அந்தச் சந்தேகநபர் ஆவா குழுவின் உறுப்பினரும்கூட என்றும் அவர் கூறினார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து பொறுமை இழந்திருக்கும் பொலிஸார் சுற்றுக்காவல், தேடல், சோதனை நடவடிக்கைகளை இராணுவத்துடன் இணைந்து நடத்தப் போகின்றனர் என்றும் அவர் அறிவித்தார்.

பொலிஸார் மீதான தாக்குதலை அடுத்து நிலைமைகளை அவதானிப்பதற்காகப் பொலிஸ் மா அதிபர் நேற்று யாழ்ப்பாணம் வந்தார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் காயமடைந்த பொலிஸார் இருவரையும் நேரில் சென்று பார்த்தார். அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:
கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு கொன்ஸ்டபிள்கள், ஒருவர் சிங்களவர் மற்றவர் தமிழர் தமது மோட்டார் சைக்கிளில் ஒருவர் சீருடையிலும் ஒருவர் சிவில் உடையிலுமாகக் கொக்குவிலுக்குச் சென்றனர்.

தம்மைச் சில மோட்டார் சைக்கிள்கள் வேகமாகப் பின்தொடர்ந்து வருவதை இந்தப் பொலிஸார் கண்டனர். வழமைக்கு மாறானது அது. எனினும் தப்பிச் செல்ல முடியாது என்பதை அவர்கள் உணர்ந்தனர். தொடர்ந்தும் முன்னோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். துரத்தி வந்தவர்களின் மோட்டார் சைக் >> 25

## உயிரிழந்த மெய்க்காவலரின் வீட்டை மறுசீரமைக்க ஏற்பாடு

நீதிபதி இளஞ்செழியனின் பாடசாலை நண்பர்கள் உதவி வழங்கவுள்ளனர்

யாழ்ப்பாணம், ஒக. 1
உயிரிழந்த மெய்ப்பாதுகாவலர் ஹேமசந்திரவின் வீட்டை மறுசீரமைத்துக் கொடுப்பதற்கு, நீதிபதி மா. இளஞ்செழியனின் பாடசாலை நண்பர்கள் முன் வந்துள்ளனர். இதற்காக >> 25




கிளிநொச்சி, ஒக.1
கிளிநொச்சியில் நேற்று மாலை நடந்த விபத்தில் 4 பேர் படுகாயமடைந்தனர். கப் ரக வாகனமும் பேருந்து ஒன்றுமே விபத்துக்குள்ளாகின. கிளிநொச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு அருகில் இந்த விபத்து நடந்தது.
பரந்தன் நோக்கிப் பயணித்த கப் ரக வாகனம் வேகக் கட்டுப்பாட்டை >> 25

## பொலிஸ் சேவையிலிருந்து சிறிகஜன் இடை நீக்கம்

யாழ்ப்பாணம், ஒக. 1
புங்குடுதீவு மாணவி கொலை வழக்கின் முதன்மைச் சந்தேக நபர் சுவிஸ்குமார் தப்பிக்க உதவினார் என்ற >> 25

## விக்னேஸ்வரன் – சுமந்திரன் பத்திரிகைகள் மீது பாய்ச்சல்

யாழ்ப்பாணம், ஒக. 1
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இருவரும் திரைனப் பத்திரிகைகள் மீது காரசாரமான விமர்சனங்களை >> 25



## படுகாயமுற்ற பொலிஸாரில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக ஹெலி மூலம் கொழும்புக்கு

பொலிஸ்மா அதிபர் பூஜித் உத்தரவு

யாழ்ப்பாணம், ஒக 1
கொக்குவிலில் வாள்வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தரான தம்மிக்க ரத்னாயக்கவை உடனடியாக உலங்குவானூர்தி மூலம் கொழும்பு பொலிஸ் மருத்துவமனைக்கு மாற்றுவதற்கு ஏற்பாடு >> 25

## வடக்குத் தாக்குதல்கள் ஆரம்பமே போகப் போக அவை அதிகரிக்கும்

இப்படிக் கூறுகிறார் மகிந்த

கொழும்பு, ஒக. 1
"தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஆரம்பமாகும்போது, பொலிஸார் மீதுதான் முதலில் தாக்குதல் நடத்தினார்கள். வடக்கில் தற்போது நடைபெறும் சம்பவங்கள் வெறும் ஆரம்பம் மட்டுமே. >> 25

## காணாமற்போனோர் சான்றிதழ்; வடக்கில் 76 பேர் விண்ணப்பம்

7 பேரின் படிவங்கள் நிராகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 1
காணாமற்போனோர் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு வடக்கு மாகாணத்தில் 79 பேர் விண்ணப்பித்துள்ளதாகவும் அவர்களில் 7 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும், வடக்கு மாகாணப் பதிவாளர் நாயகம் பி.பிரபாகர் தெரிவித்தார். காணாமல் ஆக்கப்பட்டவர்களை இறந்தவர்களாகக் கருதிப் பதிவு செய்யும் சட்டம் முன்னைய ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. தற்போதைய >> 25

## எனது ஆசீர்வாதமின்றி புதிய ஆட்சி அமையாது

மைத்திரி நேற்றுத் திட்டவட்டம்

ஹிங்குராங்கொடை, ஒக. 1
தற்போதைய புதிய ஆட்சியைக் கவிழ்த்து புதிய ஆட்சியை அமைப்பதானாலும் என்து விருப்பமும், ஆசீர்வாதமும் இல்லாமல் அது ஒரு போதும் சாத்தியமே இல்லை. >> 06





நல்லூர் கந்தன்
அழகைக் காண
கண் ஆயிரம் வேண்டுமே

நல்லூர் கந்தன்
உற்சவக் காட்சிகள்
தினமும்
newuthayan.com இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மகளிர் கல்லூரியின் புதிய கட்டடத் திறப்பு விழா



யாழ்ப்பாணம், ஒக.1

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடத் தொகுதி நேற்றுத் திறக்கப்பட்டது. அமெரிக்த் தூதரகத்தின் ஐக்கிய மாநிலங்களின் பிரதி நிதி ரொபேர்ட் ஹில்டன் மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் இணைந்து கட்டடத்தைத் திறந்தனர்.


வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அனுசரணையுடன், அமெரிக்க தூதரகத்தின் ஐக்கிய மாநிலங்களின் நிதி உதவியுடன் இந்தக் கட்டம் அமைக்கப்பட்டது. கட்டடத் தொகுதியின் தளபாடங்கள் 15 மில்லியன் ரூபா செலவிலும், கட்டிடதொகுதி75மில்லியன்ரூபாசெலவும்அமைக்கப்பட்டன. .நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், யாழ்ப்பாண கல்வி வலய பணிப்பாளர் தெய்வேந்திரராஜா, மற்றும்ஆசிரியர்கள், மாணவர்கள்எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-ரி)

## பனையோலை பெட்டியில் சிற்றுண்டிகள்

சாவகச்சேரி, ஒக.1

தென்மராட்சியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் விருந்தினர்களுக்கு பனையோலைப் பெட்டியில்சிற்றுண்டிகள்பரிமாறப்பட்டன.

தென்மராட்சி கல்வி வலயத்தின்முன்பள்ளிச்சிறார்களுக்கிடையிலானவலயமட்ட விளையாட்டு விழா நேற்று சாவகச்சேரியில் நடைபெற்றது. அதில் விருந்தினர்களாகக் கலந்து கொண்டவர்களுக்கு பனையோலையில்தயாரிக்கப்பட்டமூடிப் பெட்டியில் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன. (ற-ஐ-9)





# காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்த வலியுறுத்தி கவனவீர்ப்பு ஊர்வலம்

## கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில்

கிளிநொச்சி, ஒக.1

காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி நேற்றுக் கிளிநொச்சியிலும், முல்லைத்தீவிலும் கவன வீர்ப்புஊர்வலங்கள்நடத்தப்பட்டன.

காணாமல் ஆக்கப்பட்டர்களின்விடுவிப்புக்காகஅவர்களின் உறவினர்கள் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாகத்தொடர்போராட்டம் நடத்திவருகின்றனர். அவர்களின் கோரிக்கை தொடர்பில் இதுவரை எந்தப் பதிலும் வழங்கப்படவில்லை. இந்த நிலையில் நேற்றுக் கவன வீர்ப்பு ஊர்வலம் நடத்தப்பட்டது.

கிளிநொச்சி

கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்பாக இருந்து ஊர்வலம் ஆரம்பமாகி மாவட்டச் செயலகத்தை அடைந்தது. காணாமல்ஆக்கப்பட்டவர்களின்உறவினர்கள், மதகுருமார்கள், மக்கள் எனப் பலர் அதில் கலந்து கொண்டனர். தமது கோரிக்கை அடங்கிய மனுவை கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகத்திடம்கையளித்தனர். மெதடிஸ்த திருச்சபை ஊர்வலத்தை ஏற்பாடு செய்தது.

காணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கிளிநொச்சிகந்தசுவாமிகோயில் முன்பாக கடந்த பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி தொடர்





போராட்டத்தை ஆரம்பித்தனர். அவர்களின்போராட்டம் நேற்று 162ஆவது நாளாகத் தொடர்ந்தது.

முல்லைத்தீவு

முல்லைத்தீவு இராயப்பர் ஆலயம் முன்பாக ஆரம்பித்த ஊர்வலம் முல்லைத் தீவு மாவட்டச்செயலகத்தை அடைந்தது. இந்தப் பேரணியில் வடக்கு, கிழக்கின் பல பகுதிகளையும்சேர்ந்தசுமார் 200 பேர் வரையில் கலந்து கொண்டனர். தமது கோரிக்கை அடங்கிய அரச தலைவருக்கான மனுவை மாவட்டச் செயலரிடம்கையளித்தனர்.

காணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவில் தொடர் போராட்டம்நடத்துகின்றனர். அவர்களின்போராட்டம்நேற்று148 ஆவது நாளாகத் தொடர்ந்தது.

(ற-ஐ-10, 35)

# திணைக்களப் பெயர்ப்பலகை மும்மொழிகளில் அவசியம்

## அமைச்சர் மனோ தெரிவிப்பு



கிளிநொச்சி, ஒக. 1

வடக்கு மாகாணத்தில் உள்ள சகல அரச திணைக்களங்களிலும் மூன்று மொழிகளிலும் பெயர்ப்பலகைகள் காட்சிப்படுத்தி இருக்க வேண்டும் என்று அமைச்சர் மனோ கணேசன் வலியுறுத்தினார்.

சமத்துவம்மற்றும்கலந்துரையாடல் அமைச்சின் வடக்கு மாகாண ரீதியிலான அபிவிருத்திக் கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது . அதில்கலந்துகொண்டவர்கள் மொழியால் மாவட்ட ரீதியாக எதிர்நோக்கும்பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சருக்குத் தெரியப்படுத்தினர். அதற்கான தீர்வுகளைத்தாம்பெற்றுத்தருவதாக அமைச்சர் கூறினார்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் , அமைச்சுடன் தொடர்புடைய அரச, அரசார்பற்ற திணைக்கள பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். அமைச்சின் காரியாலயம் ஒன்று கிளிநொச்சி155 ஆம் கட்டைப் பகுதியில் அமைக்கப்படுகின்றது. அதையும் அமைச்சர் நேரில் சென்றுபார்வையிட்டார்.

(ற-ஐ-10, 6)

## உறவுகளை விடுவிக்கக் கோரி

# தொடர்போராட்டம்நடத்தும் மக்களைச் சந்தித்தார் மனோ



கிளிநொச்சி, ஒக். 1

கிளிநொச்சியில் தொடர் போராட்டம் நடத்திவரும் காணாமல்ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்களை அமைச்சர் மனோ கணேசன் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கிளிநொச்சிகந்தசுவாமிஆலயம் முன்பாக உறவினர்கள் நேற்றுடன்162ஆவதுநாளாகப்போராட்டத்தில்ஈடுபட்டுள்ளனர்.

அவர்களை தேசிய மொழிகள்,தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் மற்றும் நாடாளுமன்றஉறுப்பினர்களானஎம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன் ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

தமதுதொடர்போராட்டத்தின் கோரிக்கைதொடர்பாக உறவுகள் கண்ணீர் மல்க அவர்களிடம் எடுத்துக் கூறினர். உறவுகளுக்கு ஆறுதல் கூறிய அவர்கள் உரிய தரப்புகளுடன் இது தொடர்பில் கலந்துரையாடப்படுமென்று தெரிவித்தனர்.

(ற-ஐ-10,35)

# யாழ். வாள்வெட்டு விவகாரம் அமைச்சரவையில் பேசப்படும்

## அமைச்சர் கபீர் ஹாசீம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 1

கோப்பாய்பகுதியில்இரண்டுபொலிஸ்உத்தியோகத்தர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகஇன்றுஇடம்பெறவுள்ளஅமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்படும் என்று அமைச்சர் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

இந்தச் சம்பவம் குறித்த விசாரணை சட்டம் ஒழுங்கு அமைச்சால்தற்போது நடத்தப்பட்டு வருகிறது. கோப்பாய் பிரதேசத்தில் நேற்று (நேற்றுமுன்தினம்) இடம்பெற்றசம்பவத்தை அடுத்துயாழ்ப்பாணத்தில்பாதுகாப்புப்பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச்சம்பவம்தொடர்பில் ஆராய 4 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாண்ம்பிரதேசத்துக்குப் பொறுப்பான மூத்த பிரதி பொலிஸ் மா அதிபரின் கண்காணிப்பின் கீழ் இந்த விசாரணை குழுக்கள் செயற்படவுள்ளன.

கூரிய ஆயுதத்தால்தாக்கப்பட்ட பொலிஸ்உத்தியோகத்தர் இருவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தத் தாக்குதலுடன் ஆவா குழு தொடர்புகொண்டிருக்கலாம்என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். என்றார்.

(ற-ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ஊர்வலம்

## பேராதனையில் இருந்து கொழும்புக்கு



கொழும்பு, ஒக. 1
சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலைக்கழகமாணவர்களால்நேற்றுத்தொடர்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பேராதனை பல்கலைக்கழகத்துக்கு அருகில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் தொடர்ந்து 5 நாள்களின் பின்னர் கொழும்பை வந்தடையும்.

"இந்த ஊர்வலத்தில் மாணவர்களுடன் 5 பொது அமைப்புகளும் இணைந்துள்ளன. தொடர் ஊர்வலமாகச் சென்று கொழும்பில் மாபெரும் போராட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளோம்" என்று மாணவ அமைப்பின் இணைப்பாளர் சனத் பண்டார தெரிவித்தார்.

அதேவேளை சைட்டம் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலைக்கழகமாணவர்கள்நேற்றுமுன்தினம்பலபிரதேசங்களில் எதிர்ப்புப் பேரணிகளை மேற்கொண்டனர். ராகம மருத்துவ பீட மாணவர்களால் கம்பஹா நகரத்திலும், களனி மற்றும் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களால் குருநாகல் நகரிலும், நுவரெலியாவிலும் எதிர்ப்புப் பேரணிகள் நடத்தப்பட்டன. இதனிடையேசைட்டம்நிறுவனம்ஒருபோதும் மூடப்படமாட்டாது என்று கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்றநிகழ்வொன்றில்கலந்துகொண்ட உயர்கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். (ந-ஐ-10)

# சிவாஜிலிங்கத்திடம் விசாரணை: இனப்படுகொலையே நடக்கவில்லை நடந்தது என்று எவ்வாறு கூறுவீர்கள்?

## இவ்வாறு பொலிஸார் கேட்டனர் என்று சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 1
இனப்படுகொலைஇடம்பெறவேயில்லை. போரில் புலிகள்தான் கொல்லப்பட்டார்கள். இனப்படுகொலை நடந்தது என்று நீங்கள் எப்படிக் கூறுவீர்கள்? என்று குற்றப்புலனாய்வுப் பிரிவினர்என்னிடம்கேள்விஎழுப்பினர்.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கம்தெரிவித்தார்.

வடக்குமாகாணசபைஉறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் மே மாதம் நடந்த பத்திரிகையாளர்சந்திப்பில், முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தன்று முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேனவரக்கூடாது என்றும் அதையும் மீறி வந்தால் அவருக்கு எதிராகப் போராட்டங்கள் நடத்தப்படும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பான விசாரணைக்கு கொழும்புக்கு வரவேண்டும் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்கே. சிவாஜிலிங்கத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. கொழும்புக்கு வர முடியாது, யாழ்ப்பாணத்துக்கு வந்து வேண்டுமானால் வாக்குமூலத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்று எம். கே.சிவாஜிலிங்கம்பதிலளித்திருந்தார்.

யாழ்ப்பாணம் வந்த கொழும்பு குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், யாழ்ப்பாணப்பொலிஸ் நிலையத்தில் வைத்து எம். கே. சிவாஜிலிங்கத்திடம் நேற்று 4 மணிநேரம் விசாரணை நடத்தினர்.

"ஹெல பொதுசவிய என்ற அமைப்பே எனக்கு எதிரான முறைப்பாட்டைச் செய்ததாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர். நான் இனமுறுகலை ஏற்படுத்தும் வகையில் செயற்படுவதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டனர். பத்திரிகையாளர் சந்திப்பில் இங்கு நடந்தது இனப்படுகொலை என்று நான் குறிப்பிட்டதைச் சுட்டிக்காட்டி, இங்கு அவ்வாறு நடைபெறவில்லை. போரில் தமிழீழ விடுதலைப் புலிகளே கொல்லப்பட்டனர். பின்பு எப்படி அவ்வாறு கூறுவீர்கள்? என்று கேட்டனர். நான் ஐ. நா. அறிக்கை உள்ளிட்ட பல்வேறு அறிக்கைகள் ஒரு லட்சம்பேர்வரையில்கொல்லப்பட்டிருக்கின்றார்கள் என்று குறிப்பிட்டதைச் சுட்டிக்காட்டினேன். அரசதலைவர் மைத்திரிபாலசிறிசேனவுக்கு எதிராக ஜனநாயக ரீதியிலேயே போராட்டம் நடத்துவேன்என்றுதெரிவித்ததையும்அவர்களிடம்குறிப்பிட்டேன்" என்று எம். கே. சிவாஜிலிங்கம் கூறினார்.

அதேவேளை, அன்றைய ஊடக சந்திப்பில் எம். கே. சிவாஜிலிங்கத்துடன் கலந்து கொண்டிருந்தனர் என்று கூறப்படும் சக வடமாகாண சபை உறுப்பினர்களான கிளிநொச்சி மாவட்ட மாகாணசபை ஊறுப்பினர் பசுபதிப்பிள்ளைமற்றும்வவுனியா மாவட்ட மாகாண சபை உறுப்பினர் தியாகராஜா ஆகியோரும் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களிடமும் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் பெறப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ந-ஐ-10,106)

மணல் வழங்கலைச் சீராக்க

# திணைக்கள அலுவலகங்களை வடக்கில் நிறுவுவது அவசியம்

## யாழ். மாவட்டச் செயலகத்தில் நடந்த சிறப்புக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக.1
வடக்கில்மணல்வழங்கலில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க அதனுடன் தொடர்புடைய திணைக்களத்தின் கட்டுப்பாட்டுஅலுவலகங்கள் வடக்கு மாகாணத்தில் நிறுவப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

வடக்கில்மணல்வழங்கலில் உள்ள இடர்பாடுகளை நீக்குவது தொடர்பான கூட்டம் நேற்று யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.



வடக்குமாகாணமுதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் ஏற்பாட்டில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. அதிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டது.

"வடக்கில் உள்ள வளங்களை வடக்குக்குப் பயன்படுத்துவதற்கு தெற்கில் உள்ள திணைக்களங்களிடம் அனுமதி பெறுவதில் இடர்பாடுகள் காணப்படுகின்றன. அந்தத் திணைக்களங்கள்தமதுஅலுவலகங்களைவடக்கில்நிறுவ வேண்டும். முழுப் பொறுப்பு வாய்ந்தஅதிகாரிகளைவடக்குக்கு நியமிக்க வேண்டும்.

கனியவளத் திணைக்களம், புவிச்சரிதவியல் திணைக்களங்களின் கட்டுப்பாட்டு அதிகாரிகள் அநுராதபுரத்தில் உள்ளனர். அவர்கள் அந்த மாகாண அதிகாரிகளின் கட்டளையின் கீழ் இயங்கும் நிலையே காணப்படுகின்றது. அவர்களுக்குஇங்குள்ள பிரதேசங்களின்நிலைமையும் முழுமையாகத் தெரிவதில்லை. கனிய வளங்களுக்கான அனுதியை வழங்கும் அலுவலகத்தை அல்லது குறைந்தபட்சம்அதிகாரியை வடக்கில் இயங்க வைக்க ஆவன செய்ய வேண்டும்.

வடக்கில் நிலவும் மணல் தட்டுப்பாட்டைவைத்துப்பலரும் பலவிலைகளில்மணல்விற்பனை செய்கின்றனர். அதனால் அநாவசியப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. வடக்கின்5மாவட்டங்களுக்கும்கனியவளங்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் 5 மாவட்டச் செயலர்களையும் அழைத்து ஆராய்ந்து விரைவில் முடிவு எட்டவேண்டும். 5மாவட்டங்களுக்கும் விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்" என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்குமாகாணமுதலமைச்சர், பொலிஸ்மாஅதிபர்பூஜித் ஜெயசுந்தர, யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், மாவட்டச் செயலர் , பிரதேச செயலர்கள், இராணுவ அதிகாரிகள் மற்றும்பொலிஸார், கனியவளத் திணைக்கள அதிகாரிகள், புவிச்சரிதவியல் திணைக்களஅதிகாரிகள்இந்தக்கூட்டத்தில்கலந்துகொண்டனர். (ந-101)

# குடில் உற்பத்திநிலையம் அறிவியல்நகரில் திறப்பு

கிளிநொச்சி, ஒக.1
இந்திய அரசின் நிதியுதவிடன் கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைக்கப்பட்ட குடில் உற்பத்தி நிலையத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று இடம்பெற்றது. "கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் கழிவுப்பொருள்களின் மறுசுழற்சியே பொருளாதாரத்தின் வளர்ச்சி" எனும் நோக்குடன் இந்த உற்பத்திநிலையம்அமைக்கப்பட்டது.

நிலையத்தை அமைச்சர் மனோ கணேசன் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், எஸ். சிறீதரன் மற்றும் [illegible] இந்தியத் துணைத்தூதரகத்தின் கொன்சியூலர் ஆ.நடராஜன் ஆகியோர் இணைந்து நாடா வெட்டித்திறந்தனர்.

"கமுகு, வாழைத்தடல், மற்றும் தென்னம்தும்பு போன்றவற்றைப் பயன்படுத்தி பல்வேறு வகையான பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. பொலித்தீன்பாவனைதடை செய்யப்பட்டுள்ளநிலையில் இந்த மாற்றுச் செயற்பாடு நல்லதொரு தீர்வாகக் காணப்படும்"என்றுஅமைச்சர் மனோ கணேசன் கூறினார்.

இந்த நிகழ்வில் இந்தியாவில் இருந்து வந்த பயிற்சி ஆசிரியர்கள் மற்றும் துறைசார் அதிகாரிகள் பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். (ஐ-10,6,35)

# வீட்டுத் திட்டத்துக்காக முற்றுகைப் போராட்டம்

## வவுனியா மாவட்டச் செயலகத்தில் கூடினர் சாந்தசோலை மக்கள்



வவுனியா, ஒக. 1
தமக்கு வீட்டுத்திட்டம் வழங்கக் கோரி சாந்தசோலை கிராம மக்கள் வவுனியா மாவட்டச் செயலகத்தை நேற்று முற்றுகையிட்டனர்.

"வவுனியாநொச்சிமோட்டை கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட சாந்தசோலை கிராமத்தைச் சேர்ந்த 36 குடும்பங்களுக்கு இதுவரை வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை. வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவில் முறைகேடுநடக்கிறது"என்று அவர்கள் வவுனியா மாவட்டச் செயலரிடம்முறையிட்டனர்.

மாவட்டச்செயலர் அவர்களுடன் கலந்துரையாடினார். எதிர்வரும்11ஆம்திகதிஉங்களது கிராமத்துக்கு நேரடியாக வந்து தீர்வு பெற்றுத் தருகிறேன் என்று மாவட்டச் செயலர் உறுதியளித்தார். கிராம மக்கள் அதன்பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

"சாந்தசோலை கிராமத்தில் இருந்து போர் காரணமாக இடம்பெயர்ந்த குடும்பங்களில் 168 குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ளோம். 36 குடும்பங்கள் தொடர்ந்தும் கொட்டில் வீடுகளில் வசிக்கின்றோம். கடந்த 10 வருடங்களாகவீட்டுத்திட்டத்துக்கு எழுத்து மூலம் விண்ணப்பித்தோம். வீடுகள் வழங்கப்படவில்லை. இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றுதிரும்பியவர்களும், போரின் காரணமாக அங்கவீனர்களானவர்களாகஉள்ளவர்களுமே இந்தத் திட்டத்தில் புறக்கணிக்கபட்டுள்ளோம். குறிப்பிட்ட சிலருக்கே வீட்டுத்திட் டங்கள் வழங்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 11 ஆம் திகதி வவுனியா மாவட்டச் செயலர் நேரடியாக வந்து எங்கள் பிரச்சினைகளைக்குத்தீர்வுபெற்றுத் தருகின்றேன் என்று உறுதியளித்துள்ளார்"என்று மக்கள் தெரிவித்தனர். (ந-ஐ-10)

# சமுர்த்திப் பயனாளிகள் பட்டியலில்பெயர்நீக்கம்

## வரணி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்



தென்மராட்சி, ஒக.1
சமுர்த்திப் பயனாளிகள் தெரிவில் தங்களது பெயர் நீக்கப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவித்து வரணி பிரதேச மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வரணி சமுர்த்தி வங்கி மற்றும் அலுவலகத்தை முற்றுகையிட்ட மக்கள் அலுவலகத்தை சங்கிலியால் பூட்டி அலுவலர்களை உள்ளே செல்ல விடாமல் தடுத்தனர். புதிய சமுர்த்திப் பயனாளிகள் தெரிவு தொடர்பான பட்டியல் கிராம சேவையாளர்பிரிவுகளில்கடந்தசனிக்கிழமைகாட்சிப்படுத்தப்பட்டது. அந்தப் பட்டியலில் தமது பெயர் விவரங்கள் உள்ளடக்கப்படவில்லை என எதிர்ப்புத் தெரிவித்தே அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மக்களின் போராட்டம் தொடர்பில் சமுர்த்தி வங்கி முகாமையாளர் கொடிகாமம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தார்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள 60 கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் அலுவலகங்களில் பயனாளிகள் பட்டியல்கள் மீளாய்வு செய்யப்பட்டன. பட்டியலில் குறிப்பிட்டதன் பிரகாரம் சமுர்த்தி நிவாரணப் பட்டியலில் பெயர் நீக்கம் செய்யப்பட்டவர்கள் மற்றும் புதிதாக இணைக்கப்பட வேண்டியவர்கள் சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் 15 தினங்களில் தமது முறைப்பாடுகளை வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டது. அதனையடுத்து முறைப்பாடுகள்வழங்குவதற்காகபெருமளவானோர்பிரதேச செயலகத்தில் கூடியிருந்தனர். (ந-ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பொலிஸ் உயர் அதிகாரிகள் இருவருக்கு இடையே பனிப்போர்

நல்லூரில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் மீதான துப்பாக்கிச்சூட்டுச்சம்பவத்தையடுத்துயாழ்ப்பாணமாவட்டத்தில் கடமையாற்றும் தமிழ் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு இடையே பனிப்போர் மூண்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பொலிஸ் நடவடிக்கைகளை விரைவுபடுத்தும் வகையில் தமிழ்பொலிஸ்உயர் அதிகாரிகள் இருவர் ஒரே பதவி நிலையுடன் பொலிஸ் மா அதிபரால் நியமிக்கப்பட்டனர்.

அவர்களுக்கு இடையே பெரும்பனிப்போர்மூண்டுள்ளது. இருவரும் தற்போது பொதுஇடங்களில்முரண்பட்டுக் கொள்கின்றனர். சில இடங்களில் இருவரும் வாய்தர்க்கத்தில் ஈடுபட்டு உள்ளனர்.

அவர்களில் கோப்பாய் பகுதியில்உள்ளதனியார்தங்குமிடமொன்றில் வாடகைக்கு தங்கியுள்ளார். அந்தத் தங்குமிடத்துக்குகடந்தஞாயிற்றுக்கிழமை சென்ற மற்றைய அதிகாரி, "எதற்காக அந்த அதிகாரிக்கு வாடகைக்கு அறை கொடுத்தீர்கள்? எத்தனை பேருக்கு சாப்பாடு கொடுக்கின்றீர்கள்? மிகவிரைவில் அந்த அதிகாரியை இந்த இடத்தில் இருந்து அகற்ற வேண்டும்" என தங்குமிடத்தில் பணியாற்றும் ஊழியர்களிடம் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு சென்ற சமயம் விடுதியில் தங்கியிருந்த பொலிஸ்அதிகாரிவெளியில் சென்றிருந்தார். அந்தப் பொலிஸ் அதிகாரி வந்ததும், ஊழியர்கள்அவரிடம்முறையிட்டுள்ளனர். அதற்கு அவர் தான்இந்தமிரட்டல்சம்பவம் தொடர்பில் வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் முறையிடுவதாகவும், ஊழியர்களை பயப்பட வேண்டாம்எனவும்கூறியுள்ளார்.

இந்த நிலையில், யாழ்ப்பணத்துக்கு நேற்று வருகை தந்த பொலிஸ் மா அதிபர் தொடர்பிலானசெய்திசேகரிப்புப்பணிக்காகயாழ்ப்பாணத் தலைமை பொலிஸ் நிலையத்தில்செய்தியாளர்கள்காத்திருந்தனர். அந்தவேளை அங்கு வந்த பொலிஸ் அதிகாரி, "மற்றைய அதிகாரியால் வழங்கப்படும் செய்திகளுக்குத்தான் முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. அது ஏன்? என தெரியவில்லை" என்று செய்தியாளர்களிடம் கடிந்துகொண்டார். (வ-37)

## பண்ணைக்குள் அத்துமீறி நுழைந்தவர் சூட்டில் சாவு!

கொழும்பு, ஓக. 1

பாதுகாப்பு ஊழியர் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கொஸ்கம, புஸ்ஸலாவப் பகுதியில் நேற்றுக் காலை நடந்துள்ளது.

இறைச்சிக்காக வளர்க்கப்படும்பன்றிப்பண்ணைக்குள் திருட்டுத்தனமாக நுழைந்தவர் மீதே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. அங்கிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார். அதில் அந்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

துப்பாக்கிச்சூடுநடத்தியபாதுகாப்பு உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளார். துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த நபர் தொடர்பான விவரங்கள் இதுவரை அறியப்படவில்லை. கொஸ்கமபொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ற-ஜ-10)



தென்மராட்சி கல்வி வலய மட்ட மழலைகள் விளையாட்டு விழா சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்றது. அதில் மாணவர்களின் இசையும் அசைவும் என்ற நிகழ்வும் இடம்பெற்றது. (ற-ஜ-9)

## ஆடித்திருவிழா

யாழ்ப்பாணம், ஓக. 1

முதியோருக்கான அன்பளிப்பு நிகழ்வும், ஆடித்திருவிழாவும் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப.3.30 மணிக்கு நவாலி வடக்கு முதியோர் சங்கத்தில் இடம்பெறவுள்ளது என அறிவிக்கப்பட்டது.

முதியோர் சங்கத் தலைவர் மருத்துவர் சோ. சுந்தரராஜன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி. கே.சிவஞானம் மற்றும் வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் ச.சுகிர்தன், கே.என்.வி.கனகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டது. (21)

## கந்தபுராண எழுச்சி விழா

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் நிகழ்வுகள் அரங்கேறும் கந்தபுராண எழுச்சிவிழா "கந்தபுராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம்" 5ஆம் நாள் வைபவம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (21)

## மகிந்தவுக்கு ஐதேக சவால்

*முடிந்தால் அரசைக் கவிழ்த்துக் காட்டட்டுமாம்*


கொழும்பு, ஓக. 1

முடிந்தால் அரசைக் கவிழ்த்துக் காட்டுமாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு சவால்விடுத்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உதவியைப் பெற்று ஆட்சி அமைக்க வேண்டிய தேவைஐக்கியதேசியக்கட்சிக்குஏற்படாதுஎன்றும்குறிப்பிட்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில்நேற்றுநடைபெற்றபத்திரிகையாளர்சந்திப்பிலேயேஅவர் மேற்கண்டவாறுகூறினார். அவர்மேலும்தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான தேவை எங்களுக்கு கிடையாது. கூட்டு அரசை மேலும் தொடர்வதா? இல்லையா? என்பது இரண்டு முதன்மைக் கட்சிகளின் தலைவர்களது தீர்மானம் என்பதுபோல கட்சிகளினது அர்ப்பணிப்புமாகும்.

தற்போது சுதந்திரக் கட்சியின் சில உறுப்பினர்கள் கூறுவது போல, ஓகஸ்ட் மாதத்தின் இறுதியில் அவர்களது உறுதியான நிலைப்பாட்டைஅறிவித்தபின்னர்அதுகுறித்துஎங்களுக்கும் உறுதியாகஅறிவிப்பைவிடுக்கமுடியும். அதுவரைதற்போது செயற்படுவது போல தொடர்ந்து இருக்க முடியும்.

இரண்டுவெசாக்போயாதினங்களில்அரசைக்கவிழ்ப்பதாக சிலர் கூறினார்கள். அவர்கள் நிர்ணயித்த தினங்கள் நிறைவடைந்துவிட்டன. அதனைக்கூறிய அந்தநபர், குறைந்தபட்சம் வடமேல் மாகாண சபையில் அவரது தவிசாளரைக்கூட காப்பாற்றமுடியாமற்போய்விட்டது. வேண்டுமென்றால்மேலும் வெசாக், போயாதினங்களை உருவாக்கிக்கொடுக்கமுடியும். இயலுமானால்அரசைக்கவிழ்த்துக்காட்டுமாறுசவால்விடுக்கின்றேன் - என்றார். (வ-5)



யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்த இலங்கைக்கான அமெரிக்கத்தூதரகத்தின் அரசியல்விவகாரங்களுக்கானபிரதிநிதி மயிலிட்டித்துறைமுகத்துக்குச் சென்று அங்குள்ள மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்தார். (வ-5)

## யாழ்ப்பாணம்வந்த அமெ. பிரதிநிதி கூட்டமைப்புஎம்.பிக்களுடன்சந்திப்பு

*புதிய அரசமைப்புப்பற்றிவிரிவாகக்கேட்டறிந்தார்*

யாழ்ப்பாணம், ஓக. 1

புதிய அரசமைப்புத் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்நாடாளுமன்றஉறுப்பினர்களிடம் விரிவாகக்கேட்டறிந்தார் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் விவகாரப் பிரிதிநிதி றொபேர்ட் ஹில்டன்.

அமெரிக்கத்தூதரகத்தின்அரசியல்விவகாரபிரதிநிதிறொபேர்ட் ஹில்டன் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். யாழ்ப்பாணம்ஜெட்விங் விடுதியில்தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து தற்போதைய நிலவரம் தொடர்பில் அவர் கேட்டறிந்தார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ. சுமந்திரன், சி.சிறிதரன், இ. சாள்ஸ்நிர்மலநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

புதியஅரசமைப்பில்தற்போதையநிலவரம் தொடர்பில்அதிக அக்கறைகாட்டிஅதுதொடர்பானவிவரங்களைதமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரிடம் அமெரிக்கத் தூதரகத்தின் பிரதிநிதி கேட்டறிந்தார். வடக்கு கிழக்குப் பகுதியில் தற்போதுள்ள நிலைமைகள்தொடர்பாகவும்அவரிடம்நாடாளுமன்றஉறுப்பினர்கள் எடுத்துரைத்தனர்.

தீர்வின்றித் தொடரும் காணமறபோனோரின் உறவுகளின் போராட்டம், கேப்பாபுலவு, இரணைதீவு மக்களின் போராட்டங்கள், அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்டவை தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் அமெரிக்கப் பிரதிநிதியிடம் தெரிவித்தனர். (வ-101)

## பெற்றோலிய உத்தியோகத்தர் மீது பிடியாணை

கொழும்பு, ஓக. 1

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்க ஆர்ப்பாட்டத்தின் போது கைதாகிப் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்ட 16 பேருக்கு நீதிமன்றம் நேற்றுப் பிடியாணை பிறப்பித்துள்ளது. (வ-5)



யாழ். நுழைவாயில் (கேற்வே) லயன் கழகத்தின் (மாவட்டம் 306 பி 1) 2017/2018 நடப்பு ஆண்டுக்கான நிர்வாகப் பதவியேற்பு நிகழ்வு கடந்த 23ஆம் திகதி நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராக மாவட்ட முதலாவது [illegible] கலந்து கொண்டார். நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. [illegible] வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு நாவற்குழியில் உள்ள லயன் கழகத்தின் அலுவலக முன்றலில் நடைபெற்றது. (ற)

## வழிப் பிள்ளையார் ஆலய சிலையைக் காணவில்லை

ஹற்றன், ஓக. 1

தலவாக்கலை பெரிய மல்லிகைப்பூ தோட்டத்தின் வழிப்பிள்ளையார் ஆலயத்தின் பிள்ளையார் சிலை திருடப்பட்டுள்ளது. நேற்றுக் காலை ஆலயத்துக்குச் சென்ற பிரதேச மக்கள் சிலர் சிலை திருடப்பட்டிருந்ததை அறிந்தனர். ஆலய நிர்வாகத்தினர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். இந்த ஆலயத்தில் இது மூன்றாவது திருட்டுச் சம்பவம் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சுப் பதவி சுமையாகவுள்ளது

## சக உறுப்பினர்களிடம் அனந்தி ஆதங்கம்

யாழ்ப்பாணம், ஓக. 1
அமைச்சுப்பதவிசுமையாகஇருப்பதாகவும், எந்த நேரமும் அலைபேசிக்கு அழைப்புக்கள்வந்துகொண்டிருப்பதாகவும் புதிதாக அமைச்சுப் பதவியேற்ற திருமதி அனந்தி சசிதரன் சக மாகாண சபைஉறுப்பினர்களிடம்தெரிவித்துள்ளார்.
வடக்கு மாகாண சபையின் அமர்வு அண்மையில் இடம்பெற்றது. இதன் போதே, தனது மனப்பாரங்களை சக உறுப்பினர்களிடம் அவர் பகிர்ந்து கொண்டுள்ளார்.
அமைச்சுப்பதவிஏற்றதிலிருந்துதொடர்ச்சியாக அலைபேசி அழைப்புக்கள்வந்து கொண்டிருப்பதாகவும், முன்னாள் போராளிகள் உள்ளிட்ட பலர் தொடர்ச்சியாக உதவிகள் கோருவதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். அமைச்சுப் பதவி கடும் சுமையாக இருப்பதாகவும் அவர் கருத்துப் பகிர்ந்துள்ளார்.
அதற்கு சக உறுப்பினர்கள், அவரை உற்சாகப்படுத்தும் வகையில் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.
வடக்கு மாகாண சபையில் அமைச்சர்கள் இருவரை பதவி நீக்க வேண்டும் என்று, முதலமைச்சர் நியமித்த விசாரணைக் குழு பரிந்துரைத்திருந்தது. இதனைத் தொடர்ந்து அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன் மற்றும் த.குருகுலராசாஆகியோர்பதவிவிலகியிருந்தனர். அந்த வெற்றிடத்துக்கு திருமதி அனந்தி சசிதரன்மற்றும்க.சர்வேஸ்வரன்ஆகிய இருவரும் நியமிக்கப்பட்டி ருந்தனர். இவர்கள் அமைச்சுப் பதவிகளை ஏற்று ஒரு மாதமே கடந்துள்ளது.
(வ-5)

## தென்மராட்சிப்பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டம் நாளை

தென்மராட்சி, ஓக1
தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மதியம் 2 மணிக்கு பிரதேசசெயலக மண்டபத்தில் இணைந்த தலைவர்கள் தலைமையில் நடைபெறும் என்று பிரதேச செயலாளர் திருமதி.தே.பாபு அறிவித்துள்ளார்.
பிரதேச, அரச, அரச சார் பற்றநிறுவனங்களுக்கும்; பொது அமைப்புக்களும் கூட்டத்தில்கலந்துகொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.
பத்து மாதங்களின் பின்னர் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-9)

## இளவாலை ஹென்றியரசரில் மாடிக் கட்டடத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், ஓக. 1
இளவாலை ஹென்றியரசர் கல்லூரியில் 2 மாடி வகுப்பறைக் கட்டடத் தொகுதிஅமைக்கப்படவுள்ளது என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.
இந்தியஉதவித்திட்டத்தின் ஊடாக இது அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது. இந்திய கொன்சிலர் மற்றும் வடக்கு மாகாணகல்விஅமைச்சர் ஆகியோர் அடிக்கல் நடவுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.
(4,ரி)

## ஊடகத்துறை மாணவன் சுலக்சனின் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஓக. 1
10 வருடங்களுக்கு முன்னர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக மாணவன் சகாதேவன் நிலக்சனின் நினைவேந்தல் இன்று இடம்பெறவுள்ளது.
நிகழ்வு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சபாலிங்கம் அரங்கில் பி.ப. 4 மணிக்கு நடைபெறவுள்ளது. இளம் ஊடகவியலாளனும் தமிழ்ப் பற்றாளனும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனுமான நிலக்சன் 2007 ஆம் ஆண்டு துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார். கொக்குவில் ஆடியபாதம் சாலையில் உள்ள அவரது வீட்டுக்குள் புகுந்த ஆயுததாரிகள் துப்பாக்கிச்சூடு நடத்தியிருந்தனர்.
இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மருத்துவர் வே.சாரங்கன் வரவேற்புரையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கு.குருபரன் தலைமையுரையும் நிகழ்த்துவர். சிறந்த ஊடகவியல்துறை மாணவனுக்கான சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்க அறிவிப்பும், ஏற்பும் இடம்பெறும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி கலாநிதி மு.சுதாகர்சிறப்புரையையும், முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் மற்றும்மக்கள்வங்கிமுகாமையாளர் ஆ.சத்தியமூர்த்தி ஆகியோர் நினைவுரைகளையும் நிகழ்த்துவர்.
தற்காலச் சூழலில் தமிழ் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்ற தலைப்பிலான நினைவுப் பேருரையை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முதுநிலைவிரிவுரையாளரும் ஊடக கற்கைகள் அலகு இணைப்பாளருமான எஸ்.ரகுராம் நிகழ்த்துவார். ஊடகவியலாளர் அ.யசீகரன் நன்றியுரையாற்றுவார். (4,5)

## எருதிடல் மாணவர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டது

சாவகச்சேரி ஓக. 1
சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கைதடி எருதிடல் அ.த.க.பாடசாலையில் கற்கும் மாணவர்களுக்கு சத்துணவுகளை மாதாந்தம் வழங்கவுள்ளனர் என்று கழகத் தலைவர் லயன் யு.எஸ். றெமின்டஸ் தெரிவித்தார். பாடசாலை அதிபர் விடுத்த வேண்டுகோளையடுத்து கழக உறுப்பினர்களின் பங்களிப்புடன் மாதாந்தம் சத்துணவு வழங்கப்படவுள்ளது. ஜூலை மாதத்துக்குரிய சத்துணவுப் பொருள் கள் அடங்கிய பொதிகள் அண்மையில்அதிபரிடம்கையளிக்கப்பட்டன. சத்துணவுப் பொதி கள் வழங்கப்பட்ட தினத்தன்று மாணவர் களுக்கு கற்றல் உபகரணங்களும்வழங்கப்பட்டனஎன்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4,9)

## ஊர்காவற்றுறை பெண் கொலை: சந்தேகநபர்களுக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஓக.1
யாழ். ஊர்காவற்றுறையில் கர்ப்பிணியான ஹம்சிகா படுகொலை செய்யப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.
இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிவான் மன்றத்தில் பதில் நீதிவான் ஆர். சபேசன் முன்னிலையில் நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டது.
இரு சந்தேகநபர்களையும் எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.
யாழ். ஊர்காவற்றுறையில் கடந்த ஜனவரி மாதம் 24ஆம் திகதி கர்ப்பிணியான ஹம்சிகா வீட்டில் தனிமையில் இருந்த போது படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.
(ற)

## தரிப்பிடமில்லாத இடத்தில் பேருந்தை நிறுத்திய சாரதிக்கு ரூ.5000 தண்டம்

யாழ்ப்பாணம்,ஓக. 1
பேருந்து தரிப்பிடம் இல்லாத இடத்தில் பேருந்தை நிறுத்திப் பயணிகளை ஏற்றிய சாரதிக்கு 5ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது நீதிமன்று.
இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. குற்றஞ்சாட்டப்பட்டவர் தன்மீதான குற்றத்தை ஏற்றுக்கொண்டார். 5ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (4,12)

## சாதாரணதர மாணவருக்கு வடக்கில் இலவச செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஓக. 1
வடக்கு மாகாணத்தில் இந்த வருடம் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவசச் செயலமர்வு எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.
இந்தச்செயலமர்வு எதிர்வரும் 18 ஆம் திகதி வரை மூத்த சட்டத்தரணி வேலாயுதன் தேவசேனாதிபதியின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளது.
எதிர்வரும் 10ஆம் திகதி வேலணை பிரதேச செயலகத்தில் காலை 8.30 தொடக்கம் பி.ப 3 மணிவரையும் மறுநாள் 11 ஆம் திகதி வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரியில் காலை 8.30தொடக்கம்பி.ப3மணிவரையும் 12 ஆம் திகதி யாழ்ப்பாண வீரசிங்கம் மண்டபத்தில் (பெண்களுக்கு மட்டும்) காலை 8 மணி தொடக்கம்பி.ப3மணி வரையும், 13 ஆம் திகதி யாழ்ப்பாண வீரசிங்கம் மண்டபத்தில் (ஆண்களுக்கு மட்டும்) காலை 8 மணி தொடக்கம்பி.ப3மணிவரையும், 14ஆம்திகதி யாழ்ப்பாண வீரசிங்கம் மண்டபத்தில் (இருபாலாருக்கும்) மு.ப 8 மணி தொடக்கம் பி.ப 3மணி வரை யும், 15 ஆம்திகதி உருத்திரபுரம்மகாவித்தியாலயத்தில் மு.ப 8.30 தொடக்கம்பி.ப 3 மணிவரையும், 16ஆம்திகதிகற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் காலை 8.30 தொடக்கம் பி.ப 3 மணிவரையும் 17 ஆம் திகதி மன்னார் நகரசபை மண்டபத்தில் காலை 8.30தொடக்கம்பி.ப3மணிவரையும் 18ஆம்திகதிவவுனியாநகரசபைமண்டபத்தில் காலை 8.30 தொடக்கம் பி.ப 3 மணிவரையும்நடைபெறவுள்ளது.
இந்தக்கருத்தரங்கில்கணிதபாடகருத்தமர்வைச் சட்டத்தரணி LLB வே.தேவசேனாதிபதி, கே.வசந் தன், எஸ்.மணிமாறன், எம். லிங்கேஸ்வரன் ஆகியோர் வழங்குவர்.
விஞ்ஞானபாடத்தைவே.சுந்தரேஸ்வரன், யாழ்ப்பாணம் பொது சுகாதார பரிசோதகர் ஏ.பிரேம் குமாரும், தமிழ் வரலாறு ஆகிய பாடங்களை எஸ் நடராஜா, கே.திவாகர் ஆகியோரும் ஆங்கில பாடத்தை எஸ்.சங்கீதா, இளைப்பாறிய பல்கலைக்கழக உதவிப்பதிவாளர்எஸ்.இராஜராஜேஸ்வரன் ஆகியோரும்வழங்கவுள்ளனர்.
ஜீ.சீ.ஈ. சாதாரணதர வகுப்பு மாணவர்களுக்கான கடந்தகால வினாவிடைத் தொகுப்புக்கள் கொண்ட புத்தகம் உட்பட4புத்தகங்கள்இலவசமாகவழங்கப்படவுள்ளன.
பிரதி அமைப்பாளர்களாக க.சக்திதரன் -0778429649, பே.இளமுருகன் - 0779073593, எஸ்.ஐங்கரன்- 0777157779, ஏ.முருகானந் தன்- 0718561252 ஆகியோர் செயற்படுகின்றனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.
(4)

## உலக காசநோய் தினம் இன்று யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஓக.1
உலக காசரோக தின நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
யாழ்ப்பாண மாவட்ட மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.
நிகழ்வுக்கு மதிப்புறு விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் என். வேதநாயகன், மற்றும் கொழும்பு சுகாதார அமைச்சின் மார்புநோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் காந்தி ஆரியரத்னவும் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர். சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.திருவாகரன் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஏ. கேதீஸ்வரன். கொழும்பு சுகாதார அமைச்சின் மார்புநோய்க் கட்டுப்பாட்டுத் தேசிய வேலைத்திட்ட பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் எம்.சி.ஏ.எம்.றைபேஸ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி மருத்துவர் எஸ்.ரவிராஜ், யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் மருத்துவர் பி.சத்தியமூர்த்தி, மற்றும் மருத்துவத்துறைசார் உயரதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். என அறிவிக்கப்பட்டது. (21)

## பாதசாரிக் கடவையில் வாகனத்தை நிறுத்தாத சாரதிக்கு ரூ.5000 தண்டம்

யாழ்ப்பாணம், ஓக. 1
பாதசாரிக் கடவையில் வாகனத்தை நிறுத்தாமல் சென்றவருக்கு 5ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது நீதிமன்று. இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றுக்குக் கொண்டு வரப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவர் தன் மீதான குற்றத்தை ஏற்றுக்கொண்டார். அதனையடுத்து அவருக்கு 5ஆயிரம் ரூபா தண்டம் விதி க்கப்பட்டது. (4,12)

## குருத்துவப்பணி வெள்ளி விழா

யாழ்ப்பாணம், ஓக.1
ஊர்காவற்றுறை அந்தோனியார்கல்லூரியின்அதிபர் வணபிதா க.ஜேம்ஸ் சிங்கராயரின் குருத்துவ பணி வெள்ளிவிழா நிகழ்வுகள் நாளை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் முதன்மை மண்டபத்தில்இடம்பெறவுள்ளது.
ஊர்காவற்றுறை அந்தோனியார் ஆலயத்தில்நாளை காலை 8.30 மணிக்கு இடம்பெறும்திருப்பலிநிகழ்வுகளைத் தொடர்ந்து கல்லூரியின் பிரதி அதிபர் அ. துஷ்யந்தன்தலைமையில் குருத்துவ பணியின் வெள்ளிவிழா இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது. (21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம்,ஒக.1

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நிறுவுநர் தினமும், பரிசளிப்பு விழாவும் இன்று காலை 7.30 மணிக்கு சென்பீற்றர் தேவாலயத்தில் வழமைபோன்று ஆராதனை நிகழ்வாக நடைபெறவுள்ளது. என அறிவிக்கப்பட்டது.

இன்று பி.ப 3.30மணிக்கு பரிசளிப்பு நிகழ்வுகள் பாடசாலை அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவரும் பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவருமான பாலசிங்கம் பிரகலாதன் கலந்துகொள்ளவுள்ளார், எனவும் அறிவிக்கப்பட்டது.

# வட்டார முறையிலான உள்ளூராட்சித் தேர்தல்: துடிப்பான இளைஞர்களை தெரிவுசெய்யுங்கள்

## நாடாளுமன்ற உறுப்பினர். ஈ. சரவணபவன்

கரணவாய், ஒக.1

எதிர் வரும் காலங்களில் வட்டார முறையிலான உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெறவுள்ளது. உங்கள் அபிவிருத்தியில் முன்னின்று செயற் படக்கூடிய துடிப்பானவர்களைத் தெரிவு செய்யவேண்டிய தேவை உங்ளுக்கு உள்ளது. எனவே ஒவ்வொரு இளைஞர்களும் அரசியல் பற்றித் தெரிந்து வைத்திருக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.



வடமராட்சி குஞ்சர்கடை கொலின்ஸ்விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கழகத்தலைவர் ஜே.ஜெயச்சந்திரன் தலைமையில், வடமராட்சி பிறீமியர் லீக் கால்ப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்ட நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக்கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: இன்றைய நாள் பொன்னான நாளாகும். பெருமளவான இளைஞர்கள் ஒன்று கூடியுள்ளீர்கள். இளைஞர்களாகிய நீங்கள் எதிர்கால அபிவிருத்தி கருதி அரசியலில் பங்கு கொள்ள முன்வர வேண்டும். இன்று எமது பிரதேசங்களில் இடம்பெறுகின்ற பல்வேறு பட்ட எதிர்ப்பு மற்றும் ஆதரவுப் பேரணிகளில் கலந்து கொண்டு உரிமைக்குரல் கொடுத்து வருகின்றீர்கள். அந்த வகையில் இளைஞர்களின் அரசியல் பிரவேசம் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகக் காணப்படுகின்றது. நாடாளுமன்றத்தில் 25 வீதம் பெண்களுக்கு ஒதுக்கப்படுமென சட்டம்கொண்டுவரப்பட்டது போல ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் 25 வீதம் இளைஞர்களுக்கு ஒதுக்க வேண்டும் என விரைவில் சட்டம் கொண்டுவரப்படவுள்ளது. அவ்வாறு சட்டம் வரும் போது இளைஞர்கள் அரசியலில் பங்கேற்று எமது பிரதேசங்களை அபிவிருத்தி செய்யவேண்டும் - என்றார். (21.108)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி சிவக்கொழுந்து வேலாயுதம்

செட்டிதறை வீதி, நெல்லியடி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து வேலாயுதம் கடந்த (29.07.2017) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரேசு வேலாயுதத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வயிரமுத்து - பாறுவதி தம்பதியரின் அன்பு மகளும் Dr.சுதாகர் (கனடா), பா.சுதர்சினி, சுரேஷ் (லண்டன்), சுவேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கந்தசாமி, பாக்கியம் ஆகியோரின் அன்புச்சகோதரியும்சோபியா (கனடா), பாலவடிவேலன், தயாமதி (லண்டன்), சரண்யா ஆகியோரின் அன்பு மாமியும் தக்ஷி, விஷாலி, கீரன், ஷாஜிரா, சந்தோஷ், ஷாரூஸ், ஷக்ஷி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.08.2017) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.9.30 மணிக்கு ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.-

தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி வசந்தி பூபாலசிங்கம்



இணுவில் கிழக்கு, கொக்கன் வளவைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசந்தி பூபாலசிங்கம் (29.07.2017) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானசுந்தரம் மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர் களான மகா லிங்கம் - கணேசமணி தம்பதியரின் மருமகளும் பூபாலசிங்கத்தின் அன்புமனைவியும் பிரியந்தி, அபிராமி, கபிலன் ஆகியோரின் அன்புத்தாயும் மகேஸ்வரன், ராணிமலர், வத்சலா, மகேந்திரன், சுதாகரன் ஆகியோரின் சகோதரியும் நாகேஸ்வரி, நாகேந்திரம், சந்திரசேகரம், புஸ்பராணி, ஜோதிமலர் காலஞ்சென்ற சுவர்னா மற்றும் சாந்தரூபி, ஜெகதீசன், காந்தரூபன், நாகவேல் நாயகி, பதுமநிதி, சிவகௌரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (03.08.2017) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொக்கன்வளவு,
இணுவில் கிழக்கு. 077 752 1081

தகவல்:
கணவர் மற்றும்
குடும்பத்தினர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்....

### எனது...

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஹிங்குராங்கொடை வலயக் கல்வி அலுவலக புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத் தலைகளின் எண்ணிக்கையை மாற்றி ஆட்சியை கைப்பற்றுவதற்கு எவர் கனவு கண்டாலும், அதற்கு எனது விருப்பத்தையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதை அனைவரும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். நாடாளுமன்றத்தில் 113 ஆசனங்களைப் பெற்றபின்னர் அரசும், அரச தலைவரும் முடிவடைந்து விடுவார்களென எதிர்க்கட்சி உறுப்பினர்களும், முன்னாள் அமைச்சர்களும் தேசிய பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளனர். 113 ஆசனங்களைப் பெற்றாலும் அரசமைப்புக்கு அமைய எவரும் எனது ஆசீர்வாதம் இன்றிப் புதிய அரசை அமைக்க முடியாது.

நாட்டின் முன்னேற்றத்துக்கான தடைகளை அகற்றி, தற்போதைய அரசு நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும்போது, வெற்றுக் கோசமிடுவோர் நாட்டில் பல்வேறு குழப்ப நிலையை ஏற்படுத்துகின்றனர்.

நல்ல விடயங்களில் ஈடுபடுவோருக்காக அன்றி, வெற்றுக் கோசமிடுபவர்களுக்கே இன்று சில ஊடகங்களில் இடம் வழங்கப்படுகின்றது. அதன் காரணமாக நாட்டில் சிலர் அரசு தொடர்பில் தவறான புரிதலை ஏற்படுத்தியுள்ளனர். ஊழல், மோசடி, வீண்விரயம் மற்றும் குடும்ப ஆதிக்கத்தை விதைத்து, அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்திய நாட்டின் பயணத்தை மாற்றி, நாட்டில் சுதந்திரம் மற்றும் சனநாயகத்தைப் பாதுகாத்து சிறந்த நாட்டை உருவாக்குவதற்குக் கிராமத்திலிருந்து வந்த தலைவர் என்ற வகையில் எனது தலைமையில் தற்போதைய அரசு முன்னெடுக்கும் செயற்பாடுகளைப் பொறுத்துக் கொள்ள முடியாத சிலர் கோசமிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

தவறு செய்வோருக்கு நாட்டில் இருப்பு இல்லை. பௌத்த புண்ணிய பூமியான இந்த நாட்டில் நியாயமான சமூகத்தை நோக்கிப் பயணிப்பவர்கள் மட்டுமே நிலைத்திருக்க முடியும் என்றார். (த-5)

### தமிழ்...

வளர்மதி சனசமூக நிலையத்தின் 52ஆவது நிறைவு விழாவும் கல்விக் கழகப் பரிசளிப்பு நிகழ்வும் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றைய அரசியல் நிலை தொடர்பாகப் பொதுமக்களுக்குப் பெரிய குழப்பங்களும் தெளிவற்ற நிலைகளும் உருவாகியிருப்பதை நாம் நன்றாக உணர்ந்திருக்கின்றோம். தமிழர்களின் கூட்டு அரசியலில் பிரிவினைகள் உருவாகியுள்ளன. [illegible] மோதல்கள் நடைபெறுகின்றன என்று பல்வேறு செய்திகளை மிகைப்படுத்தியும் திரித்தும் பொதுசன ஊடகங்களும் குறிப்பாக வடபகுதியில் இருந்து வெளிவரக்கூடிய சில தமிழ்ப் பத்திரிகைகளும் செய்திகளை வெளியிட்டு வருவதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

ஐக்கிய இலங்கைக்குள் கூடுதல் அதிகாரங்களுடனான வடக்கு கிழக்குப் பிராந்தியச் சுயாட்சி உரிமையைக் கொண்ட ஒரு அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இவ்வாறான அடிப்படை எதுவும் அற்ற பிழையான செய்திகள் மக்களைக் குழப்பக்கூடும். கட்சிகளுக்கிடையே, தலைவர்களுக்கிடையே, அங்கத்தவர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் உருவாவது தவிர்க்க முடியாதவை. ஆனால் அவற்றைப் பேசித் தீர்க்க முடியும். வேறுபாடுகளை மிகைப்படுத்திப் பத்திரிகைகளை விற்க எத்தனிப்பது அந்தந்தப் பத்திரிகைகளின் சுய நலத்தையே பிரதிபலிக்கின்றன. பத்திரிகைச் செய்திகளை வாசிக்கும்போது இது சரியாக இருக்குமா என்ற இயற்கையான கேள்வியையும் உங்கள் மனதில் ஏற்றுவிட்டீர்களானால் உண்மையைக் காலாகாலத்தில் அறிந்துகொள்ள அது வழிவகுக்கும். அண்மையில் கனேடியத் தமிழ் ஊடகவியலாளர் ஒருவர் வெளியிட்ட உண்மைக்குப் புறம்பான கருத்துக்கள் அங்குள்ள சட்டத்தரணிகளால் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளன.

பிரிவினை என்பது எம்மைப் பலவீனமாக்குவதுடன் கொழும்பு அரசில் உள்ளவர்களுக்கு அவல் கிடைத்த கதையாக மாற்றிவிடும். எனவேதான் நான் பல கூட்டங்களில் இது பற்றி உரையாற்றுகின்றேன். கூட்டமைப்பு என்ற எமது அரசியல் பலம் மழுங்கடிக்கப்படக்கூடாது. ஆனால் அதேசமயம் அதன் மூத்த தலைவர்களின் வழிகாட்டல் தமிழ் மக்களின் பாரம்பரிய எதிர்பார்ப்புக்களுக்கு அமைவாக எம்மை நெறிப்படுத்துவதாக அமையவேண்டும். அப்போதுதான் எமது ஒன்றுபட்ட கோரிக்கைகள் கொழும்பு அர சாலும் பன்னாட்டு அரங்காலும் உற்று நோக்கப்படும் - என்றார். (த-5)

### மக்களின்...

என எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற தேசிய நல்லிணக்க நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உண்மையான சமாதானம் ஏற்படவேண்டுமெனில் மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும். ஆட்சிமுறைகள் மக்களின் சம்மதத்துடனும் இணக்கத்துடனும் நடைபெறவில்லை. இதன் காரணமாகவே நாம் இன்று அனைத்துக் கட்சிகளினதும் முக்கியமாக மக்களின் சம்மதத்துடன் இந்தப் புதிய அரசமைப்பை ஏற்படுத்த முனைகின்றோம்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெறுவதுடன் மக்களது அங்கீகாரத்துடன் புதிய அரசமைப்பை வெற்றிபெறச் செய்வதன் மூலம் நாட்டில் நிரந்தரமானதும் உறுதியானதுமான அமைதியை அடைய முடியும் -என்றார். (த-4.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாண சபை உறுப்பினர்களுக்கு அலுவலக செலவாக ரூபா 50 ஆயிரம்

## ஆளுநரிடம் ஒப்புதலுக்காக முன்வைப்பு

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 1
வடக்குமாகாணசபைஉறுப்பினர்களுக்கு அலுவலகப் பணிகளுக்கான கொடுப்பனவு வழங்குவது தொடர்பான ஆவணம் வடக்கு மாகாண ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்று அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:
அனைத்து மாகாண சபை உறுப்பினர்களுக்கும் அலைபேசிக் கொடுப்பனவாக மாதாந்தம் 25 ஆயிரம் ரூபாவும் அலுவலகப் பணிகளுக்கான கொடுப்பனவாக 50 ஆயிரம் ரூபாவும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.
வடமேல் மற்றும் தென் மாகாண சபைகளின் உறுப்பினர்களுக்குத் தற்போதுஅலைபேசிக்கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுவருகின்றது.
அதேபோலவடக்குமாகாணசபை உறுப்பினர்களுக்கும் அலைபேசிக்கொடுப்பனவாகமாதாந்தம்25 ஆயிரம்ரூபாவழங்கப்படுகிறது.
நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமாதாந்தம்வழங்கப்படும் சம்பளத்தின்அரைவாசித்தொகை மாகாண சபை உறுப்பினர்களுக்கு மாதாந்தம் சம்பளமாக வழங்கப்படுகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்சம்பளம்மற்றும்கொடுப்பனவுகளின்தொகையின்அரைவாசித் தொகை மாகாண சபையின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் வழங்கப்பட வேண்டுமென்ற சட்டத்தின் கீழ் இத்தகைய கொடுப்பனவு வழங்கப்படுகிறது.
அதனைவிடமாகாணசபைஉறுப்பிர்களுக்குப் போக்குவரத்துக் கொடுப்பனவுகளும் வழங்கப்படுகின்றன. சபையில் ஒவ்வொரு அமர்விலும் பங்குபற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த உறுப்பினர்களுக்குப் போக்குவரத்துச் செலவாக 3 ஆயிரம்ரூபாவும்பிறமாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு 7 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படுகிறது- என்றார்.
மாகாணசபை உறுப்பினர்களின் அலுவலகப் பணிகளை நடத்திச் செல்ல 50 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கத் தீர்மானிக்கப்பட்டு விட்டது.
ஆனால்அது இன்னும்வழங்கப்படவில்லை என்று சிலர் மாகாண சபைஉறுப்பினர்கள்கூறியிருந்த நிலையில் ஆளுநரின் ஒப்புதலுக்காக அது அனுப்பப்பட்டுள்ளது.
(4,8)

# காளான் செய்கையாளர்கள் 50 பேருக்கு ரூ.ஒரு லட்சம் ஊக்குவிப்பு நிதி

## விவசாயத்திணைக்களம் வழங்கவுள்ளது

அச்சுவேலி, ஒக. 1
வடக்கு மாகாணத்தில் காளான் செய்கையில் ஈடுபடவிரும்பும் பயனாளிகள் 50 பேருக்குக் காளான் செய்கைக்கான கொட்டில் அமைப்பதற்காகத் தலா ஒரு லட்சம் ரூபா மானிய உதவி வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களில் இருந்தும் தலா 10 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு இந்த மானிய உதவி வழங்கப்படவுள்ளது என்று வடக்கு மாகாண விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் எஸ். சிவகுமார் தெரிவித்தார்.
"வடக்கு மாகாண விவசாய அபிவிருத்திக்கு வழங்கப்பட்டுள்ள குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி மூலமாக இந்த வருடம் மாவட்ட நிதியிலிருந்தே இந்த ஊக்குவிப்பு உதவி வழங்கப்படவுள்ளது.
வடக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட் 50 பயனாளிகளுக்குக் காளான் செய்கைக்கான கொட்டில் அமைப்பதற்குத் தலா ஒரு லட்சம் ரூபா வீதம் மானிய உதவி வழங்கப்படவுள்ளது.
மிகுதியை பயனாளிகள் செலுத்தி காளான் கொட்டிலை அமைக்க வேண்டும்.
கடந்த வருடம் 150 பயனாளிகளுக்குத் தலா 40 ஆயிரம் ரூபா வீதம் மானிய உதவிவழங்கப்பட்டது" என்று அவர் மேலும் தெரிவித்தார்.
(4,11)



# 5ஆம் திருவிழா

## முருகனிடம் முறையீடு

வேண்டும் வரமீந்து வாழும் வழிபோந்து
விளங்குகின்ற திருநல்லை முருகா
தீண்டு தமிழ்ப்பாவின் திகழ்ப் பொருளாயாகி
தெளிஞான உரைசொன்ன நாதா
ஆண்டுபலவாக அழகு மிளிர்வாக
அகிலத்தில் திகழ்கின்ற தேவே
மூண்டு வரும் பகையின் மூலமது தகர்க்கும்
முருகா நீ கூறு இது முறையா?

கட்டியொரு காவி வேட்டியவர் வாயில்
கந்தனுனைப் பாடும் சில ஆண்கள்
பட்டையணி நெற்றி முத்து மணி மாலை
பற்றியுனைப் போற்றும் சில பக்தையர்
இட்டமுடன் சேர்ந்து அரகர வைக் கூறி
இலக்கின்றிப் போகும் இளங்காளைக் கூட்டம்
முட்டி மிக மோதி முன்னேறிப்போகும்
மூர்க்கத்தைத் தணிப்பாயோ முருகா?

அழகு மயிலேறி அதிசயங்கள் காட்டும்
அழகாவுன் திருமேனி காண
உலக முழுதிருந்தும் ஊர்பலவுமிருந்தும்
ஓடிவரும் அடியார்கள் ஏங்க
தொலைபேசி தலையே தூக்கியவர் முன்னால்
தொங்கித்தம் படபக்தி காட்டி
உழல்கின்ற அடியார் தனை நோக்கி நீயும்
ஒரு நாளும் திரும்பாதே முருகா

தோற்றிட்ட வளமை தினம் வாட்டும் வெம்மை
துளிர்விட்டு தழைக்கின்ற வன்மம்
பார்த்திட்ட போது முன் பதிநாடும் பக்தர்
பணிந்தேற்றி மனந்தேறிப் போவார்
போற்றி செய் குமரா புறஞ் சொல்லவில்லை
பொறுப்பவர் முதுகேறி போவாரோ சூரர்?
ஆர்ந்தெழும் உன்முன் அசுரர்கள் வேண்டாம் நல்
அடியார்கள் புடைசூழ அருள் வீசி வா வா!

■ *அனலையூர் சேந்தன்.*

### காணி பற்றிய பிணக்குகளை இன்றிலிருந்து நடுவர் சபை ஏற்கும்

யாழ்ப்பாணம், ஒக. 1
யாழ்ப்பாண மாவட்டத்தின் 15பிரதேசசெயலாளர்பிரிவுகளுக்கும் உட்பட்ட வகையில் காணி சம்பந்தமான பிணக்குகளை சிறப்பு நடுவர் சபை இன்று முதலாம் திகதி தொடக்கம் ஏற்றுக் கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டது.
காணிசிறப்புநடுவர் சபைக்கான ஆலோசகராக சட்டத்தரணி எம்.திருநாவுக்கரசு செயற்படுவார்.
இதன் ஒருங்கிணைப்பாளராக நடுவர் சபைப் பயிற்றுநர்எம்.சனாதனன்செயற்படுவார். சிறப்புநடுவர் சபை இன்றுதொடக்கம்செயற்படுவதற்கானஆவணங்களை நடுவர்சபைஆணைக்குழு யாழ்ப்பாண மாவட்ட நடுவர் சபைக்கு அனுப்பி வைக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.
இதேவேளை, கிளிநொச்சி காணி சிறப்பு நடுவர் சபையை ஆரம்பிக்க நீதி அமைச்சும் நிதி அமைச்சும் நடுவர் சபை ஆணைக்குழுவும் முழு நடவடிக்கை எடுத்தவருகின்றது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.
(4,50)

# ஆசையும் பேராசையும் இருந்தால்தான் வாழ்க்கையில் நாம் முன்னேற முடியும்

## இந்திய கொன்சியூலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 1
"இந்தியாபொருளாதார அபிவிருத்தியில் மிக உச்சத்தில் இருந்தாலும், அது போதாதுஎன்றேஇன்றும்நினைத்துக் கொள்கிறது. ஆசையும், பேராசையும் இருந்தால் மாத்திரமே வாழ்க்கையில் முன்னேற முடியும்"
இவ்வாறு யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் தூதரக கொன்சியூலர் ஆ.நடாராஜன் தெரிவித்தார்.
கொழும்பு பி.எம்.ஐ.சி.எச் இல் நாளை மறுதினம் 3 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதிவரைநடைபெறவுள்ளபிளாஸ்ரிக் மற்றும் றபர் உற்பத்திகள் கண்காட்சி தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண நகர விருந்தினர் விடுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
அதில் இந்திய பிளாஸ்ரிக் மற்றும் றபர் தொழிலதிபர் சுவாமிநாதன் மற்றும் யாழ்ப்பாணமாவட்டத்தில்உள்ளவர்த்தகர்கள் கலந்துகொண்டிருந்தனர்.
இந்திய கொன்சியூலர் மேலும் தெரிவித்ததாவது:
இந்திய- இலங்கை உறவு எப்போதும் மேலோங்கிவளரவேண்டும். இந்தியா பெரிய நாடாக இருக்கலாம். இந்தியாவின் பொருளாதார அபிவிருத்தி மிக வேகமாக இருக்கின்றது. ஆசையும், பேராசையும் இருக்க வேண்டும். அப்போது தான் வாழ்க்கையில் முன்னேற முடியும்.
நாடு முன்னேற முடியும். எவ்வளவு தான் வேகமான பொருளாதார அபிவிருத்தி இருந்தாலும், இன்றும் கூட பல விடயங்களில்போதாது என்று உணர்கின்றோம். உதாரணத்துக்குக் கல்வி விடயத்தை எடுத்துக் கொள்ளலாம். பல்லாயிரக்கணக்கானபாடசாலைகள் உள்ளன. ஆயிரக்கணக்கான கல்லூரிகளும், ஆயிரக்கணக்கான பல்கலைக்கழகங்களும்உள்ளன. ஆனால், பெற்றோர்கள்தமதுபிள்ளைக்கு இடம் கிடைக்க வில்லை என்று குறை கூறிக் கொண்டே இருக்கின்றார்கள்.
எவ்வளவுதான்அபிவிருத்தி இருந்தும் கூட போதாது என்றே நினைக்கின்றோம். பக்கத்து வீட்டுக்காரர் நல்லா இருந்தால்தான்நானும்நல்லா இருக்க முடியும். அந்தவகையில், இந்தியாவும் அப்படித்தான் உணர்கின்றது.
இந்தியாவின் அண்டை நாடுகள் மற்றும்நட்புநாடுகள்அனைத்துத்துறைகளிலும், பொருளாதாரத்திலும் அபிவிருத்திஅடையவேண்டும். அந்தவளர்ச்சிக்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.
தெற்காசிய கண்டத்தில் எமது நாடுகள் வளமானநாடுகளாகஉருவாகவேண் [illegible] எமதுமுயற்சிகள்தவறலாம். முயற்சிக்கத்தவறக்கூடாது - என்றார். (4,106)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வடக்கு பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய மாணவர்கள் மீளவும் இணைக்கப்பட்டனர்

## மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்களம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 1
வடக்கு மாகாணத்தில் இந்தவருடம் பாடசாலைக் கல்வியில் இருந்து இடைவிலகிய சிறுவர்கள் அனைவரும் மீளவும் பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ளனர் என்று மாகாண சிறுவர்கள் நன்னடத்தைப் பராமரிப்புத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணப் பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய மாணவர்கள் அனைவரும் பாடசாலைகளில் மீள இணைக்கப்பட்டுவிட்டனர். அதனால் அந்தச் செயற்பாடுகள் நிறைவடைந்துள்ளன. இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை நடப்பு வருடத்தில் குறைவடைந்துள்ளதனை அவதானிக்க முடிகிறது.

வடக்கு மாகாணத்தில் பல்வேறு காரணங்களால் சிறுவர்கள் பாடசாலைக் கல்வியை இழக்கும் அல்லது இடைவிலகும் செயற்பாடுகள் நடைபெற்றன. பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், வறுமை, ஆரம்பக் கல்வியின் தேவை பற்றி அறியாமை, இடப்பெயர்வு, பாதுகாவலரின் அக்கறையின்மை போன்ற பல்வேறு காரணங்களால் சிறுவர்கள் தமது பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தி யுள்ளனர்.

மாவட்டங்களில் உள்ள சிறுவர்கள் சார்ந்த திணைக்களங்களைக் கொண்டு கல்வியை இடைநிறுத்திய சிறுவர்களின் தரவுகள் சேகரிக்கப்பட்டன. பாடசாலை நிர்வாகத்தினருடன் கலந்துரையாடி அவர்கள் மீளவும் கல்வியைத் தொடர்வதற்கான வழிவகைகள் செய்யப்பட்டன.

அதன்படி குறித்த சிறுவர்கள் மீளவும் பாடசாலைக்கல்வியில் இணைக்கப்பட்டனர்.

பிள்ளைப் பராய கல்வி தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளில் பாடசாலைகளிலிருந்து இடைவிலகினார்கள் என்று நடப்பு வருடத்தில் 20 சிறுவர்களும், கடந்த வருடம் 158 சிறுவர்களும் தேடிக் கண்டறிந்து மீளவும் பாடசாலைகளில் இணைக்கப்பட்டனர்.

வடக்கு மாகாணத்தில் 2016ஆம் ஆண்டு காலப்பகுதியில் 158 சிறுவர்கள் தமது பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் 54 சிறுவர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 22 சிறுவர்களும், மன்னார் மாவட்டத்தில் 13 சிறுவர்களும், வவுனியா மாவட்டத்தில் 36 சிறுவர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 33 சிறுவர்களும் பாடசாலைக் கல்வியில் இருந்து இடை விலகிச் சென்றுள்ளனர்.

நடப்பு வருடத்தில் இது வரை 20 சிறுவர்கள் மாத்திரமே பாடசாலைக்கல்வியை இடைநிறுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 3 சிறுவர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 சிறுவர்களும், வவுனியா மாவட்டத்தில் 5 சிறுவர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 10 சிறுவர்களும் பாடசாலைக் கல்வியில் இருந்து இடை விலகிச் சென்றுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் நடப்பு வருடத்தில் எந்தவொரு சிறுவர்களும் பாடசாலைக்கல்வியை இடை நிறுத்தவில்லை -என்றனர். (4. ரி)

# வடக்கு கல்வி அமைச்சுக்கு மேலதிகமாக ரூ.30 மில்லியன்

யாழ்ப்பாணம், ஒக. 1
வடக்கு மாகாணத்தில் புதிதாக நியமனம் வழங்கப்பட்ட ஆசிரியர்களுக்கு மாதச் சம்பளம் வழங்கவும் மேலதிக கொடுப்பனவுகளுக்காகவும் கொழும்பு அரசிடமிருந்து 30 மில்லியன் ரூபா நிதி கிடைக்கவுள்ளதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக படிப்படியாக நடவடிக்கை எடுத்துவருகிறோம். நடப்பு வருடத்தில் இதுவரை 785 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 724 ஆசிரியர்கள் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். மிகுதிப் பேர் இதுவரை கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை.

கடமைகளைப் பொறுப்பேற்ற ஆசிரியர்களுக்கு மாதச் சம்பளம் தற்போது எம்மிடம் உள்ள நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. அதற்கு மேலதிகமாக 30 மில்லியன் ரூபா தேவைப்படுகிறது.

அந்த நிதியை வழங்குமாறு கொழும்பு கல்வி அமைச்சிடம் கோரியுள்ளோம். அதனை விரைவில் தருவதாக அமைச்சு அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர்- என்றார். (4.ரி)

சுகாதாரத்துறை சாரதிகளை

# ஊழியர்கள் வகைக்குள் உள்ளீர்ப்பது குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், ஒக. 1
சுகாதார அமைச்சில் பணிபுரியும் சாரதிகளைச் சுகாதார அமைச்சின் பணியாளர்கள் வகைக்குள் உள்வாங்குவதில் சிக்கல்கள் உள்ளதாக கொழும்பு சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

இது தொடர்பில் மாகாண அமைச்சு அதிகாரிகளால் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

சுகாதார அமைச்சில் சாரதிகளாகப் பணி புரியும் பணியாளர்கள் தம்மை சுகாதார அமைச்சின் ஊழியர்களாக வரையறுக்க வேண்டும் என்று கோரிவருகின்றனர். அந்தக் கோரிக்கை கொழும்பு சுகாதார அமைச்சுக்கு சாரதிகள் சங்கம் மூலமாக முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பில் கொழும்பில் சுகாதார அமைச்சு அதிகாரிகளுடனும் அமைச்சர் ராஜித சேனாரத்னவுடனும் அண்மையில் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. சுகாதார அமைச்சில் பல்வேறு திணைக்களம் மற்றும் அலுவலகங்களில் சாரதிகளாகப் பலர் பணி புரிந்து வருகின்றனர். அவர்கள் இதுவரையில் ஒரு சங்கத்தின் கீழ் செயற்பட்டு வருகின்றனர்.

குறித்த சாரதிகளை உள்வாங்க வேண்டும் என்ற சாதகமான பதில் முதலில் கிடைக்கப்பெற்றது.

ஆனால் ஒவ்வொரு மாகாண சபையும் தனித்தனியே கொள்கைகளைக் கொண்டுள்ளன.

அதனால் குறித்த சாரதிகளை உள்வாங்குவதில் பொதுவான முடிவு எடுக்க முடியாதுள்ளது.

இது தொடர்பான சாதகமான முடிவுகள் அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது- என்றார். (4.ரி)

# நிலத்தில் ஊற்றப்படும் பனங் கள்ளை வேறு வகையில் பயன்படுத்தவேண்டும்

## மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் யோசனை

யாழ்ப்பாணம்.ஒக. 1
"வீணாக ஊற்றப்படும் கள்ளை வேறு விதத்தில் பயன்படுத்த முன்வரவேண்டும். அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு மாகாணப் பனை அபிவிருத்திச் சபையினர் நல்லூர் கிட்டு பூங்காவில் ஏற்பாடு செய்த கண்காட்சியின் இறுதி நாள் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

அதில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர் தாயகத்தில் இருக்கக்கூடிய வளங்களில் மிகப்பெரிய வளம் பனை மரம். போர்க்கால சுழலில் இலட்சக்கணக்கான பனை மரங்கள் தறிக்கப்பட்டு இராணுவத் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இருக்கின்ற பனையை வைத்துக் கொண்டாவது அபிவிருத்தி செய்யலாம் என்றால் போதிய நிதி இல்லை.

கூட்டுறவுச் சங்கங்களால் கள் நிலத்தில் ஊற்றப்படுகின்ற நிலமை காணப்படுகிறது. அது தொடர்பில் கூட்டுறவு அமைச்சர் அனந்தி சசிதரனிடமும் முதலமைச்சரிடமும் நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம்.

கள்ளு உற்பத்தியைத் தகரப் பேணியில் அல்லது போத்தலில் அடைப்பதற்கு ஒரு இலட்சம் ரூபா வரியாக அறிவிடப்படுகின்றது. பனை அபிவிருத்தியை ஊக்குவிக்க வேண்டும். திக்கம் வடிசாலையைச் சீரமைக்க வேண்டும்.

சுற்றுலாத் துறையிலுள்ளோர் பனை உற்பத்தியை அதிகம் விரும்புகின்றார்கள். நாங்கள் பனை அபிவிருத்தியை ஊக்குவிக்கப் பல வழிகளைக் கொண்டு வரவேண்டும். கூட்டுறவுத் துறையை ஊக்குவிப்பதன் ஊடாக பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

பனை வளம், கடல் வளம், விவசாய வளம் ஆகியன எம்மால் பாவிக்கப்படுமாக இருந்தால் எங்கள் மக்கள் தன்னிறைவை அடைய முடியும். புகையிலைச் செய்கையைக் கைவிட்டு வருமானம் தரக்கூடியதான மாற்றுப்பயிரைக் கொண்டு வரவேண்டும்-என்றார். (4,12)

# கூட்டணியைச் சீரமைக்க திங்களன்று பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக. 1
தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சீரமைக்கும்பொருட்டு அந்தக் கட்சியின் வருடாந்த பொதுக் குழுக் கூட்டம் எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அந்தக் கட்சி தெரிவித்தது.

இது தொடர்பில் கூட்டணி அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

தமிழ் மக்களுக்கு ஒரு சரியான தலைமை தேவைப்படுகின்றது. அந்தவகையில் தமிழர் விடுதலைக் கூட்டணி களத்தில் இறங்கிச் செயற்பட்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்குத் திடசங்கற்பம் பூண்டுள்ளது. பழமையான இந்தக் கட்சியைச் சீரமைப்பதற்குத் திட்ட மிடப்பட்டுள்ளது.

அதன் முதற்கட்டமாக வருடாந்தப் பொதுக் குழுக்கூட்டம் எதிர்வரும் 6ஆம் திகதிமுற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியிலுள்ள கட்சியின் தலைமைச் செயலகத்தில் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து தேசிய மாநாடு மறுநாள் 7ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு, யாழ்ப்பாணம் கல்லூரி சாலையிலுள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்-என்றுள்ளது. (4, 5)

ஏ.எல் பரீட்சாத்திகளுக்கு

# செயலமர்வு நடத்த நாளை முதல் தடா

யாழ்ப்பாணம். ஒக 1
ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு நாளை புதன்கிழமை நள்ளிரவு தொடக்கம் கல்விச் செயலமர்வுகள் மற்றும் பிரத்தியேக வகுப்புக்கள் நடத்தத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இதனை மீறுபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம்தெரிவித்துள்ளது.

குறித்த காலப்பகுதியினுள் முன்னோடிப் பரீட்சை வினாத்தாள் வழங்குதல் மற்றும் மேலதிக வகுப்புக்கள் நடத்துதல் என்பனவற்றுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் பரீட்சை எழுதும் மனநிலையை ஒருநிலைப் படுத்துவதற்காக வருடாந்தம் இவ்வாறு குறிக்கப்பட்டதொரு காலப்பகுதியில் வகுப்புக்கள் மற்றும் செயலமர்வுகளுக்குத் தடை விதிக்கப்படுகிறது குறிப்பிடத்தக்கது. இந்தமுறை குறித்த பரீட்சைக்கு 3 இலட்சம் 15 ஆயிரம் 27 பரீட்சார்த்திகள் தோற்றுவதற்குத் தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் 2 இலட்சம் 37 ஆயிரத்து 943 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், 77 ஆயிரத்து 284 தனிப்பட்ட விண்ணப்பதாரிகளும் தோற்றவுள்ளனர் என்றும் பரீட்சைத் திணைக்களம் மேலும் தெரிவித்தது. (4.ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோரின் சமாதியைப் புனரமைக்க அரச பணத்தைச் செலவிட்டாரா கோத்தா?

## விசாரணையிலிருந்து தப்பிக்க முயற்சி

கொழும்பு, ஓக 1

அம்பாந்தோட்டையில் மெதமுலன டி.ஏ.ராஜபக்ச அருங்காட்சியகம் மற்றும் உருவச் சிலைகளை நிர்மாணிப்பதற்கு அரச பணத்தைத் தவறாகப் பயன்படுத்தியமைக்கு எதிரான வழக்கு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

காணிகளை நிரப்பும் மற்றும் அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனத்தின் நிதியே இவ்வாறு செலவிட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள போதிலும் இதுவரை அவரை வழக்கில் சந்தேகநபராகச் சேர்க்கவில்லை.

தமது பெற்றோரின் சமாதியை நிர்மாணிப்பதற்காக தனது பொறுப்பின் கீழ் இருந்த அரச நிறுவனத்தின் பொதுப்பணத்தில் இருந்து 9கோடி ரூபாவைச் செலவிட்டு, கோத்தபாய ராஜபக்ச பாரதூரமான ஊழலை மேற்கொண்டுள்ளார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும், சட்டமா அதிபர் திணைக்களத்தில் உள்ள மூத்த பெண் சட்டத்தரணி ஒருவர் காரணமாக கோத்தபாய வழக்கில் இருந்து தப்பித்து வருவதாகவும் கூறப்படுகிறது. குற்றச்சாட்டுத் தொடர்பான ஆவணங்களுக்குப் பொறுப்பதாக இருக்கும் இந்தச் சட்டத்தரணி, கோத்தபாய ராஜபக்சவின் கையெழுத்து தெளிவாக இல்லை எனக் குறிப்பிட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (த-ய)

**தேவை**

**நியூ சபரி Bouguets & Gift Center இக்கு வேலையாள் (ஆண்) தேவை**

இல.217, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
077 521 7750

**உடனடியாக வேலையாள் தேவை**

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ள. உழவு இயந்திர சாரதி தேவை. உடனடியாக சமுகமளிக்கக் கூடியவர் தொடர்பு கொள்ளவும்.
077 172 6818

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி ஸ்ரேசன் வீதியில் சாவகச்சேரி நகரசபை பொன்விழா கலாசார மண்டபத்திற்கு மேற்குப்புறமாக (A9 வீதியிலிருந்து 50M தூரத்தில்) நாலு பரப்புக் காணி நல்ல தண்ணீர்க்கிணற்றுடன் விற்பனைக்குண்டு. வீடு, மண்டபம் மற்றும் பெரிய அளவிலான கட்டடங்கள் அமைப்பதற்குகந்தது.
077 416 2296/ 077 670 1521

**ENG/ TAMIL MEDIUM CLASSES**

1 On 1 / Group - Home Visit
Accounting - Gr 10, 11, A/L
English Any Grade.
077 331 6402

**பெயர் மாற்றம்**

பொக்கினியா வளவு இமையாணனைச் சேர்ந்த கனகன் ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து சிவக்கொழுந்து எனப் பெயர் மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்
க.சிவக்கொழுந்து

**நாஹா மருத்துவ நிலையம்**

- கடுமையான கை, கால் விறைப்புடன் கூடிய வாதம்
- நரம்பு தளர்ச்சி, ஆஸ்மா, தீராதசொறி, தீராதநோய் தீர்க்கும் மருந்தியல்

வங்கிமுன்லேன்,சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி (ஜெகபதி வீடு), மானிப்பாய்.
077 321 2740

# மோசடி செய்து காணி விற்பனை; படை அதிகாரி உட்பட 8 பேர் கைது

கொழும்பு, ஓக 1

கொழும்பில் உள்ள 26 கோடி ரூபா பெறுமதியான காணி ஒன்றை போலி ஆவணங்களைத் தயாரித்து விற்பனை செய்ய முயற்சித்தனர் எனக் கூறப்படும் ஓய்வுபெற்ற இராணுவ கப்டன் உட்பட 8 பேரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய முதன்மைச் சந்தேகநபரான இராணுவ கப்டன் கொழும்புக்கு வெளியில் வசித்து வருபவர் எனப் பொலிஸார் கூறினர்.

26 கோடி ரூபா பெறுமதியான காணியை 5 கோடி ரூபாவுக்கு விற்பனை செய்ய முயற்சித்தபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர். (த)

**மணிவிழா நாயகியின் சேவைநலன் பாராட்டு**

திருமதி
**மஞ்சுளாதேவி மகேசன்**
(யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் ஆசிரியை)



**சேவை விவரம்**
- க/புசல்லாவ சரஸ்வதி மத்திய கல்லூரி (12.03.1984 - 30.03.1990)
- யா/ வரணி மத்திய கல்லூரி (01.04.1990 - 26.05.1994)
- யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி (27.05.1994 - 31.07.2017)

வாழ்வும் வாக்கும் செம்மையுற தமிழ்பாடத்திற்கோர் மூதாட்டியாக இருந்து கல்விப் பணிக்கு ஓய்வில்லா சேவையினை வழங்கி இன்று (01.08.2017) செவ்வாய்க்கிழமை ஓய்வுகாணும் எமது கல்லூரியின் மாசற்ற எழுத்தறிவிக்கும் ஆசான் **திருமதி மஞ்சுளாதேவி மகேசன்** (SLTS - 1) அவர்கள் வேம்படி விநாயகனின் அருள்பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டுகாலம் வாழ அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- **கல்லூரிச் சமூகம், யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.**

**முதலாம் ஆண்டு சேவை நிறைவில்**
**றோயல் மெடிக்கல் சென்ரர்**
458, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

**யாழ். போதனா வைத்தியசாலை பழைய OPD முன்பாக விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனையை பெற அழையுங்கள்.**

**றோயல் வைத்திய ஆலோசனைகள் ...**



- காது, மூக்கு தொண்டை [ENT] சத்திரசிகிச்சை நிபுணர்
- நீரிழிவு (சலரோகம்) கோமோர்ன்ஸ் வைத்தியநிபுணர்
- சத்திரசிகிச்சை நிபுணர்
- மூட்டுவாத வைத்திய நிபுணர்
- தோல் வைத்திய நிபுணர்
- பொது வைத்திய நிபுணர்
- குழந்தை வைத்திய நிபுணர்
- மகப்பேற்று வைத்திய நிபுணர்
- நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர்
- சிறுநீரக வைத்திய நிபுணர்
- மார்புநோய் வைத்திய நிபுணர்
- இதய வைத்திய நிபுணர்
- பிளாஸ்ரிக் [Plastic] சத்திரசிகிச்சை நிபுணர்
- பேச்சு மற்றும் மொழி சிகிச்சையாளர்

**தொடர்புகளுக்கு...**
021 720 1587, 021 320 2300, 021 221 [illegible]
royalmedicalcentre458@gmail.com



அம்மாடியோ! மலிவு மலிவு
ஆடித்தள்ளுபடி அதுதான் மலிவு

**வாணி ரெக்ஸ்**

**உங்கள் வாணி ரெக்ஸ் இன் அசத்தலான ஆடித்தள்ளுபடி**



- இந்தியாவில் புதிதாக வந்த ஒன்லைன் சாறி வகைகள்
- சிறுவர், சிறுமியர்க்கான நவீன டிசைன் ஆடைகள்
- திருமண, பூப்புனித நீராட்டு விழா பட்டுச்சாறிகள்
- பாட்டிபுறக், மொடன் புறோக் வகைகள்
- புதியவகை சல்வார், லெகங்கா, மஸ்தானி ஆடைகள்
- ஆண், பெண், அரச, தனியார் ஊழியர்களுக்கான ஒரே நிற ஆடைகள்

**10%-30% வரை விசேட விலைக்கழிவு**

கொள்வனவு செய்யும் பெறுமதிக்கேற்ப அன்பளிப்புக்கள் வழங்கப்படும்

[illegible], பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5578, 021 222 9286

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1095 கோடி ரூபாவைக் கொள்ளையிட்ட தேரர்

## விசாரணை நடத்துமாறு கோரிக்கை

கொழும்பு, ஜீலை31
சுற்றுலாப் பயணிகளுக்கு நுழைவுச் சீட்டுக்களை விற்பனை செய்தன் மூலம் கிடைத்த ஆயிரத்து 95 கோடி ரூபாவை தம்புள்ளை ரன்கிரி விகாரையின் முன்னாள் பொறுப்பாளர் இனாமலுவே சுமங்கள தேரர் கொள்ளையிட்டுள்ளார் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தம்புள்ளை ரன்கிரி விகாரையின் தற்போதைய பொறுப்பாளர் கொடகம மங்கள தேரர் இது குறித்து அமைச்சர் அகில விராஜ்காரியவசத்துக்கு அறிவித்துள்ளார்.

கடந்த 1996ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரை விகாரைக்கு வந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு நுழைவுச் சீட்டுக்களை விற்பனை செய்தன் மூலம் ஆயிரத்து 95 கோடி ரூபா கிடைத்தது.

இதனை முன்னாள் பொறுப்பாளர், மத்திய கலாசார நிதியம், தொல்பொருள் திணைக்களம் மற்றும் தம்புள்ளை விகாரையின் அபிவிருத்தி நிதியம் ஆகியவற்றில் வைப்புச் செய்யவில்லை. மாறாக அதனை அவர் மோசடி செய்துள்ளார் என மங்கள தேரர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த நிதிக் கொள்ளை குறித்து துரிதமாகக் கவனம் செலுத்தி விசாரணைகளை நடத்துமாறும் மங்கள தேரர் அமைச்சரிடம் கடிதம் மூலம் கோரியுள்ளார். (த-ய)

# 6 இலங்கையர் டுபாயில் கைது

## பணம் திருட்டுக் குற்றச்சாட்டில்



கொழும்பு, ஓக. 1
டுபாயில் உள்ள ஒரு பாதுகாப்பு நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் ஆறு இலங்கைப் பணியாளர்கள் திருட்டுக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர். அந்த நிறுவனத்தில் பாதுகாப்பு ஊழியர்களாகப் பணிபுரிந்தவர்கள் மீதே இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

போக்குவரத்தில் ஈடுபட்ட வாகனத்தில் இருந்து அவர்களால் 119 லட்சத்து 8000 தினார் பணம் திருடப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஒரு வர்த்தக நிறுவன்த்தின் பல கிளைகளுக்குச் சொந்தமான பணமே இவ்வாறு திருடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இது குறித்து அந்த நாட்டு ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: திருடப்பட்ட பணத்தின் ஒருதொகையை வைத்திருந்த இரண்டு இலங்கையர்கள், தங்கள் அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி, இலங்கைக் கணக்குக்கு 84,000 தினார் பணத்தை அனுப்பியுள்ளனர்.

அந்த 6 பாதுகாப்பாளர்களும் சேர்ந்து இந்தப் பெரிய பணத் தொகையைத் திருடிய போதிலும் அவர்களில் ஒருவரே அந்தப் பணத்தைப் பாதுகாத்து வந்துள்ளார்.

இந்தப் பணத்தின் மூலம் அவர்கள் ஒரு குடியிருப்பை வாங்கியுள்ளனர். பின்னர் ஒவ்வொருவரும் தலா 160,000 தினார் என்ற வீகிதத்தில் பணத்தைப் பங்கு போட்டுக்கொண்டுள்ளனர். பிரித்துக் கொண்ட பணத்தின் பெரும்பாலான தொகையைப் பணப்பரிமாற்ற நிலையங்கள் மூலம் தங்கள் வீடுகளுக்கு அனுப்ப முடிவு செய்துள்ளனர்.

மே மாதம் 6ஆம் திகதி முதல் 10ஆம் திகதிகளுக்குள் இவை இடம்பெற்றுள்ளன. கைது செய்யப்பட்ட இந்த ஆறு இலங்கைப் பணியாளர்கள் அந்த நாட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். (த-ய)


## மரண அறிவித்தல்

### திருமதி கிருஷ்ணவேணி முத்துக்குமாரசாமி



தோற்றம்:- 14.10.1942 மறைவு 31.07.2017

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணவேணி முத்துக்குமாரசாமி நேற்று (31.07.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும், முத்துக்குமாரசாமியின் அன்பு மனைவியும், ஜெயக்குமாரியின் சகோதரியும், பத்மப்பிரேமளா(சுவிஸ்), குகனேந்திரா (கனடா), குனேந்திரா (முகாமையாளர் - செலான்வங்கி -நெல்லியடி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரகுநாதன் (சுவிஸ்), கல்பனா (கனடா), சிந்துஜா (பிரதேச செயலகம் - பருத்தித்துறை) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரகவி, நிகேஷ், அபிலாஷ், தர்ஷிகி, கித்திக்கா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், யோகசொரூபியின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் குணக்குன்றம், தும்பளை, பருத்தித்துறை என்னும் முகவரியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை கோரியடி முனை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குணக்குன்றம்,
தும்பளை, பருத்தித்துறை.

தகவல்
குனேந்திரா (மகன்)- 077 674 0 469

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 17.09.1950 மறைவு 31.07.2017

எமது அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி த.தேனினி அவர்களின் பாசமிகு தந்தையார்

**வேலுப்பிள்ளை விசுவலிங்கம்**

அவர்களின் பிரிவுத்துயரில் பங்குகொள்ளுவதோடு அன்னாரது ஆத்ம சாந்திக்காவும் பிராத்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும்,
உத்தியோகத்தர்களும்.
பிரதேச செயலகம்.கண்டாவளை

## விழிநீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியர் வி.செந்தூரன் அவர்களின் அன்புத் தந்தை

**வேலுப்பிள்ளை விசுவலிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச்சமூகம்,
யா/ மீசாலை வீரசிங்கம் மத்தியகல்லூரி.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

### திருமதி பாக்கியம் சோமசுந்தரம்



மலர்வு 03.10.1926 உதிர்வு 03.07.2017

02.08.2017

சொல்ல முடியாத துயரோடு வாழ்கின்றோம்
அள்ளி நீதந்த அரவணைப் பெங்கம்மா?
உள்ளத்தில் மகிழ்வில்லை உத்தமி நீயில்லை!
செல்லமாய் கூப்பிட சொந்தமே! நீயில்லை!
நிம்மதியாய் நீதூங்கு நினைவுகள் சாகாது!
எம்மதி நீதானே! எவ்வழி யானாயே!

கடந்த 03.07.2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி திருமதி பாக்கியம் சோமசுந்தரம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (02.08.2017) புதன்கிழமை அதிகாலை 5 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும். வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்த அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
சட்டம்பியார் வளவு (ஸ்ரடி சேக்கிஸ்),
கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை.

## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை விசுவலிங்கம்

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், மீசாலை வடக்கு, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை விசுவலிங்கம் நேற்று (31.07.2017) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், அற்புதமலரின் அன்புக் கணவரும், செந்தூரன் (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி ஆசிரியர்), மயூரன் (மன்னார்/சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி பிரதி அதிபர்), கஜந்தினி (இத்தாலி), ரஜீவ் (கானன்), தேனினீ (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கண்டாவளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சங்கீதா, ஜெனோதினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - மன்னார்), கோகிலறங்கன் (இத்தாலி), செந்தூரி, தன்மானன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிவகாமசுந்தரி, செல்லம்மா (நெதர்லாந்து), காலஞ்சென்றவர்களான கந்தசாமி, வல்லிபுரநாதன் மற்றும் பொன்னுச்சாமி, குமாரசாமி (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நிரூஜா, வரலக் ஷன், மோகனன், ஹரிவர்ஷன், ஆதிசன், ஆதவன், துஷான் ஆகியோரின் பாசமிகு பேரனும், இராசேந்திரம், விக்கேனஸ்வரமூர்த்தி, மனோரஞ்சிதமலர், கலாரஞ்சிதமலர், ஜெயந்திமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2017) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.
077 390 4399

## மரண அறிவித்தல்

### திருமதி மரியம்மா (பாக்கியம்) ஜோக்கீம்பிள்ளை

*(இளைப்பாறிய ஆசிரியை, வட. இந்து மகளிர் கல்லூரி)*



சில்லாலையைப்பிறப்பிடமாகவும்புலோலியை வசிப்பிடமாகவும் தற்போது 77, கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரியம்மா (பாக்கியம்)ஜோக்கீம்பிள்ளை 29.07.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்புப்பிள்ளை ரோசமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை ஜோக்கீம்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை மரியமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் மேரி பேனடேற் விக்டோரியா, அந்தோனிப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை, அன்னம்மா, கவிரியேற்பிள்ளை மற்றும் மற்றில்டா, செலெஸ்டின்பிள்ளை, காலஞ்சென்ற பற்றிக் இம்மானுவேல் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மாலா ஜோவிற்றா, ஜெனிற்றா மாலதி, யூட் மாலினி, ஜொய்சி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற இம்மானுவேல் இராஜநாதன் மற்றும் யூட் டெறி, அல்பிரட் ரோய் ஆகியோரின் மாமியும் வேர்ஜின் கியூரி, அல்ஸ்ரன் பிராங், இனோ டினேஸ், வில்சன் வோர்ச், அலெக்ஸ் கொட்வின், ஜோசுவா, டெபோரா, டஷ்னி, வெரோனிக்கா, சோபியா, நளின் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஜெனிபர் ரேச்செல்லின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (02.08.2017) புதன்கிழமை அவரின் இல்லத்திலிருந்து பிற்பகல் 3.00 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புலோலி புனித சூசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டாரநாயக்க பரம்பரையின் வீட்டு வளவுக்குள் கைக்குண்டு

கொழும்பு, ஓக.1
முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பரம்பரையினருக்குச் சொந்தமான ஹொரகொல்ல வளவிலிருந்து கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.
அத்தனகல்ல ஹொரகொல்ல வளவில் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள், வளவின் மதிலுக்கு அருகில் உள்ள வேலிக்கு பக்கத்தில் இருந்து கைக்குண்டு ஒன்றை மீட்டுள்ளனர் என நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்தனர். ஹொரகொல்ல வளவில் பழைய நூலகம் அமைந்துள்ள பகுதிக்கு அருகில், டெங்கு ஒழிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் குப்பைகளை அள்ளிக் கொண்டிருந்தபோது பொலித்தீன் பையில் போட்டப்பட்ட நிலையில் கைக்குண்டை அவதானித்துள்ளனர். பின்னர் இது குறித்து பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். நீதிமன்றத்திற்கு அறிவித்து கைக்குண்டைச் செயலிழக்கச் செய்ய நடவடிக்கை எடுப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-ய)

# அரிசி இறக்குமதிக்கு விவசாயிகள் எதிர்ப்பு

## போதியளவு கையிருப்பு உள்ளதாக தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 1
அடுத்த வருட ஆரம்பம் வரை உள்நாட்டுத் தேவைக்கான போதியளவு அரிசி கையிருப்பில் உள்ளதாகவும், அதனால் அரிசியை இறக்குமதி செய்யவேண்டிய அவசியமே கிடையாது எனவும் அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் இந்தச் சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணாரத்ன தெரிவித்ததாவது:
அநுராதபுரம், பொலனறுவை மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நெல் அறுவடைக்குத் தயாராகவுள்ளது. அத்துடன், கவுதுல பிரதேசத்தில் 18 ஆயிரம் ஏக்கரிலும் பொலநறுவையில் ஒன்றரை லட்சம் ஏக்கரிலும் அறுவடை நடக்கவுள்ளது. இந்த அறுவடைகள் முடிந்ததும் நாட்டில் கிட்டத்தட்ட 26 மில்லியன் மெற்றிக் தொன் அரிசி கையிருப்பில் இருக்கும்.
இந்த நிலையில், அரசு அரிசியை இறக்குமதி செய்தால் உள்நாட்டு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவர். இந்தக் கையிருப்பின்படி ஒரு கிலோ அரிசியின் மொத்த விலையை 64 ரூபாவாகவும் சில்லறை விலையை 68 ரூபாவாகவும் நிர்வகிக்க முடியும். எனவே, இந்த நிலையில் அரிசியை இறக்குமதி செய்யவேண்டிய அவசியமே கிடையாது - என்றார். (த)

# மைத்திரிபால தலைமையில் தேசியப் பொருளாதார சபை

கொழும்பு, ஓக.1
நாட்டின் பொருளாதாரம் குறித்த அதிமுக்கிய தீர்மானங்களை எடுப்பதற்காக அரச தலைவரின் தலைமையில் தேசிய பொருளாதாரப் பேரவையொன்று அமைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.
இது தொடர்பான பிரேரணையொன்றை அரச தலைவர் கடந்த செவ்வாய்க்கிழமை அமைச்சரவைக்குச் சமர்ப்பித்துள்ளார் எனவும், இந்தப் பேரவையின் ஏனைய உறுப்பினர்களாகத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, நிதியமைச்சர் மங்கள சமரவீர, அரச தலைவரின் செயலர், தலைமை அமைச்சரின் செயலாளர், நிதியமைச்சின் செயலர் மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் ஆகியோர் பணியாற்றுவர் எனவும்; தற்போதுள்ள பொருளாதார முகாமைத்துவக் குழுவுக்கும் உயர்வான இடத்தை இந்தப் பேரவை பெறுமெனவும் தெரியவருகின்றது. (த)

# ஐ.தே.கவின் தாளத்துக்கே ஆடுகிறது சுதந்திரக் கட்சி

## பிரசன்ன ரணதுங்க எம்.பி. சாடல்



கொழும்பு, ஓக. 1
ஐக்கிய தேசியக் கட்சியின் தாளத்துக்கே ஆடுகின்றது சுதந்திரக் கட்சி.
இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.
கம்பகா உடுகம்பொல ரெஜி ரணதுங்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற சிறிலங்கா பொதுசன முன்னணியின் தொகுதி அதிகார சபையை அமைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சுதந்திரக் கட்சி தற்போது மிகவும் கஸ்டமான நிலைமைக்குள் விழுந்துள்ளது.
பண்டாரநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி சுதந்திரக் கட்சியை ஆரம்பித்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகள் நாட்டுக்குப் பொருத்தமற்றது என்ற காரணத்தினாலேயே அவர் அதில் இருந்து விலகி இந்தக் கட்சியை ஆரம்பித்தார்.
ஆனால், தற்போது என்ன நடந்துள்ளது. கட்சியின் தலைவரே எமது அன்புக்குரிய கட்சியை, அன்று பண்டாரநாயக்க கூட நிராகரித்த ஐக்கிய தேசியக் கட்சியின் வாலில் கட்டியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி கூறியதற்கு இணங்கவே இன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி செயற்படுகிறது.
கட்சித் தலைவர்களின் தூரநோக்கற்ற வேலைத் திட்டங்கள் காரணமாகவே நாட்டின் வளங்களை விற்பனை செய்து, தொழிற்சங்க போராட்டங்களை வன்முறையில் அடக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொலைகாரப் பயணத்திற்கு சுதந்திரக் கட்சி பங்காளியாக மாறியுள்ளது - என்றார். (த)

# மகிந்த–மைத்திரி சந்திக்காவிடின் பிளவு நிச்சயம்

## அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, ஓக 1
ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டு அரசில் இருப்பது என்பது, சுதந்திரக் கட்சிக்கு மிகுந்த கடினமாக உள்ளது என சு.கவின் உறுப்பினரும் தொழில் அமைச்சருமான ஜோன் செனவிரட்ன தெரிவித்தார்.
எனவே, சு.கவில், மேலும் பிளவுகளைத் தடுக்கும் வகையில், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுடன் கலந்துரையாடுமாறு, அரச தலைவர் மைத்திரியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.
அரசில், எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரை இருக்குமாறு, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்துள்ளதாகவும், எனினும், அது வரை காத்திருப்பதற்கு சு.கவால் முடியாது என்றும் அவர் கூறினார்.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மகிந்த ராஜபக்சவைச் சந்திக்காவிடின், சு.கவில் நிச்சயம் பிளவு ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (த)



# மலையக மக்களை இழிவுபடுத்தியவர் மீது சட்ட நடவடிக்கை

## பிரதிப் பொலிஸ் மா அதிபர் உறுதி

கொழும்பு, ஓக 1
மலையக மக்களை இழிவாகப் பேசி முகப் புத்தகத்தில் பதிவிட்டவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நுவரெலியா மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கே.டி.ரொகான் டயஸ் உறுதியளித்துள்ளார்.
கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணனுடன் சென்ற குழுவினர் செய்த முறைப்பாட்டையடுத்தே பிரதிப் பொலிஸ் மா அதிபர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.
மேற்படி குழுவில் கொட்டகலை வர்த்தகர் சங்க தலைவர் விஸ்வநாதன் கொட்டகலை சாரதி சங்க உறுப்பினர்கள் மலையக மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் அமைப்பாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (த)

# ரணிலை வெற்றி பெற வைக்க ஐ.தே.க. அமைப்பாளர்களுக்கு தலா 50 இலட்சம் ரூபா பணம்

## பிணை முறி மோசடி மூலம் பெறப்பட்டதே அது என்கிறார் மகிந்தானந்த அழுத்கமகே



கொழும்பு, ஓக. 1
2015 நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்வியைத் தவிர்த்து ரணில் விக்கிரமசிங்கவை தலைமை அமைச்சராக்குவதற்கு அந்தக் கட்சியின் அமைப்பாளர்கள் ஒவ்வொருவருக்கும் 50 லட்சம் ரூபா பணம் வழங்கப்பட்டது என்றும் அந்தப் பணம் மத்திய வங்கிப் பிணை முறி மோசடி மூலம் பெறப்பட்டது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அழுத்கமகே தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தலைமை அமைச்சரின் திருட்டைத் தேடுவதற்காக அரச தலைவர் ஆணைக்குழுவொன்றை அமைத்துள்ள அதிசயம் ஒன்று இந்த நாட்டில்தான் நிகழ்ந்துள்ளது. மத்திய வங்கிப் பிணை முறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக அரச தலைவர் மைத்திரிபால குழுவொன்றை நியமித்துள்ளார். இந்தக் குழு தலைமை அமைச்சரின் திருட்டைத் தேடும் குழுவாகும்.
முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க நாட்டுக்கு நிதி தேவை என்று கூறி மத்திய வங்கி ஊடாகப் பிணை முறி விநியோக மோசடியை மேற்கொண்டார். இந்த மோசடியால் அதிக பணத்தைச் சம்பாதித்த அர்ஜூன் அலோசியஸ் ரவி கருணாநாயக்கவுக்கு மாதம் பத்தாயிரம் டொலர் வாடகையில் வீடு ஒன்றை எடுத்துக் கொடுத்துள்ளார்.
இன்று எல்லோரும் சிக்கிவிட்டனர். ரவியை விசாரணைக் குழுவில் முன்னிலையாகுமாறு கூறினால் அவர் வருவதில்லை. வந்தால் எல்லாவற்றையும் சொல்ல வேண்டி வரும் என்று அவர் அஞ்சுகிறார். 2015 நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்வியைத் தவிர்த்து ர்ணில் விக்கிரமசிங்கவை தலைமை அமைச்சராக்குவதற்கு அந்தக் கட்சியின் அமைப்பாளர்கள் ஒவ்வொருவருக்கும் 50 லட்சம் ரூபா பணம் வழங்கப்பட்டது. அந்தப் பணம் மத்திய வங்கி பிணை முறி மோசடி மூலம் பெறப்பட்டது என்ற உண்மையை அவர் ஆணைக்குழு முன் கூற வேண்டி வரும்.
அது மட்டுமல்ல. ரணில் விக்ரமசிங்க மற்றும் அமைச்சர் மலிக் சமரவிக்ரம ஆகியோர் இந்த ஆணைக்குழுவில் முன்னிலையாக வேண்டி வரும். இன்னும் பல ஊழல், மோசடிகள் வெளி வரும். ஆனால், குற்றவாளிகள் தண்டிக்கப்படுவது என்பது சந்தேகமே-என்றார். (த-3)

# அம்பாந்தோட்டை உடன்பாடு; சீனாவுக்கு முழு திருப்தியில்லை

கொழும்பு, ஓக 1
அம்பாந்தோட்டைத் துறைமுகம் குறித்த உடன்படிக்கையின் சீனா முழு அளவில் திருப்தி அடையவில்லை என சீன அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.
இலங்கையுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை குறித்து இலங்கைக்கான சீனத் தூதரகத்திடம் சீன அரசு கேள்வி எழுப்பியுள்ளது எனவும், பங்குகள் தொடர்பில் சீன அரசு திருப்தி கொள்ளவில்லை எனவும் கூறப்படுகிறது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த அணியினர் மனநோயாளிகள்

## சாடுகிறார் அமைச்சர் பாலித ரங்கே பண்டார



கொழும்பு, ஒக 1

மகிந்த அணி அதிகாரம் இல்லாத காரணத்தினால் மனநிலை பாதிப்புக்கும், வெறிக்கும் உள்ளாகியிருப்பது அண்மையில் தெளிவாகியுள்ளது என ராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

அதியுயர் நாடாளுமன்றத்தில் சபாநாயகரின் ஆசனத்திலும் அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சரின் ஆசனங்களிலும் அமர்ந்து கூட்டு எதிர்க் கட்சியினர் நடத்திய நாடகத்தை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் கூறினார்.

ஆனமடுவையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்தஅணியில் இருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் மனநோயாளிகளா என்பதைப் பரிசோதித்து பார்ப்பது பொருத்தமானது.

அரசு தெளிவான வேலைத்திட்டங்களைச்செயற்படுத்தி வருகிறது. இந்த வேலைத் திட்டங்களுக்கு ஆதரவளிப்பதே நாட்டையும் மக்களையும் நேசிக்கும் அனைவரது கடமையாகும்.

குறைகள் இருந்தால், அதனைச்சுட்டிக்காட்டி ஒத்துழைப்பு வழங்க சந்தர்ப்பம் உள்ளது. எனினும் தற்போது நடப்பது அரசியல் தலைவர்களிடம் இருந்து எதிர்பார்க்கும் விடயங்கள் அல்ல.

உரிய காலத்திற்கு மக்கள் எமக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்கியுள்ள நிலையில், மகிந்த அணியினர் அவசரமாக அரசைக் கவிழ்க்க முயற்சித்து வருகின்றனர். பொய்யான கதைகளைப் பரப்பி மக்களைத் தூண்ட முயற்சித்து வருகின்றனர்.

நாட்டின் காணிகளை மகிந்த அணியில் இருப்பவர்களே கடந்த காலத்தில் விற்பனை செய்தனர். கடன் சுமையில் நாட்டை அழுத்தங்களுக்கும் இவர்களே உள்ளாக்கினர் மக்களை இருள் சூழ்ந்த பாதாளத்திற்கு தள்ளிய இவர்களுக்கு நாட்டைமுன்னேற்றத் தற்போது ஆட்சிக்கு வரவேண்டுமாம்.

பல ஆண்டுகள் ஆட்சியில் இருந்து நாட்டை அழித்தனர். மக்கள் இதனை உணர்ந்து கொண்டனர். மகிந்த உள்ளிட்ட அணியை விரட்டிவிட்டுமைத்திரி ரணிலுக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்கினர். ஆட்சியைப் பொறுப்பேற்ற நாளில் இருந்து மகிந்த அணியினர் எதிர்ப்புகளை முன்னெடுத்து வருகின்றனர் - என்றார். (த)

# துமிந்தவின் பதவியை பறிக்கவே வேண்டாம்

## அவர் சிறந்த இளம் தலைவர் என்கிறார் மகிந்த அமரவீர



கொழும்பு, ஒக. 1

சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவிலிருந்து அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவை நீக்கவேண்டுமென அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளரான இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா வலியுறுத்தியுள்ள நிலையில், அதற்குரிய தேவைப்பாடு இல்லையென அமைச்சர் மகிந்த அமரவீர கூறியுள்ளார்.

துமிந்த திஸாநாயக்க சிறந்த இளம் தலைவராகச் செயற்பட்டு வருகின்றார் என்று சு.கவின் முக்கியஸ்தரான அமைச்சர் மகிந்த அமரவீர மேலும் கூறினார். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் நெருங்கிய சகாக்களுள் ஒருவராகக் கருதப்படும் அமைச்சர் மகிந்த அமரவீர, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளராகவும் செயற்பட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# வாக்கு தவறிவிட்டார் அரச தலைவர் மைத்திரி

## பெற்றோலிய தொழிற்சங்கங்கள் விசனம்

கொழும்பு, ஒக. 1

அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் ஓகஸ்ட் முதலாம் திகதி வரை கைச்சாத்திடப்படமாட்டாது என அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன தங்களுக்கு அளித்த வாக்குறுதியை மீறியுள்ளார் என பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்கச் சம்மேளனம் குற்றஞ்சுமத்தியிருக்கின்றது.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன் தங்களது சம்மேளனத்துடன் கலந்துரையாடப்போவதாக வாக்குறுதி வழங்கிய அரச தலைவர், அவசர அவசரமாக இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றியிருப்பது பெரும் நம்பிக்கைத் துரோகம் எனவும், நாட்டின் தலைவரொருவர் ஒரே வாரத்தில் தான் கொடுத்த வாக்குறுதியை இவ்வாறு மீறியிருப்பது ஜீரணிக்கவே முடியாத விடயம் எனவும் அரச தலைவருக்குக் கடிதம் மூலம் அறிவித்திருப்பதாக சம்மேளனத்தின் அமைப்பாளர் டீ.ஜே.ராஜகருண தெரிவித்தார்.

கடந்த 26ஆம் திகதி தாங்கள் மேற்கொண்ட வேலைநிறுத்தப் போராட்டத்தின்போது அரச தலைவர் மூன்று முக்கிய அமைச்சர்களுடன் தங்களைச் சந்தித்தபோது அளித்த இந்த வாக்குறுதியை நம்பியே தாங்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டதாகவும், எனினும், அவர் தங்களை நன்றாக ஏமாற்றிவிட்டார் எனவும் ராஜகருண விசனம் வெளியிட்டார். (த)

# மக்கள் மீதான கோபமே துறைமுகம் சீனாவுக்கு தாரைவார்க்கக் காரணம்

## அரசைச் சாடுகின்றார் மகிந்த



கொழும்பு, ஒக 1

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை அரசால் நடத்தக்கூடியதாக இருந்தது. அவ்வாறு இல்லையெனில் இந்தத் துறைமுகத்தை மூடியிருக்கலாம். அம்பாந்தோட்டை மக்கள் மீதான கோபம் காரணமாகவே இந்தத் துறை முகத்தைச் சீனாவுக்கு அரசு தாரைவார்த்துள்ளது.

இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீனாவுக்குக் குத்தகைக்கு வழங்கும் ஒப்பந்தம் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அன்று இந்திய இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட மாதத்திலேயே இன்று அம்பாந்தோட்டை துறைமுக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. இது நாட்டுக்கு நல்லதல்ல என்று அவர் மேலும் கூறினார். (த)

# உமாஓயாத் திட்டத்தினால் மண் சரிவு அபாயம் தீவிரம்

## முதற்கட்டமாக 21 குடும்பங்கள் வெளியேற்றம்



கொழும்பு, ஒக 1

உமாஓயாத் திட்டத்தால் மண்சரிவு அபாயம் தோன்றியிருக்கும் இரண்டு கிராமங்களிலிருந்து முதற்கட்டமாக 21 குடும்பங்கள் அப்புறப்படுத்தப்பட்டிருப்பதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

பதுளைமாவட்டத்தின் எல்லைப் பிரதேசத்திலுள்ள அளுத்கம மற்றும் திக்கராவ கிராமங்களிலுள்ள குடும்பங்களே இவ்வாறு அப்புறப்படுத்தப்பட்டுள்ளன எனவும், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய ஆராய்ச்சியின் பின்பே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

தேசிய கட்ட ஆராய்ச்சி நிறுவனத்தின் பதுளை மாவட்ட அதிகாரியும் புவியியலாளருமான கெலும் செனிவிரத்ன இந்தப் பகுதியிலுள்ள ஏராளமான வீடுகளில் வெடிப்புகள் ஏற்பட்டிருப்பதாகவும், இந்த இரண்டு கிராமங்களுக்கும் மேலதிகமாக ஏனைய பகுதிகளிலும் தங்களது ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெறுவதாகவும் தெரிவித்தார்.

முக்கியமாக எல்ல பிரதேசத்திலுள்ள வலஸ்முல்ல, உடபேருவ மற்றும் தந்திரிய ஆகிய கிராமங்களில் மண்சரிவு அபாயம் அதிகமாகக் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (த)

# சகல மாகாணங்களுக்கும் இந்திய அம்புலன்ஸ் சேவை

## விரிவாக்குவதற்கு அரசு முடிவு

கொழும்பு, ஒக . 1

இந்திய அரசின் உதவியுடன் இரண்டு மாகாணங்களில் ஆரம்பிக்கப்பட்ட அவசர நோயாளர் காவு வண்டிச் சேவையை, நாடு முழுவதிலும் விரிவாக்குவதற்கு அரசு முடிவுசெய்துள்ளது.



இந்திய அரசின் நிதி மற்றும் ஆலோசனை, பயிற்சி உதவிகளுடன், கடந்த ஆண்டு அவசர நோயாளர் காவு வண்டிச் சேவை, தென் மற்றும் மேல் மாகாணங்களில் ஆரம்பிக்கப்பட்டது.

இரண்டாவது கட்டமாக இந்தச் சேவை நாடு முழுவதற்கும் விரிவாக்கப்படவுள்ளது என்று பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தச் சேவையை விரிவாக்குவதற்கு 300 நோயாளர் காவு வண்டிகளும், 2000 பணியாளர்களும் தேவைப்படுவதாகவும், அவர் கூறினார்.

முதல் ஆண்டில் இந்தச் சேவைக்கு 322,000 அழைப்புகள் வந்தன என்றும், 32 ஆயிரத்துக்கும் அதிகமான அவசர உதவி தேவைப்படும நோயாளர்களுக்கான உதவிகள் அளிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது, தென் மற்றும் மேல் மாகாணங்களில் இந்தியா வழங்கிய 88 நோயாளர் காவு வண்டிகளில், 550 பணியாளர்கள், 24 மணிநேரமும் இந்தச் சேவையை வழங்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# காஸ் விலை உயரும் அறிகுறி

சமையல் எரிவாயுவின் விலை அடுத்த சில தினங்களில் 200 ரூபாவால் அதிகரிக்கும் அறிகுறி தென்படுவதாக அரசின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிக்க வேண்டுமென லிட்ரோ மற்றும் லாப்ஸ் நிறுவனங்கள் வாழ்க்கைச் செலவு சம்பந்தமான குழுவிடம் விடுத்துள்ள வேண்டுகோள் தற்போது பரிசீலனையில் இருப்பதாகவும், அநேகமாக இன்னும் ஓரிரு தினங்களில் அதுபற்றிய முடிவு எடுக்கப்படலாம் எனவும் அந்த வட்டாரங்கள் கூறின.

உலக சந்தையில் சமையல் எரிவாயுவின் விலை உயர்ந்திருப்பதாலும் டொலரின் மதிப்பு அதிகரித்திருப்பதாலும் இந்த விலையுயர்வைத் தவிர்க்கமுடியாதென இரு நிறுவனங்களும் சுட்டிக்காட்டியிருப்பதாகவும் கூறப்படுகிறது. (த)

# குறைந்த விலை மின் திட்டம் ஆணைக்குழுவால் நிராகரிப்பு

கொழும்பு, ஒக 1.

குறைந்த விலைக்கு நீண்டகால அடிப்படையில் மின்சாரத்தை வழங்குவதற்காக இலங்கை மின்சார சபை சமர்ப்பித்த திட்டத்தை மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு நிராகரித்துள்ளது.

அதேவேளை, அந்த ஆணைக் குழு பரிந்துரைசெய்துள்ள மாற்றுத்திட்டத்தை முற்றாக நிராகரித்துள்ள இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கம், மாற்றுத்திட்டங்களை முன்னெடுக்கமுடியாதெனத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

மின்சார சபை சமர்ப்பிக்கும் திட்டமொன்றுக்கான செலவுகள் ஏற்றுக்கொள்ளக்கூடியவையா என்பதைப்பற்றித் தீர்மானிக்கும் அதிகாரம் மாத்திரமே மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு உள்ளதாகவும், அந்த எல்லையை மீறித்திட்டமொன்றைநிராகரிக்கும் அதிகாரமோ அல்லது மாற்றுத்திட்டங்களை முன்வைக்கும் அதிகாரமோ மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவுக்குக் கிடையாதெனவும் இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கத் தலைவர் சௌம்ய குமாரவடு சுட்டிக்காட்டினார். எனவே, ஆணைக்குழு முன்வைத்திருக்கும் மாற்றுத்திட்டங்களுக்குத் தங்களது ஒத்துழைப்பை ஒருபோதும் வழங்கப்போவதில்லை எனவும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபையில் எம்.பிக்களுக்கு சீனாவின் மடிக்கணினிகள்
## இந்த வாரம் பொருத்தப்படும்

கொழும்பு, ஒக. 1
நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரும், நாடாளுமன்றத்துக்குள் பயன்படுத்துவதற்காக இணைய வசதிகளுடன் கூடிய மடிக்கணினிகள் பொருத்தப்படவுள்ளன.

நாடாளுமன்ற அவையில், இந்த வாரத்தில் இருந்து இணைய வ்சதிகளுடன் இந்த மடிக் கணினிகளைப் பயன்படுத்த முடியும் என்று, நாடாளுமன்ற நிதிப் பணிப்பாளர் ஜெயசாந்த தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அவையில் உள்ள உறுப்பினர்களின் ஆசனங்களில் இந்த மடிக்கணினிகள் பொருத்தப்படும். இதற்காகச் சீனா அன்பளிப்புச் செய்த 265 கணினிகள் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்துக்கு வந்து சேர்ந்தன.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடக்கவுள்ள நாடாளுமன்றத்தின் சிறப்பு அமர்வுக்கு முன்னதாக, இந்தக் கணினிகள் உறுப்பினர்களின் ஆசனங்களுடன் பொருத்தப்படும்.

இது, நாடாளுமன்ற அமர்வுகளின்போது, உறுப்பினர்கள் நீண்ட நேரம் சபையில் அமர்ந்திருப்பதற்கு உதவியாக இருக்கும்.

தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆண்டு முன்னேற்ற அறிக்கைகள், ஆவணங்கள் இறுவட்டாக வழங்கப்படுகின்றன. கணினிகள் பொருத்தப்பட்டதும் அதனைச் சபையில் இருந்தவாறே அவர்கள் பார்த்துக் கொள்ள முடியும். விவாதங்களின்போது பயன்படுத்திக் கொள்ள முடியும்.

இந்த மடிக்கணினிகள் ஒவ்வொன்றும் 140,000 ரூபா பெறுமதியானவை என்றும், சீனாவின் இந்தக் கொடையின் மொத்த மதிப்பு சுமார் 30 மில்லியன் ரூபா என்றும் அவர் மேலும் கூறினார். (த)



## ஜூலையில் வீரகாவியமான மாவீரர்களின் நினைவேந்தல்

கொழும்பு, ஒக.1
கட்டுநாயக்க தாக்குதலில் வீரகாவியமான கரும்புலிகள் மற்றும் ஜூலை மாதம் வீரகாவியமான அனைத்து மாவீரர்களுக்குமான நினைவு நிகழ்வு பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு மாவீரர் பணிமனையின் ஏற்பாட்டில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை லாக்குர்நோவ் பகுதியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஈகச்சுடரை முகமாலைச் சமரில் வீரச்சாவடைந்த 2ஆம் லெப். இசைப்பிரியனின் சகோதரன் ஏற்றி வைத்து மலர் வணக்கம் செலுத்தினார். அகவணக்கத்தைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் சுடர் ஏற்றி மலர் வணக்கம் செலுத்தினர். (தி)

நாடாளுமன்றத்தை அவமதித்த

## மஹிந்த அணி மீது கடும் நடவடிக்கை

கொழும்பு, ஒக. 1
அதியுயர் சபையாகக் கருதப்படும் நாடாளுமன்றத்தை அவமதிக்கும் வகையில் செயற்பட்ட மகிந்த அணி உறுப்பினர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

இதன்படி பொது எதிரணி உறுப்பினர்களுக்கு அதியுச்ச தண்டனையை வழங்குமாறு கோரி ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகருக்குக் கடிதம் அனுப்பவுள்ளனர்.

எரிபொருள் விநியோகத்தை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல்மீது கடந்த வெள்ளியன்று நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது கடும் அமளிதுமளி ஏற்பட்டது.

இதையடுத்து சபை நடவடிக்கைகள் ஒகஸ்ட் 4ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டன.

அதன்பின்னர் "கோரம்' மணியை ஒலிக்கச்செய்து நாடாளுமன்றத்தைக் கூட்டிய மகிந்த அணியினர் சபாநாயகர் ஒருவரையும் நியமித்தது.

அதன்பின்னர் இரண்டு நாடாளுமன்றத்தில் உரையாற்றினர். இந்தச் சந்தர்ப்பத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க அரச தலைவரின் ஆசனத்திலும் அமர்ந்தார்.

அரச தலைவரின் கதிரையில் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் அமர்வதில்லை. அரச தலைவர் சபைக்கு வராவிட்டாலும் அவருக்காகவே அந்தக் கதிரை ஒதுக்கப்பட்டிருக்கும். அத்துடன், சபாநாயகர் கதிரையையும், சபாபீடத்தையும் எவரும் அணுகக்கூடாது. இந்த விடயம் பற்றி அரசமைப்பிலும், நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளிலும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவேதான், சபையை அவமதித்த பொது எதிரணியினருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களால் சபாநாயகரிடம் கோரப்படவுள்ளது. (த)

# அரசை வீழ்த்த மகிந்த அணி சதித் திட்டம்

## அதனை முறியடிக்கவே எரிபொருள் விநியோகம் அத்தியாவசிய சேவையானது என்கிறார் சஜித்

கொழும்பு, ஒக 1
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வரும் சதி நடவடிக்கைகளை முறியடிப்பதற்காகவே எரிபொருள் விநியோகம் அத்தியாவசிய சேவையாக மாற்றப்பட்டுள்ளது என்று அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.



சூரியவெவவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் படையினரை அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரமே பயன்படுத்துகிறோம். ஆனால்,நாம் அவர்களைக் கூலித் தொழிலாளிகள்போல் பயன்படுத்துகிறோம் என்று பசில் ராஜபக்ச குற்றம் சுமத்தியுள்ளார். அவர்களின் ஆட்சியில் படையினர் எவ்வளவு கேவலமாக நடத்தப்பட்டார்கள் என்பதை அவர் மறந்து விட்டார். ஆனால்,நாம் அப்படி நடத்தவில்லை.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வரும் சதி நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. அவற்றுள் ஒன்றுதான் பெற்றோலியத் தொழிற் சங்கங்கள் நடத்திய போராட்டம். அவர்கள் எரிபொருள் விநியோகத்தைத் தடை செய்தனர்.அதை முறியடித்து எரிபொருள் விநியோகத்தை நாம் அத்தியாவசிய சேவையாக மாற்றியுள்ளோம்.

இவ்வாறான அத்தியாவசிய சேவைகளுக்காக மாத்திரமே நாம் படையினரைப் பயன்படுத்துகிறோம்.மக்களுக்குச் சேவைகளை வழங்குவதற்காக மாத்திரமே படையினர் களத்தில் இறக்கிவிடப்படுகின்றனர் என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அதுமாத்திரமன்றி, மகிந்த ராஜபக்சவை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வரும் சதி நடவடிக்கைகளை முறியடிப்பதற்காகவே எரிபொருள் விநியோகம் அத்தியாவசிய சேவையாக மாற்றப்பட்டுள்ளது. - என்றார். (த)

## இலங்கை- சீன உறவால் அச்சத்தில் இந்திய அரசு

கொழும்பு, ஒக. 1
வளர்ந்து வரும் இலங்கை சீன உறவுகள் குறித்து இந்திய நிபுணர்கள் அச்சம் கொண்டுள்ளனர் என்று இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அம்பாந்தோட்டைத்துறைமுகத்தின் 70 வீத உரிமையை 99 ஆண்டுகளுக்கு இலங்கை அரசு சீனாவுக்கு வழங்கியுள்ளமை குறித்து, தேவிரூப மித்ரா என்பவர் எழுதியுள்ள கட்டுரையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

இந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள பாதுகாப்பு உத்தரவாதங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்று இந்தியா நம்புகிறது, எனினும், இந்தத் துன்பகரமான விற்பனை போன்ற நிலை அண்டை நாட்டில் உள்ள ஏனைய திட்டங்களுக்கும் ஏற்படுமோ என்ற அச்சமும் அதற்கு உள்ளது.

அம்பாந்தோட்டைத் துறைமுக ஒப்பந்தத்தை புதுடில்லி வரவேற்கவில்லை. ஆனால், சீனாவின் கடன் பளுவில் இருந்து தப்பிப்பதற்கு, கொழும்புக்கு வேறு நல்ல வழி இல்லை. இதனால், அம்பாந்தோட்டையைச் சீன நிறுவனம் நிர்வகிப்பதை ஏற்றுக் கொள்வதைவிட இந்தியாவுக்கு வேறு தெரிவு இல்லை.

> “அம்பாந்தோட்டைத் துறைமுக ஒப்பந்தத்தை புதுடில்லி வரவேற்கவில்லை. ஆனால், சீனாவின் கடன் பளுவில் இருந்து தப்பிப்பதற்கு, கொழும்புக்கு வேறு நல்ல வழி இல்லை.”

இந்த ஒப்பந்தம் குறித்த பேச்சுக்கள் மற்றும் அதில் பாதுகாப்பு குறித்த சில பிரிவுகளை உட்சேர்ப்பதில், அமெரிக்காவுடன் இந்தியாவும், தொடர்புபட்டிருந்தன என்றும் உறுதிப்படுத்த முடிகிறது.

எந்தவொரு இராணுவச் செயற்பாடுகளையும் இங்கு முன்னெடுப்பதற்கு கடுமையான தடைகள் விதிக்கப்பட்டுள்ளன என்றும் இராணுவச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் முழு உரிமையும் இலங்கைக்கே உள்ளது என்றும் ஒப்பந்த வரைவில் கூறப்பட்டிருந்தது.

துறைமுக பாதுகாப்புச் சேவைகளில் ஈடுபடும் அனைவருமே இலங்கையர்களாக இருக்கவேண்டும் என்ற விதிமுறையும் சேர்க்கப்பட்டுள்ளது என்றுள்ளது. (த)

# மூன்று மாகாண சபைகளின் நிர்வாகம் ஆளுநர் கைகளில்


கொழும்பு, ஒக 1
எதிர்வரும் செப்ரெம்பர் ஒக்ரோபர் மாதங்களில் பதவிக்காலம் முடிவடையவுள்ள கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளின் நிர்வாகம் அடுத்த தேர்தல் [illegible] நிர்வாகத்தில் ஒப்படை[illegible] அரசின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சகல மாகாண சபைத் தேர்தல்களையும் ஒரே தினத்தில் நடத்துவதென கடந்த வாரம் அமைச்சரவை தீர்மானித்திருப்பதால் செப்ரெம்பர் ஒக்ரோபரில் முடிவடையவுள்ள இந்த மூன்று மாகாண சபைகளின் நிர்வாகம் ஒக்ரோபர் முதல் ஆளுநர் களிடம் ஒப்படைக்கப்படலாம் என அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை, மத்திய, வடமேல், வடக்கு மாகாண சபைகளின் பதவிக் காலம் 2019 ஒக்ரோபரிலும், மேல் மற்றும் தென் மாகாண சபைகளின் பதவிக்காலம் 2019 ஏப்ரலிலும், ஊவா மாகாண சபையின் பதவிக்காலம் 2019 செப்ரெம்பரிலும் முடிவடையவுள்ளதால் 2019 ஒக்ரோபர் வரை மாகாண சபைகள் அனைத்துக்குமான தேர்தல் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் இல்லையெனவும் அந்த வட்டாரங்கள் கூறின. (நு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேம்பட்ட 'தாட்'; அமெ. அதிரடி



வொஷிங்டன், ஒக. 1
ஏவுகணைகளை இடைமறித்துத் தாக்கவல்ல 'தாட்' ஏவுகணையின் மேம்பட்ட ரகத்தை அமெரிக்கா நேற்றுமுன்தினம் சோதித்தது.
வடகொரியாவின் ஏவுகணைச் சோதனைகளுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்கா அவ்வப்போது 'தாட்' என்ற இடைமறிப்பு ஏவுகணைகளை சோதித்து வருகிறது. வடகொரியா கடந்த சனிக்கிழமை ஏவுகணையைச் சோதித்தது.
இது அமெரிக்காவின் எந்த மூலையையும் தாக்கும் திறன் பெற்றது என்று சொல்லப்படுகிறது. இதற்குப் பதிலடியாக, தனது நகரும் ஏவுகணைத் தடுப்பு அமைப்பான தாட்டின் மேம்பட்ட ரகத்தை அமெரிக்கா சோதித்தது.
"அமெரிக்க எல்லைக்குள் எந்த ஏவுகணை வந்தாலும் அதை வானில் வைத்து இடைமறித்துத் தாக்கும் ஆற்றல் இதற்கு உண்டு" என்று அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகன் அறிவித்தது. (ம)

## வடகொரியாவில் வட்டமிட்ட அமெரிக்கப் போர் வானூர்தி



சியோல், ஒக. 1
வட கொரியாவின் ஏவுகணைப் பரிசோதனைக்கு பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்காவின் இரண்டு போர் வானூர்திகள் கொரியத் தீபகற்பத்திலும், வடகொரியாவின் எல்லைக்குள்ளாகவும் நேற்று முன்தினம் பறந்துள்ளன.
பன்னாட்டு சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறைகளை மீறி வடகொரியா அவ்வப்போது தொடர்ந்து பல ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகிறது. ஐக்கிய நாடுகள் சபை வடகொரியாவின் முக்கிய வருவாயான நிலக்கரி ஏற்றுமதியை முடக்கியுள்ளது. ஏனைய பல பொருளாதாரத் தடைகளையும் அது விதித்துள்ளது. ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் கூட்டாகவும், ஏனைய நாடுகளும் வடகொரியா மீது பல தடைகளை அடுக்கியுள்ளன. எனினும் வடகொரியாவின் சோதனைகள் தொடர்ந்துகொண்டே உள்ளன.
கொரியப் போரின் 64ஆவது ஆண்டுநிறைவுதினம் கடந்த சனிக்கிழமை வடகொரியாவில் மிகவும் கோலாகமாகக் கொண்டாடப்பட்டது. இதையொட்டி அந்த நாடு ஏவுகளைச் சோதனையை நடத்தலாம் என்று எதிர்பார்க்கப் பட்டது. செய்மதி ஒளிப்படங்களும் இதற்குச் சிறந்த ஆதாரமாக அமைந்தன. எதிர்பார்க்கப்பட்டபடியே அந்த நாடு கண்டம் விட்டுக் கண்டம் பாயும் (மேம்பட்ட ரகம்) ஏவுகணைச் சோதனையை நடத்தியது.
இதுவரை சோதித்த ஏவுகணைகளிலேயே இதுவே மிகவும் அபாயகரமான சோதனை என்று குறிப்பிடப் படுகிறது. தமது ஏவுகணை அமெரிக்காவின் எந்த மூலைமுடுக்கையும் தாக்கும் திறன் பெற்றது என்று வடகொரிய அதிபர் கிம் யோங் உன் குறிப்பிட்டார்.
இந்தச் சோதனைக்கு பதிலடி கொடுக்கும் வகையில் கொரியத் தீபகற்பத்திலும் வடகொரியாவின் கடல் எல்லையிலும் அமெரிக்கப் போர் வானூர்திகள் பறந்துள்ளன.
இந்தப் பறப்புக்கு வடகொரியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இதனால் கொரியத் தீபகற்பத்தில் தற்போது மீண்டும் போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது. (ம)





ஆஸ்திரியாவில் 'உலக உடல்கலை வாரம்' தற்போது நடைபெற்று வருகிறது. 'க்லாயென் போர்ட்' நகரில் பல்லாயிரக் கணக்கான மக்கள் உடலில் பலவர்ண ஓவியங்களை வரைந்து கொண்டு உடல்கலை வாரத்தை சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். ஓவியங்களை வரைவதற்கென்றே நூற்றுக்கணக்கான ஓவியர்கள் 'க்லாயென்போர்ட்' நகரில் முகாமிட்டுள்ளனர். (ம)

## வழக்கு மொழியாகத் தமிழ்: வலியுறுத்தி சீமான் ஆவேசம்



சென்னை, ஒக. 1
"தமிழக உயர்நீதிமன்றங்களில் தமிழை வழக்கு மொழியாக அறிவிக்காவிட்டால் தமிழகமெங்கும் போராட்டம் வெடிக்கும்" இவ்வாறு தெரிவித்தார் 'நாம் தமிழர்' கட்சியின் தலைவர் சீமான்.
உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்கு மொழி ஆக்கக்கோரி மதுரையில் போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது. ஐந்தாம் நாளாக நேற்று நடந்த போராட்டத்தில் 'நாம் தமிழர்' கட்சியின் தலைவர் சீமான் கலந்துகொண்டார். அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"உத்தரபிரதேசம், பீகார், மத்தியபிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் அந்தந்த மாநில மொழிகள், வழக்கு மொழிகளாக உள்ளன. ஆனால் தமிழகத்தில் மட்டும் அத்தகைய நிலை இல்லை. இந்த விடயத்தில் மத்திய, மாநில அரசுகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையெனில் தமிழகம் முழுவதும் போராட்டம் வெடிக்கும்" என அவர் மேலும் குறிப்பிட்டார். (ம)

## ரக்காவில் போர் உக்கிரம்



டமஸ்கஸ், ஒக. 1
சிரியாவின் ரக்கா நகரில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போர் மிகவும் உக்கிரமாக நடைபெற்று வருகிறது. அங்குள்ள மக்கள் பெரும் நெருக்கடியை சந்தித்து வருகின்றனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ரக்காவின் நிலை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை கவலை தெரிவித்தது.
ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் இருந்து ஈராக் விடுபட்டுள்ளது. சிரியாவின் ரக்கா நகர் தற்போதும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியிலேயே உள்ளது. அந்த அமைப்பின் பிடியில் தற்போதுள்ள முக்கியமான நகரும் ரக்காவே. நகரை மீட்கும் போர் தற்போது நடைபெற்று வருகிறது. சுமார் 60 சதவீதமான பகுதிகள் மீட்கப்பட்டு விட்டன. ஏனைய பகுதிகளை மீட்பதற்கான போர் தற்போது நடைபெற்று வருகிறது.
சுமார் இரண்டு லட்சம் மக்களை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தற்போது மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி வர எத்தனிக்கும் வாய்ப்புள்ளது என்பதால், அரச படைகள் ஆரம்பத்தில் சிறிது தயக்கத்தைக் காட்டின. எனினும் தற்போது போர் மீண்டும் உச்சக்கட்டமாக ஆரம்பிக்கப் பட்டுள்ளது. ரக்காவில் மனித குல நெருக்கடி நிலை தோன்றியுள்ளது என்று ஐ.நா. கவலை தெரிவித்துள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# … மாதங்களின் பின் …ழிதீர்த்தது ரஷ்யா

## …மெரிக்காவின் 755 இராஜியப் பணியாளர்களை …டனடியாக வெளியேறுமாறு உத்தரவிட்டார் புடின்

…கோ. ஓக. 1
…வில் தங்கியிருக்கும், …க்க இராஜதந்திரப் பணி…ள் 755 பேரை தமது …டவிட்டு உடனடியாக …யேற வேண்டும் என்று …விட்டார் ரஷ்ய அதிபர் …மிர் புடின்.

…க்காவின் நலனுக்கு எதி…சயற்படுகின்றன. அபாய…ாதாக விளங்குகின்றன. …ிக்காவையும், அதன் …டுகளையும் பலவீனப்ப…த்தனிக்கின்றன உள் …ல குற்றச்சாட்டுக்களை …, ஈரான், வடகொரியா …நாடுகள் மீது காலாகால …ுன்வைத்து வருகிறது. …க்கா.

…ாக அமெரிக்காவில் … ஆண்டு நடந்த அதிபர் …லில், ரஷ்யா நேரடியாக …யிட்டது என்றும், உக் … சிரியா ஆகிய நாடுகளில் … இராணுவத்தின் மூலம் …மிப்புச் செய்தது என்றும்



தெரிவித்து அந்த நாட்டின் மீது பொருளாதார தடைகளை விதித்தார் அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா. தான் பதவி விலகுவதற்கு சில வாரங்களுக்கு முன்னர் ரஷ்யத் தூதரக அதிகாரிகளையும் அவர் வெளியேற்றினார். பதிலுக்கு ரஷ்யாவும் அமெரிக்க தூதரக அதிகாரிகளை வெளியேற்ற திட்மிட்டாலும், ட்ரம்ப் அதிபரானதும் அமெரிக்கா - ரஷ்யா இடையே நல்லுறவு ஏற்படுத்தப்படலாம் என்ற நம்பிக்கையில், தூதரக அதிகாரிகளை வெளியேற்றும் திட்டத்தை ரஷ்ய அதிபர் புடின் தற்காலிகமாகக் கைவிட்டிருந்தார்.

ட்ரம்ப் அதிபரான பிற்பாடும் அமெரிக்கா - ரஷ்யா இடையே நல்லுறவு ஏற்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் அமெரிக்க அதிபர் தேர்தலில் தலையிட்ட விவகாரத்தில் ரஷ்யா மீது கூடுதல் பொருளாதாரத் தடைகளை விதிக்க அமெரிக்க நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இதை நடைமுறைப்படுத்த ட்ரம்ப் அனுமதியளிக்கவுள்ளார் என்று பன்னாட்டு ஊடகங்கள் அண்மையில் செய்தி வெளியிட்டன. எனவே ட்ரம்பின் ஆட்சியிலும் தான் நினைத்த மாற்றம் தெரியாததை அடுத்து 755 இராஜதந்திரப் பணியாளர்களை ரஷ்யாவை விட்டு உடனடியாக வெளியேறுமாறு புடின் உத்தரவிட்டுள்ளார்

சிக்கலில் சிரிய விவகாரம்

ஜேர்மனியின் ஹம்போர்க் நகரில் ஜி20 மாநாடு கடந்த மாதம் நடைபெற்றது. இந்த மாநாட்டில் வைத்து புடினும், ட்ரம்பும் சந்தித்தனர். இந்தச் சந்திப்பை அடுத்து சிரியாவில் நடைபெற்று வந்த உள்நாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. தற்போது இரு நாடுகளுக்கும் இடையே பிளவு ஏற்பட்டுள்ளதால் சிரியாவில் உள்நாட்டுப் போர் மீண்டும் ஆரம்பிக்கப்பட வாய்ப்புள்ளது என்றும் கருதப்படுகிறது. சிரிய அரசுக்கு ரஷ்யாவும், சிரிய அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுவுக்கு ஆதரவாக அமெரிக்காவும் செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)


## அல்ப்ஸில் கண்டெடுக்கப்பட்ட கை 'ஏயார் இந்தியா' பயணியுடையதா?

புதுடெல்லி, ஓக. 1

அல்ப்ஸ் மலையில் கண்டெடுக்கப்பட்ட சிதைந்த கை, 50 ஆண்டுகளுக்கு முன்பு 'ஏயார் இந்தியா' வானூர்தி விபத்தில் உயிரிழந்த பெண் பயணியுடையதாக இருக்கலாம் என்று தகவல் வெளியாகி உள்ளது.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த டானியல் ரோச்சி என்ற தடயவியல் ஆராய்ச்சியாளர், வானூர்தி விபத்துகள் நடந்த இடங்களில் பல ஆண்டுகளாக தேடுதல் நடத்தி வருகிறார். பல தடயங்களையும் கண்டுபிடித்துக் கொடுத்துள்ளார். இந்நிலையில், பிரான்ஸ் நாட்டு பகுதியில் அல்ப்ஸ் பனிமலையில் மிக உயரமான மாண்ட் பிளாங்க் என்ற மலையில் தேடுதல் நடத்தியதில், மனிதர்களின் சிதைந்த உடல் உறுப்புகளை கடந்த வியாழக் கிழமை கண்டெடுத்தார். ஒரு கை, ஒரு கால் என 2 உடல் உறுப்புகளை கண்டெடுத்த டானியல் அவற்றின் ஒளிப்படங்களை கடந்த வெள்ளிக் கிழமை வெளியிட்டார்.

டானியல் தேடுதல் வேட்டை நடத்திய மாண்ட் பிளாங்க் என்ற இடத்தில்தான் கடந்த 1966ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 'எயார் இந்தியா போயிங் வானூர்தி 707' விபத்துக் குள்ளாகி நொறுங்கியது. அதில் சென்ற பிரபல அணு விஞ்ஞானி ஹோமி பாபா உட்பட



117 பயணிகளும் பரிதாபமாக உயிரிழந்தனர். அவர்களில் ஒருவருடைய கையாக இருக்கலாம் என்று டானியல் சந்தேகம் தெரிவித்துள்ளார்.

குறித்த உடல்பாகங்கள் உலங்கு வானூர்தியின் மூலம் ஆராய்ச்சி நிறுவனத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான விவரங்கள் அடுத்த வாரம் வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)


RDB
දෙපයින් නැගිටින ශ්‍රී ලාංකිකයන්ට
தன்னம்பிக்கையுள்ள இலங்கையருக்காக
Empowering Sri Lankans

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
Regional Development Bank

# RDB வங்கி

## பொற் பரிசும், அதியுன்னத விருதும் 2016

மாவட்டம், மாகாணம் மற்றும் தேசிய மட்ட உயர் மட்ட செயற்பாட்டாளர்களைக் கௌரவிக்கும் முகமாக, முயற்சியாண்மை அபிவிருத்தியமைச்சர் கௌரவ ஹபீர் காசிம் அவர்கள் ஆதரவில் நான்காவது தடவையாகவும், 2016 ஆம் ஆண்டுக்கான 'பொற் பரிசும், அதியுன்னத விருது வழங்கலும் ஒழுங்கமைக்கப்பட்டு நடைபெற்றது.

இதில் RDB வங்கியில் 25 ஆண்டுகளுக்கு மேலாக, அர்ப்பணிப்புடன் பெறுமதிமிக்க சேவையாற்றிய பணியாளர்கள் 90 பேருக்கு பொன் விருதுகள் வழங்கப்பட்டன.

அனைத்துச் செயற்பாட்டிலும் ஆகச் சிறந்த கிளைக்கான விருதினை மறிஸ்வத்த கிளை பெற்றுக்கொள்ள, நாடுதழுவிய ரீதியில் 268 கிளைகளில் இரண்டாம், மூன்றாம் இடங்களை முறையே, எம்பிலிப்பிட்டிய மற்றும் கிரிமெத்திளான கிளைகள் பெற்றுக் கொண்டன.

உயர் செயற்பாட்டு மாகாண விருதினை மேல் மாகாணம் பெற்றுக்கொண்ட அதேவேளை, கம்பஹா மாவட்டம், மாவட்ட ரீதியிலான அதியுயர் விருதினைப் பெற்றுக்கொண்டது.

முயற்சியாண்மை அபிவிருத்தியமைச்சர் கௌரவ ஹபீர் காசிம் அவர்கள் பிரதம விருந்தினராகவும், மத்திய வங்கி அதிகாரிகளுடன்., தலைவர் பிரசன்னா பிரேமரத்னா, நிறைவேற்றுப் பணிப்பாளர் பிரியந்த அபேசிங்கவுடன், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், பொது முகாமையாளர் / தலைமை நிறைவேற்று அதிகாரி, ஏ.ஆரியபாலா மற்றும் RDB வங்கி அதிகாரிகள், பணியாளர்கள்,தொழிற்சங்க அதிகாரிகள் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.






Excellence Award 2017.07.16 @ Stain Studio Ratmalana

| இல | வகை | இடம் | கிளை/ மாகாணம், மாவட்டம் |
|---|---|---|---|
| 1 | ஆற்றுகை சிறந்த கிளை | வெற்றியாளர் | மிரிஸ்வத்த |
| 2 | ஆற்றுகை சிறந்த கிளை | இரண்டாமிடம் | எம்பிலிப்பிட்டிய |
| 3 | ஆற்றுகை சிறந்த கிளை | மூன்றாமிடம் | கிரிமெத்தியான |
| 4 | வங்கி ஈட்டத்துக்குக் கூடுதல் பங்களிப்பு | வெற்றியாளர் | மாவரமண்டியா |
| 5 | வங்கி ஈட்டத்துக்குக் கூடுதல் பங்களிப்பு | இரண்டாமிடம் | கிரிமெத்தியான |
| 6 | வங்கி ஈட்டத்துக்குக் கூடுதல் பங்களிப்பு | மூன்றாமிடம் | எம்பிலிப்பிட்டிய |
| 7 | உற்பத்தி ஆற்றுகை | சிறந்த கிளை | மாவரமண்டியா |
| 8 | அறவீட்டு ஆற்றுகை | சிறந்த கிளை | நவகத்தேகம |
| 9 | கடன் செயற்பாடு | சிறந்த கிளை | மிரிஸ்வத்த |
| 10 | வைப்பு செயற்பாடு | சிறந்த கிளை | இரத்தினபுரி |
| 11 | ஆற்றுகை சிறந்த கிளை | சிறந்த கிளை | மேல் மாகாணம் |
| 12 | ஆற்றுகை சிறந்த கிளை | வெற்றியாளர் | கம்பஹா மாவட்டம் |
| 13 | ஆற்றுகை சிறந்த கிளை | இரண்டாமிடம் | குருணாகலை மாவட்டம் |
| 14 | ஆற்றுகை சிறந்த கிளை | மூன்றாமிடம் | களுத்துறை மாவட்டம் |





Key Performance Highlights

- 2016 ஆம் ஆண்டின் சிறந்த கிளை- முதலாமிடம்: மிறிஸ்வத்த.
- 2016 ஆம் ஆண்டின் 2 ஆவது சிறந்த கிளை: எம்பிலிப்பிட்டிய
- 2016 ஆம் ஆண்டின் 3 ஆவது சிறந்த கிளை: கிரிமெத்தியான
- 2016 ஆம் ஆண்டின் மாவட்ட சிறந்த செயற்பாடு: கம்பஹா
- 2016 ஆம் ஆண்டின் மாகாண சிறந்த செயற்பாடு: மேல் மாகாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# நல்ல தெரிவு இன்றி அல்லாடும் மக்கள்

அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தத்தில் கொழும்பு அரசு கையெழுத்திட்டதைத் தொடர்ந்தும், அண்மையில்பெற்றோலியத்துறைஊழியர்கள்வேலைநிறுத்தத்தை அறிவித்ததும் படையினரைக் களமிறக்கி நிலமையைக் கட்டுப்பாட்டில்கொண்டுவரமுயற்சித்ததைஅடுத்தும்அரசு மீதானஎதிர்ப்பலைஎகிறியிருக்கிறது. கிட்டத்தட்ட எல்லா ஊடகங்களும்அரசஎதிர்ப்புச்செய்திகளுக்குமுக்கியத்துவம் கொடுக்கும் நிலமையே இருக்கிறது.

ஊடகங்கள் அரசுக்கு எதிராகச் செயற்படுகின்றன என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் ஏற்கனவே குற்றஞ் சாட்டியிருக்கின்றனர். குழப்பத்தைஏற்படுத்தி ஆட்சியைப் பிடிக்கமுனைவோருக்கு ஆதரவாகவே இவ்வாறு சில ஊடகங்கள் செயற்படுவதாகஅவர்கள்சாடினர். முன்னாள் அரச தலைவர்மகிந்தராஜபக்சவின்கருத்துக்களுக்குஅதிகளவில் இடமளிக்கப்படுவதையேஅவர்கள்அப்படிச்சாடினார்கள் என்பது ஒன்றும் இரகசியமல்ல.

ஆனால், அப்போது வெறும்கருத்து என்றநிலையில்இருந்த அரசஎதிர்ப்பு, ஓர்அலையாகஎழுகின்றநிலமைஇப்போது உருவாகி இருக்கின்றது. தற்போதையகூட்டுஅரசிற்குச்சில வழிகளில்ஆதரவைவழங்கிவரும்ஜே.வி.பி.கூடசைட்டம் உட்படஅரசின்அண்மைக்காலப்போக்குக்குக்கடும்எதிர்ப்பைத்தெரிவித்துவருகின்றது. கூட்டுஅரசுக்குள்ளும்இதனால் பிளவுகளும் பிரச்சினைகளும் அதிகரித்துள்ளன. இதனால் மக்களிடமும் அரசு மீதான எதிர்ப்பு அதிகரித்தே வருகின்றது.

ஆட்சியில் இருக்கும் அரசுகள் மீது மக்கள் விரைவில் அதிருப்திகொள்வதும் ஒவ்வொரு தேர்தலிலும் ஆட்சி மாற்றத்தை விரும்புவதும் தெற்காசியர்களின் பண்பு என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. இவ்வாறான எதிர்ப்பு மனநிலையை தெற்காசிய மக்கள் மத்தியில் ஏற்படுத்திவிடுவது இலகுவானதும்கூட. அத்தகைய பொதுப்போக்கின்விளைவுதான் இது என்று பொதுமைப்படுத்தி இதனைப் ஒதுக்கிவிட முடியாது.

மகிந்தராஜபக்சஆட்சியில்இருந்தபோதுஅவருக்குபெரும் ஆதரவு தெற்கு மக்கள்மத்தியில் இருந்தது. அரசபரம்பரை ஆட்சியை உருவாக்கிவிடுவாரோ என்று அச்சப்படுமளவுக்கு அந்தச் செல்வாக்குப் பெருகி இருந்தது. மீண்டும் மீண்டும்அவரால்ஆட்சியமைக்கமுடிந்தது. அவரது கொடுமைகள், அடாவடித்தனங்கள், முறைகேடுகளைப் பொறுக்கமுடியாதபோதுதான் ,ஒரு தொகுதி மக்கள் மாற்றத்தை வேண்டினார்கள். அதனை நிகழ்த்தியும் காட்டினார்கள்.

அவ்வாறு மாற்றத்தை வேண்டி நின்ற மக்களின் எதிர்பார்ப்பைப்பூர்த்திசெய்யாததன்விளைவேதற்போதையஎதிர்ப்பு. சிறுபான்மை மக்களின் எதிர்பார்ப்புகளையும் இந்த அரசு பூர்த்திசெய்யவில்லை, பெரும்பான்மைமக்களின்எதிர்பார்ப்புகளையும்பூர்த்தி செய்யவில்லைஎன்கிறநிலையில், அரசு மீதான எதிர்ப்பின் நியாயத்தன்மை புரிந்துகொள்ளப் படக்கூடியதே.

இருந்தாலும் இந்த அரசைப் பதவியில் இருந்து அகற்றிவிட்டு மாற்று அரசு ஒன்றை அமைப்பதற்கான வாய்ப்பும் வசதியும் இருக்கிறதா? என்றால் இல்லை என்பதே பதில். எதிர்த் தரப்பில் இருப்பவர்களை ஆதரிப்பது சட்டிக்குள் இருந்து நெருப்புக்குள் விழும் வேலை என்று இருக்கும் போது, பதவியில் இருக்கும் அரசைத் திட்டித் தீர்ப்பதைத் தவிர வேறு வழி மக்களுக்கு இல்லை. இப்போது தெற்கில் நடந்துகொண்டிருப்பது அதுதான். தெரிவு செய்வதற்குச் சிறந்ததொரு தலைமை இல்லாத நிலையில் இருப்பது எவ்வளவு மோசமானாலும் சகித்துச் செல்வதைத் தவிர மக்களுக்கு என்ன வழி?

தெற்கில் மட்டுமல்ல வடக்கு கிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியிலும் இதுவேதான் நிலமை. மோசமானவற்றில் ஒன்றைத் தெரிவு செய்யும் உரிமைதான் மக்கள் முன் இருக்கிறது. தெரிவதற்கான சிறந்த தலைமைகள் இல்லாத போது அழுகிய தக்காளிகளில் எது சிறந்தது என்று தெரிவு செய்யும்உரிமையைமட்டுமேமக்கள்கொண்டிருக்கிறாகள் என்பது தான் காலக்கொடுமை.

# நல்லூர் தாக்குதல்

## பொலிஸார் செயற்பட்ட விதம் ஏற்படுத்தும் சந்தேகங்கள்

மயூரப்பிரியன்

"சுட முடியுமா? என்று கேட்டான்; சுட்டேன் என்பதனை நம்பலாமா?

மதுபோதையில்நின்றவன், ஒருவரை தள்ளி விட்டு அவரின் இடுப்புப் பட்டியில் இருக்கும் துப்பாக்கியைப் பறித்து அதனை முழுவதுமாகத் தன் கட்டுப்பாட்டிற்குள்கொண்டுவர முடியுமா?

அவ்வாறு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தாலும், அதனை இயக்கி (லோட் செய்து) சுடும் வரையில்துப்பாக்கியைப்பறி கொடுத்தவர்என்னசெய்தார்? நிச்சயமாக அவர் வேடிக்கை பார்த்தபடி நின்றிருக்கமாட்டார். ஆக, பலத்த போராட்டத்தின் மத்தியில்தான் துப்பாக்கியைப் பறித்தவர் அதனைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து சுட்டிருக்க வேண்டும். அவ்வாறு மது போதையில்நின்றஒருவரால் போராடமுடியுமா?

மது போதையில் நின்றாலும், தம்மை விடப் பலசாலிகளுடன் (ஆயுததாரிகளுடன்) மோத முனைவார்களா? அப்படியேசென்றாலும், துப்பாக்கியைப் பறிக்கும் அளவுக்குத் துணிவார்களா?

இலக்குக்கு உரியவர் எட்டடி தூரத்தில் நிற்கும்போது இலக்கை நோக்கிச் சரியாகச் சுடத் தெரிந்தவனா இலக்கைத் தீர்மானித்து களத்தில் இறங்கி இருப்பான்? துப்பாக்கியைக் கையாளத் தெரிந்த ஒருவனுக்கு எட்டடி தூரத்தில் நின்ற இலக்கைத் தாக்க முடியாதா?

கையில்சிறு ஆயுதம்கூட இல்லாமல், இலக்கைத் தாக்கத் தீர்மானித்துஎவனாவதுகளத்தில் இறங்குவானா?

### பாதுகாப்புப் படையினர், பொலிஸார் தமது ஆயுதங்களை இழக்க நேர்ந்தால் அதற்குத் தண்டனை உண்டு

பொலிஸ், முப்படைகளைச் சேர்ந்தவர்கள் தமது ஆயுதங்களைப் பறி கொடுத்தாலோ , தொலைத்தாலோஅவர்களுக்கு எதிராக கடுமையான விசாரணைகள், தண்டனைகள் உண்டு. அந்த நிலையில் எவராவது நிராயுதபாணியிடம் தமது ஆயுதங்களை அவ்வளவு இலகுவில் பறி கொடுத்து விடுவார்களா?

அதிதிகளின் பாதுகாப்புக்கு போகின்றவர்கள் பாதுகாப்பு வழங்கும்வேலையை விட்டு விட்டு வேறு வேலை ஏதாவதில் ஈடுபட முடியுமா? உதாரணமாக, அதிதிஒருவரின்வாகனத்திற்கு ஒருவன் கல்லெறிந்து விட்டு ஓடினால், அவனை மெய்ப்பாதுகாவலர் துரத்தி செல்ல முடியுமா?. மெய்ப்பாதுகாவலர் உடனடியாகக் குறித்த அதிதியின் அருகில் சென்று அவரின் பாதுகாப்பைத் தானே உறுதிப் படுத்தவேண்டும். அதிதியைத் தனியேவிட்டுவிட்டு, கல்லால் எறிந்தவனைத் துரத்திச்சென்றால் , அவன் கல்லெறிந்து விட்டு ஓட, மெய் பாதுகாவலர் அவனைத் துரத்திச் செல்ல, பின்னால் ஒருவன் வந்து குறித்த அதிதிக்கு ஆபத்தை ஏற்படுத்தி விட்டு இலகுவாகத் தப்பிவிட முடியும் அல்லவா?

அதிதிகளுக்குப் பாதுகாப்பு வழங்கவெனநியமிக்கப்படும் மெய்பாதுகாவலர்கள் உரிய பயிற்சிகள் இல்லாமலா நியமிக்கப்படுகின்றனர். ஏனெனில் ஒருவர் தனது துப்பாக்கியைப் பறிகொடுக்கின்றார். மற்றவர்எட்டிதூரத்தில்நின்று சுட்டவனைத்திருப்பிச்சுடமுடியாத ஒருவராக இருக்க முடியுமா?

சம்பவம் தொடர்பில் நீதிபதி, பிரதி ப் பொலிஸ் மா அதிபருக்கும், தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரிக்கும் உடனடியாக அறிவித்து இருக்கின்றார். அந்த நிலையில் அதனைப் பொலிஸார் அசமந்தமாக விட்டுள்ளார்களா ? சம்பவ இடத்துக்கு 20க்கும் குறைவான பொலிஸார் தானே வந்து இருந்தார்கள். பெரிய அளவில் அந்த இடத்தில் விசாரணைசெய்யப் பட்டதுஎன்றுதெரியவில்லையே?



### குற்றச் சம்பவத்தின் பின்னர் பொலிஸார் அந்த இடத்தை உடனடியாகத் தமது பாதுகாப்புக்குள் கொண்டு வந்தாக வேண்டும்

தடயவியல்பொலிஸார்வரும் வரையில், குற்றப் பிரதேசத்தை அங்கு முதலில் செல்லும் பொலிஸார் தானே தமது பாதுகாப்புக்குள் கொண்டுவர வேண்டும். ஆனால் பொலிஸார் அதனைச் செய்தனர் என்று தெரியவில்லையே? ஏனெனில் பல வெற்றுச் சன்னக்கூடுகள் வாகனங்கள் மேலால் சென்றதாலும், அப்பகுதியில் நடமாடியவர்கள் கால்களால் மிதித்ததாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேதமடைந்து இருந்தன.
குற்றச் சம்பவம் நடந்த இடத்தில் பலரும் சாதாரணமாக நடமாடித் திரிந்தனர். அதனால் தடயங்கள் அழியக் கூடிய சந்தர்ப்பங்கள் எழுவதுண்டு. அதனை ஏன் பொலிஸார் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தனர்?
பொதுவாகவேபொலிஸ்தரப்பின் விசாரணைகள்தொடர்பில்விமர்சனங்கள் எழுவதுண்டு. அவ்வாறான நிலையில் சம்பவ இடத்தில் சட்டத்தரணிகள் அல்லது நீதித்துறை சார்ந்தவர்கள் நின்று இருந்தால், பொலிஸார் உரிய முறையில் சில விசாரணைகளை முன்னெடுத்து இருந்து இருக்கலாம் என்றொரு கருத்து சிலர் மத்தியில் உண்டு.
சம்பவம் மாலை 5.10 மணியளவில் நடைபெற்றது. நள்ளிரவு12.30மணிக்கே சம்பவ இடத்துக்குபதில்நீதிவான்சென்று சம்பவ இடத்தைப் பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டு இருந்தார். தடயவியல் பொலிஸார் இரவு 8 மணியளவில் சம்பவ இடத்தில் இருந்த தடயப் பொருள்களைஎடுத்துசென்றுவிட்டபின்னர், சம்பவ இடத்தை நீதிவான் பார்வையிட வருகின்றார் என்ற செய்தி வழங்கப்பட்ட பின்னர், இரவு 11 மணியளவில் தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று தடயப் பொருள்கள் மீட்கப்பட்ட இடங்களில் மீள அடையாளப்படுத்தி நீதிவானின் வருகைக்காகக் காத்திருந்தனர்.
சம்பவம் நடைபெற்று ஒன்றரை மணித்தியாலத்துக்குள் சம்பவம் தொடர்பான பூரண விசாரணைகளை நடத்தி முடித்த பின்னரா எஸ்.எஸ்.பி. சூட்டுச் சம்பவத்தில் நீதிபதி இலக்கில்லை என்று கூறினார்? அல்லதுதான்சம்பவத்தைநேரில் பார்த்தேன் எனக்கூறிய பொதுநபரொருவரது பேச்சைக் கேட்டா நீதிபதி இலக்கு இல்லை என கூறினார்?
சாதாரணமாக, திருட்டுவழக்கு, விபத்துக்கள் குறித்துக் கேட்டாலே, தாம் பதில் சொல்ல முடியாது. ஊடகப் பேச்சாளராலேயே பதில் கூற முடியும் என்று கூறும் பொலிஸ் தரப்பு. அன்றைய தினம் சம்பவம்நடைபெற்று ஒன்றரை மணித்தியாலத்துக்குள் நீதிபதி இலக்கு இல்லை என்று எதனை அடிப்படையாகக் கொண்டு கூறியது?

**பல்கலைக்கழக மாணவர் படுகொலை தொடர்பிலும் பொலிஸ்தரப்பு**

கொக்குவில்குளப்பிட்டிச்சந்திக்குஅருகில் கடந்த ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி யாழ்.பல்கலைகழக மாணவர்கள் இருவர்பொலிஸாரின்துப்பாக்கிப்பிரயோகத்துக்கு இலக்காகி உயிரிழந்தனர். அந்தச் சம்பவம்தொடர்பில்காலையில்இருந்தே ஊரவர்களும், பல்கலைகழகமாணவர்களும் பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர் என கூறினார்கள். ஆனால் பொலிஸ் தரப்பு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதனை ஏற்றுக் கொள்ளவில்லை. சம்பவத்தை விபத்தாகக் கூறவே முனைந்தனர். மாலை உயிரிழந்த மாணவர்களின் பிரேத பரிசோதனை அறிக்கையிலையே துப்பாக்கிச்சூட்டுக்காயங்கள்இருந்தமைகண்டறியப்பட்ட பின்னரே, பொலிஸ் தரப்பு துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதனை ஏற்றுக்கொண்டது. சம்பவம் நடந்து சுமார் 18 மணித்தியாலங்களுக்குப் பின்னரே துப்பாக்கி சூடு நடந்தது என்பதைப் பொலிஸார் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் நல்லூர் சம்பவத்தில் ஒன்றரை மணித்தியாலத்தில் பொலிஸார் நீதிபதி இலக்கு இல்லை என்று எதன் அடிப்படையில் கூறினார்கள்?
பளையில் அண்மையில் பொலிஸ் ரோந்துக் கார் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து பெருமளவான இராணுவத்தினர்பொலிஸார், பொலிஸ்விசேடஅதிரடிப்படைஎன்பவை குவிக்கப்பட்டு விசாரணைகளை துரித கெதியில் மேற்கொண்டு தேடுதல்கள் நடத்தப்பட்டன. ஆனால் நல்லூரில் ஏன்



அப்படிநடக்கவில்லை?
சாதாரணமாக பொலிஸார் ஒருவர் மீது கைகளால் தாக்குதல் நடத்தினாலே பொலிஸ் குழுக்கள் தீவிரமாக களத்தில் இறங்கி வேலை செய்து தாக்குதலாளிகளைக் கைது செய்வார்கள். இங்கே ஏன் அப்படிஅவர்கள்நடந்துகொள்ளவில்லை?
கடந்த வருடம் சுன்னாகத்தில் சிவில் உடையில் நின்ற பொலிஸார் மீது வாள் வெட்டு மேற்கொள்ளப்பட்டதையடுத்து பலபொலிஸ்குழுக்கள்களம் இறக்கப்பட்டன. ஆனால் இங்கே அப்படி எதுவும் நடக்கவில்லை.
கடந்தமாதம்26ஆம்திகதி(புதன்கிழமை) வரணிப்பகுதியில்கொடிகாமம்பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உப பொலிஸ்பரிசோதகரை இனம்தெரியாத நபர்கள் தாக்கி இருந்தார்கள். மறுநாள் வியாழக்கிழமை துன்னாலைப் பகுதியில் விசேட தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு, குறித்த தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என இருவரைப் பொலிஸார்கைதுசெய்தார்கள். ஆனால் நல்லூர் சூட்டுச் சம்பவம் தொடர்பில் மூன்றுநாள்களைகடந்தும்முதன்மைச் சந்தேகநபரைக் கைதுசெய்யமுடியவில்லை. மூன்றாவது நாள் சந்தேக நபரே பொலிஸ் நிலையம் சென்று தாமாகச்சரணடைந்தார்.
ஒருபொலிஸ்உத்தியோகத்தர், அதுவும் மேல் நீதிமன்ற நீதிபதியின் மெய்ப்பாது காவலர், கடமை நேரத்தில் சுட்டுப் படுகொலைசெய்யப்பட்டுஉள்ளார். ஆனால் பொலிஸாரின் விசாரணைகள் திருப்தி இல்லாமல் உள்ளதாக பல மட்டங்களிலும் விமர்சனங்கள் எழுந்தன.
ஏன் இந்தசம்பவம்தொடர்பிலானவிசாரணைகளைகுற்றபுலனாய்வுதுறையினரிடம் கையளிக்கக் கோரி பெரியளவில் கோரிக்கைகள் எவையும் இதுவரை முன் வைக்கப்படவில்லை. ?

**நல்லூர்சம்பவத்தில்சரணடைந்த நபரைப்பொலிஸ்காவலில்வைத்து விசாரிக்காததேன்?**

காலை8.15மணியளவில்சரணடைந்த நபரிடம் வாக்கு மூலம் பெற்று முதல் அறிக்கை தயார் செய்து மாலை 6 மணிக்கு (10 மணித்தியாலத்திற்குள்) நீதிவான் முன்னிலையில் பொலிஸார் முற்படுத்தி விட்டார்கள். பொலிஸாரொருவரை, கடமைநேரத்தில்அவரதுதுப்பாக்கியைப்பறித்தேஅவரைசுட்டுக்கொன்று இருக்கிறார். அவரிடம்பொலிஸ்தரப்பு10 மணித்தியாலத்துக்குள் வாக்கு மூலம் பெற்று விட்டார்கள். அவரைப் பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணை செய்யக் கூடப் பொலிஸ் தரப்பு அனுமதி கோரவில்லை. இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றால் பொலிஸ் தரப்பு மாத்திரம்அல்லஇலங்கையில்உள்ளஅனைத்துத் தரப்பு புலனாய்வு துறையை சேர்ந்தவர்களும் வாக்கு மூலங்களை பதிவு செய்து இருப்பார்கள். ஆனால் இந்தச் சம்பவத்தில்அத்தகையநடைமுறைபின்பற்றப்படவில்லை.
மெய்பாதுகாவலர் மீதும் (துப்பாக்கியை பறிகொடுத்தமை) சில குற்றசாட்டுக்கள் உள்ள நிலையில், அது தொடர்பிலான விசாரணைகள்எதுவும்முன்னெடுக்கப்படாத நிலையில், எதற்காக உடனடியாக பதவி உயர்வு வழங்கப்பட்டது? அத்துடன்பொலிஸ்சேவையில்இருந்து ஓய்வு பெற்ற அவருடைய மனைவிக்கு எதற்காக அவசர அவசரமாக பதவி உயர்வு வழங்கப்பட்டுஅவரை மீண்டும் பொலிஸ் சேவையில்இணைத்துக்கொண்டார்கள்?
இறந்தவரின் குடும்ப பொருளாதார நிலையை கருத்தில் கொண்டு அவருடைய மனைவி பொலிஸ்சேவையில் உள்வாங்கப்படவேண்டிய தேவை இல்லை எனகருதுகிறேன். ஏனெனில் அவர் பொலிஸ்சேவையில் இருந்து ஓய்வு பெற்றமையினால், அவருக்கு ஓய்வூதியம் கிடைக்கும். மற்றும் உயிரிழந்தமெய்ப்பாதுகாவலர், கடமை நேரத்தில் உயிரிழந்து இருந்தமையினால்அவருக்கான(உபபொலிஸ்பரிசோதகருக்கான) சம்பளமும் வழங்கப்படும். உயிரிழந்த மெய்ப் பாதுகாவலருக்கு பதவிஉயர்வுவழங்கப்பட்டுள்ளது. காயமடைந்த மெய்ப் பாதுகாவலருக்கு ஏன் பதவிஉயர்வு வழங்கப்படவில்லை?
காயமடைந்த மெய்ப்பாதுகாவலர் தான் தன்னை துப்பாக்கி சூட்டில் இருந்து பாதுகாக்க காரினுள் தள்ளி ஏற்றிவிட்டு, தானும் சூடு வாங்கிகொண்டு துப்பாக்கிதாரி மீது தாக்குதல் நடத்தினார் என்று நீதிபதி கூறி யுள்ளார். அவ்வாறெனில் காயமடைந்த மெய்பாதுகாவலர்தானே நீதிபதியின் உயிரைக் காப்பாற்றி உள்ளார். எனவே ஏன் அவருக்குப் பதவி உயர்வு வழங்கப்படவில்லை?
பொதுவில்கொலைக்குற்றங்கள்தொடர்பில் ஆரம்ப விசாரணைகளை பொலிஸாரே முன்னெடுத்து நீதிவான் நீதிமன்றில் சாட்சிகள், சான்றுப் பொருள்களை முற்படுத்தி சந்தேக நபர்களையும் முற்படுத்துவார்கள். அங்குபொலிஸ்தரப்பால் முன்வைக்கப்படும் சாட்சிகள், ஆதாரங்கள், சான்றுகளை அடிப்படையாக வைத்தே நீதிவான் நீதிமன்றில் சுருக்க முறையற்றவிசாரணைகள்முன்னெடுக்கப்பட்டு குற்றப்பகிர்வுப் பத்திரம் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டு, சட்டமா அதிபர் சந்தேக நபருக்கு எதிராக குற்றச்சாட்டுக்களைமுன்வைத்து அவரை குறித்த வழக்கில் எதிரியாகக் கண்டுமேல்நீதிமன்றுக்குகுற்றப்பகிர்வுப் பத்திரம் பாரப்படுத்தப்படும். அதன் பின்னர் மேல்நீதிமன்றில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, சந்தேகத்துக்கு இடமின்றிஎதிரிமீதானகுற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால்எதிரியைக்குற்றவாளியாகநீதிமன்றுகண்டுதண்டனைவழங்கப்படும்.
நல்லூர் சூட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் தரப்பு ஆரம்பத்தில் இருந்து நீதிபதி இலக்கு இல்லை என கூறி வருகிறது. ஆனால் நீதிபதி . நீதித்துறையை சார்ந்த பெரும்பாலானவர்கள்மற்றும்பெரும்பாலான பொதுமக்கள் நீதிபதியே இலக்கு என கூறுகின்றார்கள்.
அவ்வாறானநிலையில், இந்தச்சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை முன்னேடுக்கப்போகும்பொலிஸ்தரப்புநீதிபதி இலக்கில்லைஎனும்கோணத்திலையே விசாரணைகளை முன்னெடுக்கப் போகின்றது. அவர்கள் அந்தக் கோணத்தில் விசாரணைகளை முன்னெடுத்து, அந்தக் கோணத்திலையே சாட்சிகள், ஆதாரங்கள் சான்றுக்களை நீதிமன்றில் பாரப்படுத்த போகின்றார்கள். அவ்வாறெனில் நீதிபதிதான் இலக்கு எனும் விடயம் நீர்த்து போய்விடும்.
நல்லூர்சம்பவம்தொடர்பில்பலதரப்பட்ட கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு பல்வேறு வகையான சந்தேகங்கள் கேள்விகளுக்கு பொலிஸ் தரப்பு முற்றுபுள்ளி வைக்குமா? அல்லது பொலிஸ்தரப்புஆரம்பத்தில்இருந்துகூறுவது போன்று " நீதிபதி இலக்கில்லை " எனும் ஒற்றை வார்த்தையை தான் தொடர்ந்து கூற போகின்றதா ? என்பதனைப் பொறுத்திருந்து பார்ப்போம்.




## ஒட்டுசுட்டான் பிரதேச செயலக காணி அலுவலகத்தின் சேவைகள் துரிதகதியில்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் காணி அலுவலகம் மந்த கதியில் செயல்ப்படுவதேன். என்ற தலைப்பில் கடந்த 2017 ஏப்ரல் 5 ஆம் திகதிய உதயன் பத்திரிகையின் வாசகர் திருமுகம் பகுதியில் உதயன் வாசகரொருவரது கடிதம் பிரசுரமாகியிருந்தது குறிப்பிட்ட பதிலின், பிரகாரம் உண்மையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக காணி அலுவலகம் கடந்த 3 வருடங்களுக்கு மேலாக உத்தயோகத்தர்கள் போதாமையாலும், பொருத்தமான, உத்தியோகத்தர்கள், இல்லாமையினாலும் போரால் பாதிக்கப்பட்டு தங்கள் காணி அனுமதிப் பத்திரங்களை இழந்த மக்களுக்கு உரிய நேரத்தில் அதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்க முடியாமல் இருந்தமை உண்மையே.
இன்று குறிப்பிட்ட செய்தியின் பிரகாரம் பிரதேச செயலக காணி அலுவலகத்துக்க உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டதுடன் பொருத்தமான காணி அதிகாரியும். நியமிக்கப்பட்டுள்ளார். கிராம சேவையாளர்களதும் காணி உத்தியோகத்தர்களின் சேவையாலும் காணி அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக நிலுவையாக இருந்த பணிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டு வருகின் றன.
அவர்கள் சிறப்பாகச் சேவையாற்றுவார்கள் என்று எதிர்பார்ப்போம்.

வே. ம. இந்திரநாதன்.
முள்ளியவளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணலு பரிசளிப்பு விழா



கொமர்ஷல் வங்கி மானிப்பாய்க் கிளையின் அருணலு பரிசளிப்பு விழா நிகழ்வுகள் வங்கிக் கிளை மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம் பெற்றது.


கிளை முகாமையாளர் எஸ்.வி.குருபாதம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் யசோதா உதயகுமார், சிறப்பு விருந்தினராக கொமர்ஷல் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் ஆர்.சிவஞானம்,மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அதிபர்ஏ.பேரின்பநாதன்ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் கடந்த வருடம் சித்தியடைந்த வங்கியில் அருணலு சேமிப்புக் கணக்கைப் பேணும் மாணவர்களில் பாடசாலை மட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெற்ற மாணவர்கள் இதன்போது பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

மாணவர்களுக்கு முறையே 10 ஆயிரம் ரூபா, 7 ஆயிரத்து 500 ரூபா, 5 ஆயிரம் ரூபா தொகை மதிப்பு வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் பரிசளிப்பு நிகழ்வில் மொத்தமாக 17 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ஓ)

# பொருளாதார அபிவிருத்தியை உறுதிப்படுத்தும் கொள்கைத் திட்டங்கள் முன்மொழிவு

## *மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவிப்பு*



மத்திய வங்கியை மீளமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பம்பிக்கப்பட்டுள்ளது என்ற தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் நடப்பாண்டில் நிரந்தர பொருளாதார அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்கான கொள்கைத் திட்டங்கள் தயார் நிலையில் உள்ளது என மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி கருத்து வெளியிட்டுள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

"2017ஆம் ஆண்டுக்கான நாணய மாற்றம் மற்றும் நிதியியல் துறை கொள்கைகள் உள்ளடங்கியதான '2017 வழிகாட்டல்' திட்டம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக கல்விமான்கள், தொழில்சார் நிபுணர்கள் மற்றும் தனியார் துறை பிரதிநிதிகளை உள்ளடக்கிய நாணயக் கொள்கை ஆலோசனைக்குழுவொன்று மீண்டும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. 2017 ஆம் ஆண்டு பன்னாட்டு மற்றும் உள்ளூர் முதலீடுகளை மேற்கொள்ளவும் அவற்றை ஊக்குவிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. அந்த வகையிலே இந்த வருடத்தில் நாம் பணவீக்கத்தை ஒற்றை இலக்கத்தில் தொடர்ந்தும் பேணவுள்ளதுடன் 5.5 முதல் 6 சதவீதமான பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கப்பட்டுள்ளது." - என்றார்.

மேலும் நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை மற்றும் உலக பொருளாதார நிலைமைகள் காரணமாக வளர்ச்சிவீதத்தில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படலாமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஓ)

# இறக்குமதிப் பொருள்களின் விற்பனை தொடர்பில் வருகிறது சட்டம்

"ஏற்றுமதியின் மூலம் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கே நாம் முயற்சித்து வருகின்றோம். தேசிய உற்பத்திகளுக்கு மாறாக பன்னாட்டு முதலீட்டாளர்கள் உற்பத்தி சார்ந்து முதலீடுகளை மேற்கொள்வதற்கான அழைப்பினை விடுக்கிறோம்."



குறைந்த விலையில் இறக்குமதி செய்யப்படும் பொருள்களை இலங்கையில் விற்பனைசெய்வதற்கு தடை விதிக்கும் வகையில் சட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதான கருத்து தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கடவத்தைப் பிரதேசத்தில் அமையப்பெற்றுள்ள புதிய தொழிற்சாலையொன்றின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே மேற்படி விடயங்கள் அவரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

"குறைந்த விலையில் இறக்குமதி செய்யப்படும் பொருள்களை இலங்கையில் விற்பனை செய்வதை தடுக்கும் வகையில் புதிய சட்டமொன்று கொண்டுவரப் படும்.


ஏற்றுமதி நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு இயந்திரங்களை பெற்றுக்கொள்வது தொடர்பில் வரி விலக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும்.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை இலங்கைக்கு கிடைத்தது மட்டுமன்றி சீனா, ஜப்பான், இந்தியா போன்ற நாடுகள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வந்துள்ள நிலையில், நாட்டில் புதிய யுகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது" என்றார். (ஓ)

# மாதாந்த உற்பத்தி விலைச்சுட்டெண் மாதிரி அசைவு

கடந்த 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் நடப்பாண்டின் ஏப்ரல் மாத காலப்பகுதி வரையான மாதாந்த உற்பத்தி விலைச்சுட்டெண் மாதிரி அசைவுகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

Figure 1: Movements of Monthly Producer's Price Index: January 2014 - April 2017 (Base: 2013 Q4=100)




* - Revised ** - Provisional

# கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்கள் அதிகரிப்பு

## *ஏப்ரல் மாத உற்பத்தியில் 1.8 வீதமாகப் பதிவு*

2016 ஆம் ஆண்டின் மாதாந்த உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் 2017 ஏப்ரல் மாத உற்பத்தியில் கைத்தொழில்உற்பத்திச்சுட்டெண் அளவீடானது 1.8 வீதத்தால் அதிகரித்துள்ள தகவலை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரப்பணிப்பாளர்நாயகம்அமரசதரசிங்க வெளிப்படுத்தியுள்ளார்.

தவிர, உற்பத்திக் கைத்தொழில்களில், 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் 2017 ஏப்ரல் மாத உற்பத்திகளில் தளபாடங்கள் 27.8 வீதமாகவும், ஏனைய உலோகமல்லாத தாதுப் பொருள்கள் உற்பத்திகள் 10.4 வீதமாகவும் மற்றும் ஆடை அணிகலன்கள் 10.2 வீதமாகவும் பதிவாகியுள்ளதுடன் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டுகின்றன. உணவு உற்பத்தியானது ஏப்ரல் மாதத்தில் 0.1 வீதத்தால் அதிகரித்துள்ளது.


அதேவேளை மரம் மற்றும் மரம் சார்ந்த உற்பத்திகள் 22.3 வீதமாகவும், இரசாயனமும் இரசாயனப் பொருள் உற்பத்தியும் 9.8 வீதமாகவும் மற்றும் புகையிலை உற்பத்திகள் 8.6 வீதமாகவும் வீழ்ச்சியைப் பதிவிட்டுள்ளன.

கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது மிகப் பிரதானமான பொருளாதாரக் குறிகாட்டியாக உள்ளதுடன் அவை குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் கைத்தொழில் உற்பத்தியின் அளவில் ஏற்படும் குறுகிய கால மாற்றங்களையும் வெளிப்படுத்துகின்றமை குறித்து நோக்கத்தக்கது. (ஓ)

# இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணக் கண்காட்சி நிகழ்வு

## இலங்கை ஆபரண சங்கம் இம்மாத இறுதியில் நிகழ்த்த ஏற்பாடு

2017 ஆம் ஆண்டுக்கான பன்னாட்டு இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்களின் கண்காட்சி (FACETS) நிகழ்வுகள் இம்மாதம் 31ஆம்திகதி தொடக்கம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 03ஆம் திகதி வரை நடைபெற உள்ளது.



பன்னாட்டுப் பங்களிப்புடன் இலங்கை இரத்தின கற்கள் மற்றும் ஆபரண சங்கம் ஏற்பாடு செய்துள்ள இந்த கண்காட்சி நிகழ்வில் இலங்கையின் மிகப்பெறுமதியான வளங்களில் அதி உயர்ந்தவை குறிப்பாக இரத்தின கற்கள் முதல் ஆபரணங்கள் வரை சிறந்த வர்த்தக நாமங்களை கொண்டதான கைக்கடிகாரங்கள், நவநாகரிக ஆபரணங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளதுடன் அதிகளவான விற்பனைக் கூடங்கள் அமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வருடம் இடம்பெறவுள்ள மேற்படி கண்காட்சி நிகழ்வில் உலகம் முழுவதும் இருந்து பெருந்தொகையானோர் கலந்துக் கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஓ)

CSE
COLOMBO STOCK EXCHANGE


கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 212221455

31/7/2017

www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | -28.66 | 6,637.39 | 6,666.05 |
| S&P SL20 | -11.91 | 3,811.01 | 3,822.92 |
| வியாபாரப்புரள்வு | | 508,169,440 | 625,768,580 |
| உள்நாடு:- | கொள்வனவு | 271,158,272 | 197,265,312 |
| | விற்பனை | 392,993,600 | 599,850,940 |
| வெளிநாடு:- | கொள்வனவு | 237,011,184 | 428,503,264 |
| | விற்பனை | 115,175,848 | 25,917,620 |




| கம்பனி அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 173.80 | 580,293 | 100,955,498 |
| ரியே லங்கா | TJL.N | 41.10 | 1,708,160 | 70,181,548 |
| அக்சஸ் எஞ்யினியறிங் | AEL.N | 26.70 | 2,283,163 | 61,537,334 |
| இலங்கை கொமரஷல் வங்கி | COMB.N | 137.70 | 270,252 | 37,294,860 |
| சம்பத் வங்கி | SAMP.N | 269.00 | 84,988 | 22,807,950 |
| கேமாஸ் ஹோல்டிங்ஸ் | HHL.N | 147.00 | 205,840 | 17,530,500 |
| லங்கா டைபில்ஸ் | TILE.N | 115.00 | 117,382 | 13,498,930 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 232.40 | 58,554 | 12,773,185 |
| டோக்கியோ சிமேன் | TKYO.N | 77.00 | 146,503 | 11,140,321 |
| கொமரஷல் கிரடிற் | COCR.N | 43.50 | 246,169 | 10,708,241 |

சம்பத் வங்கி **Right issue 1 for 6 @ Rs.245**

பங்குலாபம்

ஜோன் கீல்ஸ் ஹோட்டல் - 0.40 சதம்

சேவ்ரோன் லுப்பிரிக்கன் - ரூபா 2.00

| சந்தைக் குறிகாட்டிகள். | |
|---|---|
| கம்பனிகள் | 295 |
| பரிமாற்றத்தில் | 226 |
| விலை உழைப் | 10.8 |
| புத்தகப்பெறுமதி | 1.4 |
| பங்குலாப விலை | 2.9 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.எஸ்.சிவஞானராஜா

# அமெரிக்காவின் விலகல் ஆரோக்கியமானது அல்ல







2015 டிசெம்பர் 12ஆம் திகதி உலகநாடுகளின் இணக்கப்பாட்டுடன் நடைமுறைக்கு வந்த பரிஸ் உடன்படிக்கையின் பேறாக புவி வெப்பமடைவதற்குத் தாம் ஒவ்வொருவரும் பொறுப்பாளிகள் என்பதை ஏற்றுக் கொண்ட உலக நாடுகள் புவி வெப்பமடைவதைப் படிப்படியாகக் குறைப்பதற்கான நடவடிக்கைகளில் வெளிப்படையாகவே ஈடுபட்டு வெற்றி காண வேண்டுமென்ற திட்டத்தை முன்வைத்தன. 2020ஆம் ஆண்டிலிருந்து புவி வெப்ப நிலையை இரண்டு செல்சியஸ் அளவு குறைப்பதற்குச் சகல நாடுகளும் பூரணசம்மதம் தெரிவித்தன. தூரநோக்கோடு முன்னெடுக்கப்படும் இந்த முயற்சி வெற்றிபெறும் பட்சத்தில் பூமி அடுத்த சந்ததிகளுக்கும் வாழக்கிடைக்கும் என நிச்சயம் நம்பலாம். ஆனால் அமெரிக்கா அந்தச் செயற்பாட்டிலிருந்து வெளியேறியிருப்பது நல்ல சகுனமாகத் தெரியவில்லை.

**வெப்பத்தை அதிகரிக்கச் செய்யும் கார்பன்**

கார்பனை வெளியிட்டு உலக வெப்பமயமாதலை அதிகரிக்கச் செய்து மோசமான தாக்கத்தை ஏற்படுத்தும் நாடுகளைப் பட்டியல் படுத்தினால் அவை கீழ் வருமாறு அமையும். இது ஆண்டுதோறும் அவதானிக்கப்படுகிறது.

சீனா 10 ஆயிரத்து 357 மெற்றிக்தொன் கார்பன். அமெரிக்கா 5 ஆயிரத்து 417 மெற்றிக்தொன் கார்பன், இந்தியா 2 ஆயிரத்து 274 மெற்றிக்தொன் கார்பன், ரஷ்யா ஆயிரத்து 617 மெற்றிக்தொன் கார்பன், ஜப்பான் ஆயிரத்து 237 மெற்றிக் தொன்கார்பன், ஜேர்மனி 798 மில்லியன் மெற்றிக் தொன் கார்பன், ஈரான் 648 மில்லியன் மெற்றிக்தொன் கார்பன், சவூதி அரேபியா 601 மில்லியன் மெற்றிக் தொன் கார்பன், தென்கொரியா 592 மில்லியன் மெற்றிக் தொன் கார்பன், கனடா 557 மில்லியன் மெற்றிக் தொன் கார்பன். மேற்போந்த பத்து நாடுகள் மட்டுமல்லாமல் பூமியிலுள்ள ஏனைய உலக நாடுகளும் கூட காலநிலையைப் பாதிக்குமளவுக்குத் தம்மால் முடிந்தளவுக்குப் பங்காற்றியே நிற்கின்றன.




> 2020ஆம் ஆண்டிலிருந்து புவி வெப்ப நிலையை இரண்டு செல்சியஸ் அளவு குறைப்பதற்குச் சகல நாடுகளும் பூரணசம்மதம் தெரிவித்தன. தூரநோக்கோடு முன்னெடுக்கப்படும் இந்த முயற்சி வெற்றிபெறும் பட்சத்தில் பூமி அடுத்த சந்ததிகளுக்கும் வாழக்கிடைக்கும் என நிச்சயம் நம்பலாம். ஆனால் அமெரிக்கா அந்தச் செயற்பாட்டிலிருந்து வெளியேறியிருப்பது நல்ல சகுனமாகத் தெரியவில்லை.

**அனைத்து நாடுகளும் அக்கறைப்பட வேண்டும்**

ஆயுத, அணுவாயுதப் பாவனையைத் தவிர்த்தல், தொழிற்சாலைக் கழிவுகளைக் கட்டுப்படுத்தல், போர்ப் பயிற்சிகளைக் குறைத்தல், காடழிப்பைக் கைவிட்டுக் காடு வளர்ப்பை மேற்கொள்ளல், பிளாஸ்ரிக் பாவனையை முற்றாகக் கைவிடல், கிருமிநாசினிப் பாவனையைக் கட்டுப்படுத்துதல், இலத்திரனியல் கழிவுகளை உரியவாறு கவனித்து வெளியகற்றுதல், குப்பை கூழங்களைப் பசளையாக்குதல் தினந்தினம் வெளியேறும் கழிவுநீரை முகாமைத்துவம் செய்தல், பொலித்தீன் பைகளையும், பிளாஸ்ரிக் போத்தல்களையும் எரிப்பதை முற்றாகத் தவிர்த்தல், ஏவுகணைப் பரிசோதனைகளை மட்டுப்படுத்துதல், சமுத்திரத்தில் சேரும், குப்பை, கழிவுகளையும் எண்ணெய், ஓயில், இரசாயனப் பதார்த்தங்களையும் கண்டறிந்து தடுக்கும் அல்லது குறைக்கும் உபா யத்தைச் செயற்படுத்தல் போன்றவற்றில் அனைத்து நாடுகளும் அக்கறை கொள்ள வேண்டும்.

**பனிகள் உருகுவதால் ஆபத்து!**

சமையல் எரிவாயு, குளிர்சாதனப் பொருள்களின் எச்சங்கள், அழகுசாதன கிறீம் வகைகள், செயற்கை இழையங்கள், விளையாட்டுப் பொருள்கள் பற்றரிகள், குப்பைமேடுகள், மனித, மிருக உடல்களைத் தகனஞ் செய்யும் சுடலைகள், அரைகுறையாகப் புதைக்கும் இறைச்சிக் கழிவுகள் கொண்டாட்டங்களின்போது வெடிக்கவைக்கப்படும் வெடிகள், வானவர்ண வெடிகளின் நச்சு வாயுக்கள் போன்றவை கூட பூமியின் தட்ப வெப்ப நிலையால் பாதிப்பை ஏற்படுத்தவல்லன. இதன் பேறாகவும் பூமியானது அதிக வெப்பமடையும். இப்போது வடதுருவப் பனிமலைகள் உருகவும், நகரவும் ஆரம்பித்திருப்பது இதனால் ஏற்பட்ட அபாய அறிகுறிகளில் ஒன்றே.

இதன் விளைவாகக் கடல் மட்டம் உயர்ந்து, நிலப் பரப்பைத் தன்னுள் அமிழ்த்திவிடும் அதில் தங்கியிருந்த உயிர்ச் சூழலை அழித்து விடும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படும். இதனால் தான் உலக வெப்பநிலையை இரண்டு பாகை செல்சியசாகக் குறைப்பதற்கான வேலையில் சகலநாடுகளும் முனைப்பாக இயங்கிவருகின்றன. இந்த நிலையில் தான் அமெரிக்கா குறித்த உடன்படிக்கையிலிருந்து விலகியி ருக்கின்றது. இது உலகத்துக்கு ஆரோக்கியமானதல்ல ஆபத்தானது.

---

# பதவி விலகல் என்பதும் ஒரு தரும காரியமே



ஒரு ஜனநாயக நாட்டில் மக்களுக்கோ ஏனைய உயிர்களுக்கோ எதிர்பாராத விதமாக ஓர் இழப்பு அல்லது பாதிப்பொன்று வருமாயின் அதற்குப் பொறுப்பாகவிருக்கின்ற அரச அதிகாரி அதைத் தவிர்த்துக் கொள்வதற்கு வேண்டிய தன்னாலான முயற்சிகளையாவது செய்திருக்க வேண்டும். இல்லாவிடில் அவர் தனது பதவியைத் துறப்பதே உத்தமம். இது ஒரு சம்பிரதாயம். ஆனால், இது சட்டமல்ல. தரும காரியம் என்றும் கொள்ளலாம். உலகெங்கும் இந்த நடைமுறை பெரும்பாலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருப்பதாக அறியக் கிடக்கிறது. "அது அந்தக்காலம் பாருங்கோ! இந்தக் காலம் அப்படி எந்தவித பதவி துறப்புக்களும் இடம்பெறுவதில்லை" என்று நீங்கள் குமுறுவது புரிகிறது.

2016 இல் மட்டும் ரயில் மோதியும் ரயிலில் மோதியும் 250 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். இவற்றுள் பலர் கடவைகள், சமிக்ஞைகள், ரயில் பாதைகளில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் சரியாக இல்லாதாதலேயே இறந்திருக்கிறார்கள். இதைவிட யானைகள், மாடுகள், வாகனங்கள் எனப் பெறுமதியான செல்வங்களும் துவம்சம் செய்யப்பட்டுள்ளன. 2017இல் எத்தனை இழப்புக்கள் என்ற செய்தி 2018 இல் தான் பதிவே ஆகின்றது. இந்த நிலையில் 250 இறந்திருக்கின்றனர். எனவே இதற்குப் பொறுப்புக்கூறும் விதத்தில் அந்த நடைமுறைகளுக்குப் பொறுப்பானவர் பதவி விலக வேண்டும். இது தார்மீகப் பொறுப்பும் தர்மகாரியமும். சரி பதவியைத் துறக்கா விட்டாலும் அதற்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகளைப் பிரதேச செயலகங்கள் மூலமாவது செயற்படுத்த ஆவன செய்திருக்க வேண்டும். நமது நாட்டில் அது நடைபெற்றதா? என்பது கேள்வியே. ரயில் விடயம் மாத்திரமல்ல, ஆலயம் என்றால் கூட அதில் ஒரு அசம்பாவிதம் நடந்தால் பொறுப்பானவர்கள் பதவி விலகவே வேண்டும்.

> 2016 இல் மட்டும் ரயில் மோதியும் ரயிலில் மோதியும் 250 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். இவற்றுள் பலர் கடவைகள், சமிக்ஞைகள், ரயில் பாதைகளில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் சரியாக இல்லாதாதலேயே இறந்திருக்கிறார்கள்.

**ஆலயத்திலும் அவ்வாறே...**

அரசானது மக்களிடத்தே அக்கறை கொள்ள வேண்டுமென்பது தர்மகாரியம் என்பது போல ஆலயமானதும் அடியார்களிடத்தே அதீத அக்கறை கொள்ள வேண்டும் என்பதும் தர்மமாகும். அடியார்கள் குழப்பமின்றி கும்பிடும் படியாக அமைதியான ஆன்மிகச் சூழலை ஏற்படுத்த வேண்டும். அரசியல், ஊர்ப்புதினம், குடும்ப விவகாரம், தனிப்பட்ட விவகாரம் [illegible] சண்டித்தனங்கள் [illegible] ஆகியன ஆலயத்தில் இடம்பெறுமாயின் அங்கே ஆன்மிகச்சூழல் ஒருபோதும் அமையாது. [illegible] பாதுகாப்பு என்பது உன்னிப்பாகச் சகல மட்டங்களிலும் பேணப்பட வேண்டிய பொறுப்பு அது. அதைச் செய்ய இயலாத அல்லது செய்யத் தெரியாத பட்சத்தில் ஆலயத்தை நிர்வகிப்பவர்களும் தமது கடமைகளை தாமாகவே முன்வந்து கைமாற்றிவிடுதல் என்பது உசிதமானது.

**காரணம் என்ன?**

ஏன் அரசையும் ஆலயத்தையும் ஒழுங்காக எடுத்துநோக்குகிறேன் என்றால் இவை இரண்டுமே பொதுச் சொத்துக்கள். மேற்படி இரண்டுக்குமே மக்களின் கவனம் அதீதமாயுள்ளதை நாட்டில் கண் கூடாகப் பார்க்கலாம். வீடு தனிப்பட்டது. அதிலுள்ள தலைவனையோ தலைவியையோ பதவி விலகும்படி கேட்கமுடியாது. அது தர்மமாகாது. ஆனால் ஆலய, அரச விடயம் அப்படியல்ல. ஒரு பொது விடயத்தில் அசம்பாவிதங்கள் ஏற்படாதவாறு தலைமைகள் தமது சேவைகளைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துச் செய்பவர்களாக இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கையரின்



## பாதங்கள் கூறும் பலன்கள் என்ன?

- மென்மையான பாதங்களை உடைய மங்கையர் சகல விதமான சுகங்களையும் அனுபவிப்பார்கள். அவர்களின் பிறவி யோகத்தால் தாய், தந்தை, கணவர், புத்திரர்கள் ஆகியவர்கள் நற்பயன்களை அடைவார்கள். இவர்கள் எப்போதுமே நற்காரியங்களைச் செய்வதிலேயே கவனம் செலுத்து வார்கள்.

- பாதங்கள் தடித்துப் பருத்திருப்பவர்களும் உள்ளங்கால் பூமியில் பதியும் படியாகத் தட்டையாக இருப்பவர்களும் மிகவும் தேய்ந்த உள்ளங்கால்களை உடையவர்களும் வீண் அபவாதங்களையும், பழிச் சொற்களையும் ஏற்க வேண்டியவர்களாவார்கள். வெறுப்படையும் இயல்பும், தயவு தாட்சண்யமற்ற மனப் போக்கும் கொண்டவர்களாக இருப்பார்கள்.

- பாதங்கள் பள்ளமாக இருப்பவர்கள் கணவனால் சில காலம் கைவிடப்பட வேண்டிய நிலையை அடைவார்கள்.

- உள்ளங்காலிலுள்ள ரேகைகள் தெளிவாகவும் மேல்நோக்கிச் செல்வனவாகவும் அமையப் பெற்றவர்கள். அன்புமிக்க நல்லதொரு கணவனையடைவார்கள்.

ஒரு மனிதன் தனது பிறப்பு முதல் இறப்பு வரை இந்த மண்ணில் ஆற்ற வேண்டிய நற்செயல்கள், ஆற்றக்கூடாத ஒழுக்கக் கேடுகள் ஆகியவற்றை எடுத்துரைப்பதில் பல்வேறு சாஸ்திரங்கள் உள்ளது.

இந்து மதக் கோட்பாட்டில் பல்வேறு சாஸ்திரங்கள் இருந்தாலும், இதில் முக்கியமானது சாமுத்திரிகா சாஸ்த்திரம். ஏனெனில் இந்தச் சாஸ்திரம் தான் ஆண் - பெண் உறவுகளுக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள், மனிதர்களின் உடலில் இருக்கும் மச்சங்களைப் பொறுத்து அவர்களின் வாழ்வியல் முன்னேற்றம் போன்றவற்றை விளக்குகிறது.



## வரலாற்றில் இன்றைய தினம் 01.08.2017

1498 - வெனிசுலாவுக்குப் பயணித்த முதலாவது ஐரோப்பியரானார் கிறிஸ்தோபர் கொலம்பஸ்.

1774 - பிரிட்டன் விஞ்ஞானி யோசப் பிறிஸ்ரிலியால் ஒக்சிஜன் வாயு இனங்காணப்பட்டது.

1834 - 1833 சட்டத்திற்கமைய பிரிட்டனில் அடிமைத்தனம் இல்லாமற் செய்யப்படுவது நடைமுறைக்கு வந்தது.

1894 - கொரியா தொடர்பாக முதலாவது சீன - ஜப்பானியப் போர் வெடித்தது.

1907 - உலகளாவிய ரீதியிலான சாரணர் இயக்கத்துக்கு வழிகோலிய முதலாவது சாரணர் பாசறை பிறவுன்சீ தீவில் தொடங்கியது.

1957 - ஐக்கிய அமெரிக்காவும் கனடாவும் இணைந்து வட அமெரிக்க வான்பாதுகாப்பு அமைப்பை உருவாக்கின.

1960 - பாகிஸ்தான் அரசின் தலைநகராக இஸ்லாமபாத் அறிவிக்கப்பட்டது.

1987 - வெளிச் சக்திகளே இலங்கையில் வன்செயல்களைத் தூண்டுகின்றன என இந்தியத் தலைமை அமைச்சர் ராஜிவ் தெரிவிப்பு.

1987 - மக்களை அழிக்க இங்கு வரவில்லையென இந்திய அதிகாரிகள் தெரிவிப்பு

1995 - முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையால் சண்டிலிப்பாய்ப் குதியில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 52 பேர் எனத் தெரிவிப்பு.

1995 - உத்தேச தீர்வுயோசனையைத் தமிழர் கருத்தில் எடுத்தால். அவர்கள் துரோகிகள் ஆவர் எனக் குமார் பொன்னம்பலம் தெரிவிப்பு.

2004 - பராகுவே நாட்டின் ஒஸின்சன் மாகாணத்தில் உள்ள கடைத் தொகுதியில் ஏற்பட்ட தீவிபத்தில் 39 பேர் உயிரிழக்க, மேலும் 500 பேர் வரை காயமடைந்தனர்.

2016 - முன்னாள் போராளிகளுக்கு மருத்துவ சோதனைக்கு ஏற்பாடு செய்யுமாறு வடமாகாண உறுப்பினர் து.ரவிகரன் வடக்கு முதலமைச்சரிடம் கோரிக்கை

## நாளை

**02.08.2017**

புதன்கிழமை

**ஆடி - 17**

திதி: தசமி பி.ப. 04.10 வரை
நட்சத்திரம்: அனுசம் மா 5.45 வரை
சுபநேரம்: 04.33–06.03 வரை
ராகுகாலம்: 12.03–01.33 வரை



2004 ஆம் ஆண்டு பராகுவே நாட்டின் ஒஸின்சன் மாகாணத்தில் கடைத் தொகுதியில் ஏற்பட்ட தீவிபத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தி எழுத்து

## சிரியாவின் தலைவிதியை தீர்மானிக்கும் சக்திகளாக புடின், டொனால்ட் ட்ரம்ப்

சிரியாவில் சியா பிரிவு இஸ்லாமியர்களுக்கும், சன்னி பிரிவு இஸ்லாமியர்களுக்கும் இடையிலான மோதலென்பது செந்தணல் போன்ற நிலையில் தற்போது உள்ளது. அது பழையபடி கொழுந்துவிட்டு எரியுமா? அல்லது தற்போதுள்ள முறுகல் நிலை பேணப்படுமா? அல்லது போர் நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டு வரப்படுமா? என்பதைத் தீர்மானிக்கும் சக்திகளாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப், மற்றும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் ஆகியோர் உள்ளனர்.

சிரிய அதிபர் அல் அசாத் சியா பிரிவைச் சேர்ந்தவர். சிரியாவில் பெரும்பான்மையாக சன்னி பிரிவு இஸ்லாமியர்கள் உள்ளனர். சன்னி பிரிவைச் சேர்ந்த கிளர்ச்சிக்குழு அசாத்தைப் பதவி விலகவேண்டும் என்று தெரிவித்து ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தது. அவர்களுக்கு உதவியாக அமெரிக்கா இருந்தது. சியா பிரிவினருக்கு உதவியாக ரஷ்யா இருந்தது. சிரியாவில் அமெரிக்கா – ரஷ்யா இடையிலான மறைமுக மோதல் மிகத் தீவிரமாக நடைபெற்று வந்தது. ஜேர்மனியின் ஹம்பேர்க் நகரில் அண்மையில் ட்ரம்ப் புடின் சந்தித்ததை அடுத்து சிரிய உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது. நிரந்தரமாக போரை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் ஆயுதக் குழுவுக்கு வழங்கிய ஆயுத உதவிகளை நிறுத்த உத்தரவிட்டார் ட்ரம்ப். எனினும் சிரியப் போர் தற்போது மீண்டும் ஆரம்பமாகிவிடுமோ என்ற ஐயம் ஐக்கிய நாடுகள் சபைக்கும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கும், சிரிய மக்களுக்கும் ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணமும் அமெரிக்காவும், ரஷ்யாவுமே. ஒபாமா அதிபராக இருந்த போது தமது தூதரக அதிகாரிகளை வெளியேற்றியதற்குப் பதிலடியாக புடின் தற்போது சுமார் 700இற்கும் அதிகமான அமெரிக்க இராஜதந்திரப் பணியாளர்களை வெளியேற உத்தரவிட்டுள்ளார். ரஷ்யா மீது அமெரிக்க நாடாளுமன்றம் கொண்டுவந்த பொருளாதாரத் தடைக்கு ட்ரம்ப் அனுமதி வழங்கவுள்ளார். எனின் வேதாளம் மீண்டும் முருங்கையில் ஏறவுள்ளது. அவ்வாறு வேதாளம் முருங்கையில் ஏறினால் பகடைக்காய் நிச்சயம் சிரியாவே.

சிரிய அரசுக்குத் தான் செய்துவரும் உதவிகளை அப்படியே ரஷ்யாவும் தொடரும். கிளர்ச்சிக் குழுவுக்கு ஆயுதங்கள் வழங்க விதித்த தடை உத்தரவை ட்ரம்ப் திரும்பப் பெறுவார். மத்திய கிழக்கு மீண்டும் அல்லோலகல்லோலப்படும். சிரியாவில் வீட்டுக்கு வீடு சாவு விழும்.

வடகொரியா, ஈரான், உக்ரைன் விவகாரங்களில் உடனடியாக மூக்கை நுழைத்து தனது கருத்துக்களை எடுத்தியம்பி பொருளாதத் தடைகளையும், கண்டனங்களையும் அள்ளி விளாசும் ஐ.நா. சபை, அமெரிக்கா மற்றும் ரஷ்யா விவகாரங்களில் சற்று அடக்கி வாசிப்பதுதான் ஏன் என்று புரியவில்லை.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2 | | | |
| | 8 | | | 7 | | | 3 | |
| 9 | | 6 | | | | 8 | | 5 |
| | | 8 | | | | | | 2 |
| | 4 | | | 1 | | | 7 | |
| 5 | | | | | | 9 | | |
| 6 | | 2 | | | | 4 | | 9 |
| | 3 | | | 8 | | | 1 | |
| | | | 4 | | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 7 | 8 | 6 | 5 | 9 | 2 | 3 | 4 |
| 9 | 3 | 4 | 8 | 2 | 1 | 6 | 5 | 7 |
| 6 | 2 | 5 | 3 | 7 | 4 | 1 | 9 | 8 |
| 4 | 6 | 1 | 9 | 8 | 2 | 3 | 7 | 5 |
| 7 | 9 | 3 | 5 | 1 | 6 | 8 | 4 | 2 |
| 5 | 8 | 2 | 7 | 4 | 3 | 9 | 1 | 6 |
| 3 | 1 | 7 | 4 | 6 | 8 | 5 | 2 | 9 |
| 2 | 5 | 6 | 1 | 9 | 7 | 4 | 8 | 3 |
| 8 | 4 | 9 | 2 | 3 | 5 | 7 | 6 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உற்சாகமான நாள். உங்கள் தேவை அறிந்து மற்றவர்கள் உங்களுக்கு உதவுவார்கள். வெளியூரில் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் வந்து சேரும்.

**இடபம்:** சமயோசித புத்தியுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். இலாபம் பன்மடங்கு உயரும். ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**மிதுனம்:** இன்றைய பொழுது உங்களுக்கு உற்சாகமாக இருக்கும். கனிவான பேச்சால் மற்றவர்களைக் கவர்வீர்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கடகம்:** உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும். வாழ்க்கைத்துணை வழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**சிங்கம்:** தேவையான பணம் எப்படியும் கிடைத்துவிடும். குடும்பத்துடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவீர்கள். நண்பர்களின் வீட்டு விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள்.

**கன்னி:** பெற்றோரின் சொல்லுக்கு மரியாதை கொடுப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேறும். மனைவியின் பாசம் நிறைந்த அன்பில் மகிழ்வீர்கள்.

**துலாம்:** கடந்த கால உழைப்பின் பயனைப் பெறுவீர்கள். நன்றி மறந்தவரைக் கூட பெருந்தன்மையுடன் மன்னிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி ஏற்படும்.

**விருச்சிகம்:** நண்பர்களின் செயல் அதிருப்தியை உருவாக்கலாம். தொழில், வியாபாரத்தில் மூலதனம் தேவைப்படும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர்.

**தனுசு:** உறவினர்களின் அதிருப்திப் பேச்சுக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் வரும். பணியாளர்கள் விரும்பிய இடமாற்றம் கிடைக்கப் பெறுவர்.

**மகரம்:** திட்டமிட்ட செயலை விரைந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த சிரமம் விலகும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். ஆபரணம் வாங்கி மகிழ்வர்.

**கும்பம்:** சிறு முயற்சி கூட பலமடங்கு நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் வருமானம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர்.

**மீனம்:** இன்று நீங்கள் அன்றாடப் பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். உற்சாகமான சூழ்நிலை காணப்படும். தேவைப்படும் பணம் கடனாகக் கிடைக்கும்.

## தமிழில் வருகிறது 'பர்பி'



சௌந்தர்யா ரஜினி இயக்கத்தில் தனுஷ், அமலபால், கஜோல் சமுத்திரக்கனி நடித்துள்ள படம் வி.ஐ.பி-2. ஒகஸ்ட் 11ஆம் திகதி தமிழ், தெலுங்கு, ஹிந்தி என மூன்று மொழிகளிலும் இந்தப் படம் வெளியாகிறது.

ஹிந்தியில் ராஞ்சனா, ஷமிதாப் படங்களில் நடித்து ரசிகர்களுக்கு தனுஷ் ஏற்கனவே பரீட்சமாகிவிட்டதோடு பிரபல இந்தி நடிகை காஜோலும் இந்தப் படத்தில் நடித்திருப்பதால் ஹிந்தியிலும் வி.ஐ.பி 2 பெரிய அளவில் சாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் இந்தப் படத்தையடுத்து 'பர்பி' என்ற ஹிந்தி படத்தை தமிழில் ரீமேக் செய்யப் போகிறாராம் தனுஷ். வி.ஐ.பி.2 படத்தை ஹிந்தியில் பிரபலமாக்குவதற்காக மும்பை சென்றபோது இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார் தனுஷ். 'பர்பி' ஹிந்தி படத்தில் ரன்பீர் கபூர், பிரியங்கா சோப்ரா நடித்திருந்தனர். இந்தப் படம் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பை விரைவில் தனுஷ் வெளியிடுவார் என்று தெரிகிறது.

### டுவிற்றர்



இல்லாத ஒன்றைப் பற்றி கற்பனை செய்யும் போது அது இருப்பதாகவே கற்பனை செய்யவேண்டும்.






இளைப்பாறிய திண்ணைகளுமில்லை.
நீர்மோர் கொடுத்த அன்னைகளுமில்லை.
மனதைப் பணம் தின்று நாளாச்சு....

போஸ்ட்மன் இன்னமும் சைக்கிள்களில் வருகிறார்கள். வேகாத வெயிலில் வரும் அவர்களுக்கு கேட்காமலேயே தண்ணீர் கொடுக்க வேண்டும்.

ஒருகாலத்தின் மிச்சம் அவர்கள்



### பேர் தான் வரிக்குதிரை



ஆனா அது எந்த 'வரி'யும் கட்டுறதில்லை

### நாம சிரிக்கும்போதுதான் வாழ்க்கை அழகாகுமாம்



வாழ்க்கைதான் சிரிப்பா சிரிக்குதே, இதில நாம எங்க சிரிக்குறது.

### பொண்ணுங்க பலூன் மாதிரி. சின்ன விசயத்தை ஊதிப்பெரிசாங்கிடுவாங்க...



ஆனா பசங்க பஞ்சு மிட்டாய் மாதிரி எவ்வளவு பெரிய பிரச்சினையா இருந்தாலும் சின்னதாக்கிடுவாங்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# வாழ்க்கைக்கான கல்வி

ராமசாஸ்திரி ஒரு மகா பண்டிதர். அறிவு சார்ந்த விடயங்களில் அவர் மிகவும் கைதேர்ந்தவர். மிகத் திறமையாக வாதங்கள் புரிவதில் வல்லவராக இருந்தார். "இந்தச் சிறிய தலையில் எப்படி இவ்வளவு அறிவுத் திறன் இருக்கக் கூடும்?" என்று அந்தக் கிராமத்து பாமர மக்கள் அதிசயித்தனர். ராமசாஸ்திரிக்கு தன் அறிவுத் திறனில் அளவுக்கு மீறிய கர்வமும் இருந்தது.

ஒரு நாள் ஆற்றின் மறு கரையில் அமைந்துள்ள ஒரு சிற்றூரில் வாதப்போர் ஒன்று நடைபெறவிருந்தது. வெற்றி பெறுபவருக்கு பெரும் பரிசும் வழுங்கப்படும் என்றும் அறிவித்திருந்தார்கள். அந்த வாதத்தில் கலந்து கொள்ள விரும்பிய பண்டிதர் படகுத் துறைக்கு வந்து படகுக்காரனோடு வாதம் செய்து மிகச் சொற்ப பணத்துக்கு படகை அமர்த்திக் கொண்டு பயணம் செய்ய ஆரம்பித்தார். ஓடத்தில் அவர் ஒருவரே பயணம் செய்தமையால் பொழுதைக் கழிக்க வேண்டி ஓடக்காரனோடு பேச்சுக் கொடுக்கலானார். தான் பலசாஸ்திரங்கள் கற்றது பற்றியும், கற்றோர் பலரை வாதத்தில் தான் வெற்றி கொண்டமை பற்றியும் ஓடக்காரனிடம்பெருமை பேசினார்.



"அன்பனே எவ்வளவு கற்க முடியுமோ அவ்வளவையும் கற்று அறிவதுதான் என வழ்வின் குறிக்கோளாகும்" என்று கூறிவிட்டு ஓடக்காரனைப் பார்த்து "நீ என்னென்ன விடயங்களையெல்லாம் கற்றிருக்கிறாய்?" என்று இறுமாப்புடன் கேட்டார் பண்டிதர். ஓடக்காரன் மிகப் பணிவுடன் "ஐயா நான் கல்வி அறிவு இல்லாதவன். ஆனால் தினமும் இறைவனை மட்டும் வழிபட்டு வருகிறேன்" என்றான். "அது போதாது. கலைகளைக் கற்றிருக்கிறாயா? அறுபத்து நான்கு கலைகள் இருக்கின்றன. உனக்குத் தெரியுமா? அவற்றில் ஒன்றிரண்டையாவது நீ கற்க வில்லையா?" என்று வினாக்களை அடுக்கிக் கொண்டே போனார். ஓடக்காரன் அவரைப் பார்த்து மிகப் பணிவாக அப்படி எந்தக் கலை பற்றியும் நான் கேள்விப் பட்டதில்லை ஐயா" என்றான். "சரி அப்படியானால் நீ உன் வாழ் நாளில் கால் பகுதியை வீணடித்து விட்டாய். சரி உன்னதமான பகவத்கீதையையாவது படித்த துண்டா?" என்று பண்டிதர் மேலும் கேட்க, ஓடக்காரன் மிகவும் வெட்கமடைந்து தலையைத் தாழ்த்திக் கொண்டு "ஐயா கீதை பற்றி நான் எதுவும் அறியேன்" என்றான். "அப்படியானால் உன் வாழ்க்கையில் பாதி நாள்களை வீணாக்கி விட்டாய்" என்றார் ஒரு ஏளனச் சிரிப்புடன். சில நிமிடங்கள் சென்றன. பண்டிதர் விடுவதாக இல்லை. "சரி இராமாயணம், மகாபாரதம் இந்த மாதிரி ஏதாவது படித்துள்ளாயா? என்றார். ஓடக்காரன் பதில் கூறவில்லை. "அப்பனே உனக்காக நான் வருத்தப்படுகிறேன். நீ உன் வாழ்வில் முக்கால் பகுதியை வீணாக்கி விட்டாய். எஞ்சியுள்ள காலத்திலாவது ஏதாவது கற்றுக் கொள்ள முயற்சி செய்" என்றார் பண்டிதர். ஓடக்காரனோ கவலையுடன் காணப்பட்டான்.

இவ்வாறு இவர்கள் பேசிக் கொண்டிருக்கையில் புயல் வீசத் தொடங்க படகு அக்காற்றில் கவிழ்வது போல ஆடியது. அப்போது ஓடக்காரன் "ஐயா இந்தப்ய புயலுக்கு படகு தாங்காது. இப்பொழுதே நாம் படகில் இருந்து வெளியேற வேண்டும். உங்களுக்கு நீந்தத் தெரியுமல்லவா? என்று கேட்டான். "ஐயோ என்னால் சிறிது கூட நீந்தத் தெரியாதே! நீச்சல் கற்றுக் கொள்ள எனக்கு நேரமே இருக்கவில்லை"என்று கத்தினார். "ஐயா! கொஞ்சமாவது உங்களுக்கு நீச்சல் தெரிந்தால் உங்களை நான் காப்பாற்ற முடியும். நான் உத்தமமான நூல்களைக் கற்காமல் என் வாழ்வின் முக்கால் பங்கை வீணாக்கி விட்டேன். எனக்கு நீந்த மட்டும் தெரிந்ததால் என்னை நான் காப்பாற்றிக் கொள்வேன். ஆனால் இவ்வளவும் கற்று உங்கள் வாழ்நாள் முழுவதையும் நீங்கள் வீணடித்து வீட்டீர்களே" என்று கூறி ஓடக்காரன் நீந்திக்கரை சேர்ந்தான். பண்டிதர் ஆற்றோடு அடித்துச் செல்லப்பட்டார்.

**வாழ்க்கைக்குப் பயன்படுவதே கல்வி.**
**உண்மையான கல்வி பணிவினைத் தோற்றுவிக்குமே தவிர ஆணவத்தைத் தராது.**



## சுற்றுலாவின் பயன்கள்

- பாடசாலை என்ற அழகிய பூங்கா தான் பிள்ளையின் எதிர்கால வாழ்வை நிர்ணயிக்கும் கல்விக் கூடம்.
- ஆரம்பம் முதல் பிள்ளைகள் படிப்புடன் நின்று விடாமல் அனுபவ அறிவுகளைப் பெறும் நோக்கோடு பிள்ளைகளைப் பல இடங்களுக்கும் அழைத்துச் செல்வது பாடசாலைகளின் வழக்கமாகும்.
- அவ்வகையில் ஆசிரியர்களுடன் மாணவர்கள் சுற்றுலா சென்று பல இடங்களையும் பார்ப்பதால் பலவற்றை அறியவும் அறிந்தவற்றைப் பயன்படுத்தவும் செய்முறைகள் ஆக்கத்துக்கும் சுற்றுலாக்கள் உறுதுணை புரிகின்றன.
- சுற்றுலாக்களின் போது தங்கும் விடுதிகளில் (காம்பில்) பிள்ளைகள் பயம் களைந்து துணிவுடன் கடமைகள் ஆற்றப் பழகுவார்கள்.
- நேரத்துக்குச் செய்ய வேண்டிய கடமைகள் பழக்கவழக்கங்கள் பலவித விளையாட்டுக்கள், நெருப்பை உருவாக்கல், உடைகள் சலவை செய்தல் போன்றவற்றை சிறுவர்கள் தெரிந்து கொள்ள முடிகிறது.
- பல போட்டிகளில் பங்கு பெறவும் மகிழ்ச்சியான நிகழ்வுகளில் கலந்து கொண்டு சிறப்பிக்கும் தன்மையும் வளர்ச்சியடையும்.
- சுற்றுலாவின் போது பெற்றோரை விட்டு பிள்ளைகள் வேறு இடங்களில் நின்றாலும் தன்னம்பிக்கையுடனும் துணிவுடனும் காரியங்களை ஆற்ற இத்தகைய சந்தர்ப்பங்கள் கைகொடுக்கின்றன.
- பிள்ளைகளின் ஆளுமைப் பண்பு வளர்கிறது.
- பிள்ளைகள் தாமாகவே சில வேலைகளைச் செய்யும் போது மனதிலே உறுதியும் ஆர்வமும் அனுபவமும் பிறக்கிறது.
- கூடி வாழும் போது விட்டுக்கொடுப்பு, பகிர்ந்து உண்ணல் பகிர்ந்து கடமைகளைச் செய்தல் ஒற்றுமை, மன்னித்தல் போன்ற பண்புகள் வளர்கின்றன.
- தனியே பாடசாலைப் படிப்பு அறிவை மட்டுமே வளர்க்கிறது.
- வெளியிடங்களில் சென்று பெறப்படும் கல்வியால் பல முயற்சிகள் செய்யும் ஆக்கத்திறன் வளர்கிறது.
- குறித்த வேலையைத் தன்னால் செய்து முடிக்க முடியும் என்ற தன்னம்பிக்கையும், அதனைப் பற்றி மற்றப்பிள்ளைகளுக்கு எடுத்துக் கூறும் தன்மையும் பிள்ளைகளிடம் வளரும்.

## ஆபத்து வேளையில்...!



பட்ட மரம் ஒன்றில்
பொந்து துளைத்தங்கே
முட்டைகள் இட்டதோர்
பச்சைக்கிளி

சின்னச் சின்னக் குஞ்சு
நான்கு பொரித்ததும்
இன்பத்தில் மிதந்தது
பச்சைக்கிளி

காட்டிடை சென்று
நாளும் தேடிக்குஞ்சை
ஊட்டி வளர்த்தது
பச்சைக்கிளி

குஞ்சுப் பிள்ளைகளை உண்ண
வந்ததோர் பூனை கண்டு
அஞ்சி நடுங்கிற்றுப்
பச்சைக்கிளி

மரத்திலே தாவி
ஏறிய பூனை கண்டு
உரத்து அழுதந்தப்
பச்சைக்கிளி



அம்மாக் கிளியதன்
அவலக் குரல் கேட்டு
கம்புடன் வந்தானோர்
தம்பி ஓடி

காட்டுப் பூனையதைத்
தம்பி விரட்டவே
ஓட்டம் எடுத்தது
காட்டை அடைந்தது

ஆபத்து வேளையில்
கைகொடுத்துக் காத்தல்
நலன்கள் யாவிலும்
நற்செயல் நண்பரே!

## பழமொழிகளும் கருத்துக்களும்



1. அழுத பிள்ளை பால் குடிக்கும்.
   *முயற்சி செய்தவர் பயன் பெறுவர்.*
2. இரக்கப் போனாலும் சிறக்கப் போ.
   *வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்.*
3. பேராசை பெருந்தரித்திரம்.
   *எல்லை கடந்த ஆசை துன்பம் தரும்.*
4. முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்.
   *விடாது முயற்சி செய்தால் வெற்றி கிட்டுவது நிச்சயம்.*
5. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.
   *சந்தர்ப்பத்தைத் தவற விடக் கூடாது.*
6. நாமொன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைத்தது.
   *எண்ணிய படி எதுவும் நடப்பதில்லை.*
7. விளையும் பயிரை முளையில் தெரியும்.
   *ஒருவனின் சிறு வயதுப் பழக்கங்களை வைத்து அவனைப் பற்றி மதிப்பிடலாம்.*
8. அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய்.
   *பயமுள்ளவனை எல்லாப் பொருளும் பய முறுத்தும்.*
9. ஆத்திரக் காரனுக்கு புத்தி மத்திமம்.
   *கோபம் வருமிடத்து நிதானம் குறைந்துவிடும்.*
10. தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரை.
   *இளைமையில் பழகும் பழக்கங்கள் முதுமை வரையும் நிற்கும்.*

## வர்ணம் தீட்டுவோம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கடை வாடகைக்கு

Cargills Square எதிரில் கடை வாடகைக்கு உண்டு. (மகாத்மா காந்தி வீதி)

**தொடர்பு- 076 980 3935**

## பணிப்பெண் தேவை

சமையல் உட்பட வீட்டு வேலைகளை வீட்டில் தங்கி நின்று பணிபுரிய 30 வயதிற்குட்பட்ட பணிப்பெண் உடன் தேவை.

வடமராட்சியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு - **021 226 0277**

**கந்தமுருகேசனார் வீதி.**
**புலோலி தெற்கு. புலோலி.**

## மரண அறிவித்தல்



### லோகநாதன் ஜெகநாதன்
**(ஜெகன்)**

கிளிநொச்சி திருவையாறு 2ஆம் பகுதியைப் பிறப்பிடமாகவும், தருமபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட லோகநாதன் ஜெகநாதன் நேற்று (31.07.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் லோகநாதன் - பத்மலோஜி தம்பதியரின் அன்புமகனும் பிரியாவின் அன்புக்கணவரும் அபிசன், ருக்சி ஆகியோரின் அன்புத்தந்தையும் குணரத்தினம் - தனலட்சுமி ஆகியோரின் பெறாமகனும் பத்மநாதன், பிரதீபா, லோகதீபா ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2017) செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணியளவில் கொழும்புத்துறையில் உள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொழும்புத்துறை இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**தோற்றம்** 27.03.1952 — **மறைவு** 31.07.2017

### பொன்னுத்துரை பாலகிருஷ்ணன்
**( Retaired Assistant Field Officer - UNHCR)**

யாழ்ப்பாணம் நீராவியடியைப் பிறப்பிடமாகவும், சுண்டுக்குளி, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பாலகிருஷ்ணன் நேற்று (31.07.2017) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் லீலாவதி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் லோகநாயகி தம்பதியரின் அன்புமருமகனும் செல்வலோஜினியின் அன்புக்கணவரும் கிருஷாந்தன், அபர்ணா ஆகியோரின் பாசமிகு தந்தையும் துஷ்யந்தனின் அன்புமாமனாரும் காலஞ்சென்ற தம்பையா கணேசனின் சம்பந்தியும் கிரிஷாவின் அன்புப் பாட்டனாரும் வசந்தா, பாலேந்திரன், வனிதா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரட்ணமோகன் வானதி, வசந்தன் (கல்யாணி), விபுலஸ்கந்தா, நிர்மலா இரவீந்திரகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(01.08.2017) செவ்வாய்க் கிழமை மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 5 மணிவரை பொரளை ஜெயரட்ண மலரச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு (02.08.2017) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் ஈமக்கிரியைகள் நடைபெற்று இறுதிக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் பொரளை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**கணேஷன் துஸ்யந்தன். 077 3506372**

## காணி விற்பனைக்குண்டு



யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் கிழக்குப்பகுதி புத்தூர் கோவில் பற்று அச்செழு இறையில் அமைந்துள்ள நி.பர 51 குளி 7.79 விஸ்தீரணம் கொண்ட ஆதனம் விற்பனைக்குண்டு.

தொடர்பு -
**S.Sansipan - 077 500 5223**
**K. Maniyam - 077 405 0635**

## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபை வருமதி சென்மதி மீதிகளை உறுதிப்படுத்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் கட்டளையின் அடிப்படையில் 25.07.2017 மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபை நடவடிக்கைகள் யாவும் பெறுநர் குழுவினால் கையேற்கப்பட்டுள்ளது.

அதனால் 25.07.2017 திகதிக்கு முன்னர் ஆலய தர்மகர்த்தா சபையுடன் பல்வேறு தரப்பினாலும் மேற் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் விளைவாக உருவாகிய வருமதி மற்றும் சென்மதி மீதிகளை உறுதிப் படுத்தி முடிவுறுத்த தீர்மானிக்கப் பட்டுள்ளமையினால்,

தர்மகர்த்தா சபையுடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற் கொள்ளப்பட்டு (கூலி, மூலப்பொருள் விநியோகம், சம்பளம் கடனாக வழங்கல், முற்பணம் வழங்கல், பெறல்) அதன் விளைவாக வருமதியாக அல்லது சென்மதியாக உள்ள மீதிகளை அவற்றுக்கான ஆதாரங்களின் நகல் பிரதிகளுடன் 15.08.2017 இற்கு முன்னர் பெறுநர் குழுவிற்கு கிடைக்கக்கூடியதாக மேற்படி ஆலயத்தில் இயங்கும் பிரதேச செயலக அலுவலர்களிடம் (அலுவலக நாள்களில் காலை 9 - பி.ப. 1 மணி வரை) நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலம் பெறுநர் குழு, மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம், மானிப்பாய் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் சென்மதி மற்றும் வருமதிகளினை தீர்வு செய்யமுடியாத நிலை காணப்படும் என்பதுடன் அவற்றுக்குத் தாங்களே பெறுப்பாவீர்கள்.

**பெறுநர் குழு.**
**மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம், மானிப்பாய்.**

## சாவகச்சேரி பிரதேச சபை
## குறித்தொதுக்கப்பட்ட மாகாண நன்கொடையின் கீழாக வேலைத்திட்டத்திற்கான கேள்விகோரல்

01. தலைவர், பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை, தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட கட்டுமாண வேலைகளுக்காக கோருகின்றார்.
02. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு,வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும்,அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் (தொலைபேசி:021-373 4825, 021-2050356, தொலைநகல்: 021-2050356, மின்னஞ்சல் - chavakachcherips1@yahoo.com) இல் இருந்து 24.08.2017 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வேலைநாள்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ளகேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் தவிசாளர்/செயலாளர்,சாவகச்சேரி பிரதேசசபை கொடிகாமம் எனும் இடத்திலிருந்து 02.08.2017 ஆம் திகதியிலிருந்து 24.08.2017வரை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/-(வரிநீங்கலாக)செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகைப் பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
07. கேள்வி இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலம் தவிசாளர்/ செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை கொடிகாமம் எனும் முகவரிக்கு 24.08.2017 திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித்திகதியில் இருந்து63 (அறுபத்தி மூன்றுநாள்கள் .26.10.2017. ) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்
09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் (வீதி) | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(6)/2/C.F/ 2017/6(R) | சந்தைவீதி-கொடிகாமம் | 3.040 | 3மாதம் | C8 | 30500.00 | 23.11.2017 |

01. கேள்விதாரர்களுக்கான முன்கலந்துரையாடல் 12.08.2017ஆம் திகதி 14.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எவ்விதக் கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகாரபெறுகைக்குழு,**
**சாவகச்சேரிபிரதேச சபை, கொடிகாமம்**
**01.08.2017**

## மரண அறிவித்தல்

### கந்தையா ஸ்ரீஸ்கந்த தாஸ் (தவம்)

வட்டுக்கோட்டை கிழக்கு, வட்டுக்கோட்டையை பிறப்பிடமாக கொண்ட கந்தையா ஸ்ரீஸ்கந்த தாஸ் (தவம்) கடந்த (30.07.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சியாமளாவின்(சியா) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா அன்னலெட்சுமி அம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராஜ் கமலாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான சத்தீயசீலன்,சந்திரதாஸ் மற்றும் சந்திரலேகா, சித்திரலேகா ஆகியோரின் சகோதரனும் ரட்ணசிவா,சர்மிலா, ரவீந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்காக 11/2, Schofield Place, Colombo - 3 இல் இன்று (01.08.2017) செய்வாய்க்கிழமை 3 மணிதொடக்கம் வைக்கப்பட்டு 02.08.2017 புதன்கிழமை பி.ப 12.30 மணியளவில் Cortege leaves residence இல் வைக்கப்பட்டு பி.ப 5.30 மணியளவில் பொறளை பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும்.

**11/2, Schofield Place,**
**Colombo - 3**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி சரவணமுத்து



தோற்றம் 07.07.1932 — மறைவு 30.07.2017

வரணி வடக்கு, தம்பானையைப் பிறப்பிடமாகவும் தற்போது குடமியன், கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சரவணமுத்து கடந்த (30.07.2017) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை ·சரவணமுத்துவின் (கிராமசபைத் தலைவர்) மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் கமலநாயகி ஆகியோரின் சகோதரியும் விமலாதேவி, கமலபூரணநிர்மலாதேவி, காலஞ்சென்ற தெய்வேந்திரகுணசிங்கம், சிவசோதி (தாதி) சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலை), சிவாஸ்வரி (ஆசிரியை, யா/இணுவில் இந்துக்கல்லூரி), சிவனேசன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சுப்ரமணியம் காலஞ்சென்ற தெய்வேந்திரம் சாந்தகுமாரி, நவநாதன் (உரிமையாளர், யாழ் அப்பலோ வைத்தியசாலை), தனஞ்செயன் (ஆசிரியர், யாழ். ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), ஷைலஹி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் யசோதரன், சுஜீவா, மணிமாறன், இரவீந்திரன் கஜேந்திரன், பகீரதன், மயூரன், ஜெயசுதன், கர்ஷன், அனுஜன், விதுஜன் ஹம்ஷா, பைரவி, உத்தரா, வனஜன், கோபிதன் ஆகியோரின் பேர்த்தியும் ஆகாஷின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2017) செவ்வாய்க்கிழமை கொடிகாமத்திலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப.10.00 மணியளவில் பூதவுடல் குடமியன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குடமியன்,**
**கொடிகாமம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!*

## மரண அறிவித்தல்



### சீனிவாசகம் பாலகிருஷ்ணன் (ஆச்சாரியர்)

நல்லூர், முத்திரைச்சந்தியைப் பிறப்பிடமாகவும் சங்குவேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சீனிவாசகம் பாலகிருஷ்ணன் 31.07.2017 இறைபதம் அடைந்தார்.

அன்னார் சீனிவாசகம் நாகம்மா தம்பதியரின் சிரேஷ்ட மகனும் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
**077 803 6261** **குடும்பத்தினர்.**

## படையினருக்கு...

இதை அரசு கண்டுகொள்ளவில்லை என்றும் மகிந்த அணியின் நாடாளு மன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரி வித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு, யாழ்ப்பாண வாள்வெட்டுச் சம்பவம் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார். "யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டுச் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றன. இது குறித்து கவனம் செலுத்தப்படவில்லை. தற்போது பொலிஸ் அதிகாரிகளையே தாக்கி வெட்டுமளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது. எனவே, வடக்கில் பாதுகாப்பு பலப்படுத்தப்படவேண்டும். அங்குள்ள படையினர், பொலிஸாரின் உயிர் குறித்து அரசு கண்டுகொள்ளவில்லை. இனியும் அப்படி இருக்கமுடியாது" என்று அவர் மேலும் கூறினார். (த)

## மரண அறிவித்தல்

# திருமதி கமலாசனி சிற்றம்பலம்



தோற்றம் 15.11.1929 மறைவு 31.07.2017

வத்திராயன் தெற்கைப் பிறப்பிடமாகவும் மருதங்கேணி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாசனி சிற்றம்பலம் நேற்று (31.07.2017) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் கணபதிப்பிள்ளை வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சிற்றம்பலத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இந்திராதேவி மற்றும் சரோஜினிதேவி (மருதங்கேணி), திருஞானசம்பந்தன் (ஜேர்மனி), கருணாகரன் (டென்மார்க்), சபேசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆதிநாராயணன் காலஞ்சென்ற ஜெயரூபன் மற்றும் சாருமதி (ஜேர்மனி), ஜெயசீலி (டென்மார்க்), ஜெயலதா (ஆசிரியர் கற்கோவளம் மெதடிஸ்தமிசன் பாடசாலை), ஆகியோரின் அன்பு மாமியும் கஜன், ஜனகன் (ஜேர்மனி), நிசானி, சேயோன் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் வின்சனின் (டென்மார்க்) பூட்டியும் மாட்டீனின் (டென்மார்க்) அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2017) செவ்வாய்க்கிழமை மு.ப.11.00 மணியளவில் மருதங்கேணி வைத்தியசாலைக்கு அருகிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மருதங்கேணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**வைத்தியசாலை அருகில்,** **குடும்பத்தினர்.**
**மருதங்கேணி.** **077 942 3219, 077 058 4284, 077 314 8147**

## மரண அறிவித்தல்

# திருமதி பரிபூரணம் கந்தசாமி



புளியங்கூடல் தெற்கு, ஊர்காவற்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரிபூரணம் கந்தசாமி 29.07.2017 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை ஆச்சிமுத்து தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற மனோன்மணி செல்லத்துரை, காலஞ்சென்ற பகவதி, கணேஸ், காலஞ்சென்ற குமாரசாமி, தங்கம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் உதயபுத்திரன், புஸ்பராணி, அருள்ஆனந்தசிவம் (கனடா), விஜயலட்சுமி, பேரின்பராணி, சிவகௌரி (கனடா), கலைவாணி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற ராதா, நடேசன், நாகேஸ்வரி (கனடா), இராஜகுலநாயகம், குகராசா, மோகன் (கனடா), ஜெயகுலராசா (கனடா) ஆகியோரின் மாமியும் வினோசா, உஷாந்தினி, தர்ஷாயினி, சைலஜன், தமிழ்க்கனி, காலஞ்சென்றவர்களான தமிழ்ச்சோதி, தமிழ் வேந்தன் மற்றும் நெடுஞ்சேரன், குறளரசு, யாழினி, கௌந்தி, சிலம்பரசு, நிமலன், நிஷாந்தினி, நிறஞ்சன், நிருஷா, உசாந்தினி, தர்ஷிகா, கீர்த்திகா, நிதர்ஷனா, கஜீனா, துஷி, சஜி, ஆதவன், திவாஸ், தக்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2017) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருவில் (புளியங்கூடல்) இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**புளியங்கூடல் தெற்கு,**
**ஊர்காவற்துறை. 077 699 2020** **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



# திருமதி தவமணி முத்தையா

காரைநகரைப் பிறப்பிடமாகவும், சித்தங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி முத்தையா (29.07.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - அன்னம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற முத்தையாவின் அன்புமனைவியும் இராசரத்தினம் (சுவிஸ்), செல்வரத்தினம் (சுவிஸ்), ஈஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயும் இராசமலர் (சுவிஸ்), பாமினி (சுவிஸ்) காலஞ்சென்ற இராசேந்திரம் ஆகியோரின் அன்புமாமியும் சதீஸ் (சுவிஸ்), யுவர்னியா (கனடா), சுமன் (ஜேர்மனி), மதன், வாசுகி, வினோ, சானிகா, சகானி (சுவிஸ்) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் கிரீஸ், கிறிஸ்றிகா, அரிஸ் (சுவிஸ்), துஸ்யன் (கனடா) ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2017) செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
**077 938 6008, 077 285 0040**

## மரண அறிவித்தல்

# குணரத்தினம் கருணாகரராசா

வட்டுக்கோட்டை கிழக்கு, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் ரொரண்டோ, கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் கருணாகரராசா கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் மங்கையர்க்கரசி தம்பதியரின் அன்பு மூத்த மகனும் விசவர்த்தனை, பண்ணாகத்தை சேர்ந்த பொன்னம்பலம் (ஆசிரியர்) தம்பதியரின் பாசமிகு மருமகனும் கோமதியின் அன்புக் கணவரும் குமணன், குமுதினி ஆகியோரின் அன்புத் தந்தையும் நித்தியானந்தராசா, யோகமலர், இரத்தினராசா, குணராசா, ரஞ்சினி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.08.2017) புதன்கிழமை கனடாவில் இடம்பெறும்.

அவரது அஞ்சலி நிகழ்வு நாளை (02.08.2017) புதன்கிழமை வட்டுக்கோட்டை கிழக்கு, சித்தன்கேணியில் உள்ள அவரின் தந்தையின் இல்லத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வட்டுக்கோட்டை கிழக்கு,**
**சித்தன்கேணி.**

தகவல்: குடும்பத்தினர்.
**நித்தியானந்தராசா - 0014164 937 292,**
**திருமதி கோமதிகருணாகரராசா - 0014162 997 030**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறியலிலுள்ள...

சமர்ப்பிக்குமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம், யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகரைப் பணித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

நல்லூர் கோயில் பின்வீதியில் கடந்த சனிக்கிழமை, யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனை இலக்கு வைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில், அவரது மெய்ப்பாதுகாவலர் உயிரிழந்திருந்தார். சம்பவத்துடன் தொடர்புடைய முதன்மைச் சந்தேக நபர் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்திருந்தார். நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 8ஆம் திகதி வரையில் யாழ்ப்பாணம் மறியல் சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவரைப் பார்ப்பதற்கு அவரது மனைவி கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மறியல்சாலைக்குச் சென்றுள்ளார். அவர் கொண்டு சென்ற பார்சலில் 'ரெஸ்ரர்' இருந்துள்ளது. இதனையடுத்து அவர் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம், யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகரைப் பணித்துள்ளார். (து-5-8)

## விக்னேஸ்வரன்...

முன்வைக்கத் தொடங்கியுள்ளனர். பத்திரிகைகள் செய்திகளைத் திரித்தும் மறைத்தும் மிகைப்படுத்தியும் வெளியிடுவதாக குற்றச்சாட்டுக்களைப் பகிரங்க மேடைகளில் வெளிப்படுத்தியுள்ளனர்.

பருத்தித்துறை, திக்கத்தில் நேற்று முன்தினம் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது. இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், பத்திரிகைகள் செய்திகளைத் திரித்தும் மறைத்தும் வெளியிடுவதாகச் சாடியிருந்தார். தமது கருத்துக்களை உரிய வகையில் வெளியிடுவதில்லை என்றும் அவர் குற்றச்சாட்டு முன்வைத்திருந்தார்.

இந்த நிலையில், மட்டுவிலில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸவரனும் பத்திரிகைகள் மீது பாய்ச்சல் நடத்தியிருந்தார். 'கட்சிகளுக்கிடையே, தலை வர்களுக்கிடையே, அங்கத்தவர்களுக்கி டையே கருத்து வேறுபாடுகள் உருவாவது தவிர்க்க முடியாதவை. வேறுபாடுகளை மிகைப்படுத்திப் பத்திரிகைகள் செய்தி வெளியிடுகின்றன' என்ற சாரப்பட உரையாற்றியிருந்தார்.

முதலமைச்சர் விக்னேஸ்வரனும், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும், ஒருவருக்கொருவர் முரணான வகையில் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதுடன், பகிரங்கமாகவே ஒருவரை ஒருவர் தாக்கி வந்தாலும், பத்திரிகைகள் மீது சமநேரத்தில் பாய்ச்சலை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-5)

## இருநாள்களில்...

மற்றும் பொலிஸ் அதிகாரி மீதான தாக்குதல்கள் உள்ளிட்ட வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டிலேயே கடந்த 2 நாட்களில் 12 பேர் கைது செய்யப்பட்டனர்.

பருத்தித்துறைப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் நேற்று முன்தினம் 5 பேரும், நேற்றையதினம் 5 பேருமாக 10 பேர் கைது செய்யப்பட்டனர். நெல்லியடிப் பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில் நேற்றையதினம் 2 பேர் கைது செய்யப்பட்டனர். பொலிஸ் வாகனங்களை சேரதப்படுத்தியது. இவர்கள் துன்னாலை, குடவத்தை, பொன்னகர் பகுதிகளைச் சேர்ந்தவர்கள். வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்கள் இருவர் ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். 12 பேரும் பருத்தித்துறை நீதிவான் மன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

வடமாட்சிப் பகுதிகளில் வழமைக்கு மாறாக நேற்றையதினமும் பொலிஸார் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். வடமராட்சியில் அதிகரித்துள்ள வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு என காங்கேசன்துறை பொலிஸ் பிரிவின் மூத்த பொலிஸ் அத்தியேட்சகர் ரஞ்சித் மாரசிங்கவால் சிறப்புப் பொலிஸ் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-21-26)

## படுகாயமுற்ற...

மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர உத்தரவிட்டுள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்துக்குத் திடீர்ப் பயணம் மேற்கொண்ட பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கும் சென்றார்.

அங்கு சிகிச்சை பெற்றுவரும், கொக்குவில் பகுதியில் வாள்வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த கோப்பாய் பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரையும் அவர் பார்வையிட்டு உரையாடினார்.

படுகாயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்களில் மிகவும் மோசமான வெட்டுக் காயங்களுக்கு இலக்கான பொலிஸ் உத்தியோகத்தரான தம்மிக்க ரத்னாயக்கவை மேலதிக சிகிச்சைக்காக உலங்குவானூர்தி மூலம் கொழும்பு பொலிஸ் வைத்தியசாலைக்கு மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யுமாறு அவர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். (து-8-26)

## காணாமற்...

கூட்டு அரசு, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக அவர்களது உறவினர்களுக்குக் காணாமல் போனோர் சான்றிதழை வழங்குவதற்குரிய சட்டத்தை நிறைவேற்றியது. இந்தச் சான்றிதழ் இரண்டு ஆண்டுகளுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். இரண்டு ஆண்டுகளின் முடிவில் மீளவும் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

'வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டச் செயலகங்களிலிருந்தும் இதுவரையில் 79 விண்ணப்பங்களே கிடைக்கப் பெற்றுள்ளன. கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டது. விசாரணைகளில் 21 பேர் சான்றிதழ் பெறத் தகுதியானவர்கள் என்று கண்டறியப்பட்டது. 7 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 51 விண்ணப்பங்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன' என்று பி.பிரபாகர் குறிப்பிட்டார். (து-5-101)

## உயிரிழந்த...

15 லட்சம் ரூபாவை அவர்கள் செலவு செய்யவுள்ள தாகத் தெரியவருகின்றது.

யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலர் ஹேமச்சந்திர கடந்த 22ஆம் திகதி துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்திருந்தார். மெய்ப்பாதுகாவலரது பிள்ளைகளின் கல்விச் செலவையும் நீதிபதி மா.இளஞ்செழியன் பொறுப்பேற்பதாக அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் 1981ஆம் ஆண்டு நீதிபதி மா.இளஞ்செழியனுடன் கல்வி கற்ற அவரது நண்பர்கள், ஹேமச்சந்திரவின் வீட்டை மறுசீரமைத்துக் கொடுப்பதற்கு 15 லட்சம் ரூபாவை வழங்கவுள்ளனர்.

நீதிபதியின் நண்பரான பொறியியலாளர் ஒருவர் இந்த வாரம் அந்த வீட்டை மறுசீரமைப்பதற்கான மதிப்பீடுகளை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-5)

## வடக்குத்...

போகப் போக இன்னும் நடக்கும்"

இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

மக்கள் சந்திப்பு ஒன்றில் நேற்றுக் கலந்து கொண்டு கருத்துக் கூறுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு பொலிஸ் அலுவலர்கள் மீது நேற்று முன்தினம் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. அந்தச் சம்பவம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் தற்போது நடைபெறும் சம்பவங்கள் வெறும் ஆரம்பம் மட்டுமே. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு உருவாகும்போது ஆரம்பத்தில் இவ்வாறுதான் நடந்தது. அவர்கள் ஆரம்பத்தில் பொலிஸார் மீதுதான் தாக்குதல் நடத்தினார்கள். இப்போதும் அப்படித்தான் நடக்கின்றது. போகப் போக இன்னும் நடக்கும். இந்த அரசு இவற்றை கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றது.

இதேவேளை, அமைச்சர் ரவி கருணாநாயக்காகவுக்கு மாத்திரமல்ல ஒட்டுமொத்த அரசுக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரவேண்டும் - என்றார். (வ-5)

## புலி...

கிள்கள் சக்தி வாய்ந்தவை. ஒரு மோட்டார் சைக்கிளில் 3 பேர் இருந்தனர். ஒருவர் ஓடினார். ஏனைய இருவர் அமர்ந்திருந்தனர். இவ்வாறு இரு மோட்டார் சைக்கிள்கள். அவர்களின் கைகளில் வாள்கள் இருந்தன.

பொலிஸாரின் மோட்டார் சைக்கிளைக் கடந்து சென்று தமது மோட்டார் சைக்கிளைக் குறுக்கே நிறுத்தி அவர்களை மறித்து பலவந்தமாக அவர்களை இழுத்து எதுவுமே சொல்லாமல் இரு பொலிஸாருக்கும் அவர்கள் தங்களை ஏன் இடைமறிக்கிறார்கள் என்று எதுவுமே தெரியவில்லை. அவர்களுக்கு எல்லாமும் சூனியமாக இருந்தது. வந்தவர்கள் உடனே வெட்ட ஆரம்பித்து விட்டார்கள்.

அவர்களின் தாக்குதலால் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த பொலிஸார் நிலைகுலைந்து கீழே வீழ்ந்தார். அவருடைய வலது கையின் மேல் பக்கத்தில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. அதுபோன்று முழங்காலிலும் அதற்குக் கீழும் வெட்டுக் காயங்கள் ஏற்பட்டன. சில வெட்டுக் காயங்கள் அவர்களின் எலும்பு வரை சென்றுள்ளன. பின்னால் இருந்து வந்தவர் நிலமையைக் கொஞ்சம் சமாளித்துக்கொண்டு அந்த இடத்திலிருந்து தப்பியோட முயன்றார். ஆனால் அவரையும் துரத்திச் சென்ற அவர்கள் வெட்டினார்கள். அதனால் அவருக்கும் கையில் காயம் ஏற்பட்டது. அவர்களுக்கு அவசர அறுவைச் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. அவர்களின் நிலை கொஞ்சம் கவலைக்கிடமாகத்தான் இருக்கிறது. எனினும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைகள் திருப்திகரமாக உள்ளன.

தாக்குதலின்போது இரு மோட்டார் சைக்கிள்கள் மட்டும் அங்கிருக்கவில்லை. பொலிஸாரின் கூற்றுப்படி அங்கு 6 அல்லது 7 மோட்டார் சைக்கிள்கள் இருந்தன. அனைத்திலும் இரண்டு அல்லது மூவர் இருந்தனர். கிட்டத்தட்ட 15 பேர் வரையிலானோர் இருந்தனர். எல்லோருமே இளைஞர்கள். எனவே பொலிஸாரால் தப்பிக்க முடியவில்லை. அவர்கள் பெருங் குரலில் அவலமாகக் கத்தியதை அடுத்து தாக்குதலாளிகள் அங்கிருந்து வந்த வழியே திரும்பி ஓடிவிட்டனர்.

நாம் தாக்குதலின் நிலை தொடர்பில் அறிந்து கொண்டிருக்கின்றோம். இந்த தாக்குதல் அணியின் தலைவர் விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர் அத்தோடு ஆவா குழுவின் உறுப்பினரும்கூட என்று அடையாளப்படுத்தியிருக்கின்றோம். மற்றைய 6 பேரையும்கூட அடையாளப்படுத்தியிருக்கின்றோம். பொலிஸ் ரோந்து சோதனை சந்தேகப்படுபவர்களைக் கைது செய்வது சிறப்பு அதிரடிப் படையினரின் உதவி என்பவற்றுடன் சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

தாக்குதல் நடந்த பகுதியை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்குத் தேவை ஏற்படின் தரைப்படை கடற்படை வான்படை என்பவற்றின் உதவியையும் பெற்றுக்கொள்வோம்.

மக்கள் இலகுவாகவும் சுதந்திரமாகவும் நடமாடுவதற்கான வாய்ப்பைக் கொடுத்திருந்தோம். நிறையச் சந்தர்ப்பங்களையும் கொடுத்திருந்தோம். பாதுகாப்பைப் பலப்படுத்தியிருக்கவில்லை. பொதுமக்களுக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்தக்கூடாது என்று நினைத்தோம். அப்படியான அணுகுமுறையால்தான் இது நடந்தது. இந்த மாதிரியான போக்கு பொதுமக்களுக்குச் சாதகமானதாக இருக்காது. நான் நினைக்கின்றேன் பொது மக்கள், அரச பணியாளர்கள் அச்சமடைந்திருக்கிறார்கள். பொலிஸாரும்கூடப் பொறுமை இழந்திருக்கிறார்கள்.

நாங்கள் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் சம்பவங்கள் ஒன்றன் பின் ஒன்றாக நடைபெற்று வருகின்றன. இதனைத் தொடர்ந்து அனுமதிக்க முடியாது. மக்கள் அமைதியோடும் இணக்கத்தோடும் வாழத்தக்க வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டிய பொறுப்பு பொலிஸாருக்கு இருக்கிறது. அதற்காக நாம் வெவ்வேறான அணுகுமுறைகளை, உத்திகளைக் கையாளப்போகின்றோம். அதனை இங்கிருந்து நானே ஆரம்பிக்கப் போகின்றேன். இங்கிருக்கும் பொலிஸ் அதிகாரிகள் ஏனைய பொலிஸாருக்கு எப்படித் தலைமைத்துவத்தை வழங்கவேண்டும், எப்படிக் கையாளவேண்டும் என்ன செய்யவேண்டும் என்பது பற்றியெல்லாம் இன்று நான் அவர்களுக்கு அறிவுரைகளை வழங்கவுள்ளேன். ஆயுதப் படைகள் மற்றும் சிறப்பு அதிரடிப் படையினரிடம் இருந்து எந்த வகையிலான உதவிகள் தேவைப்படும் என்பது பற்றியும் ஆராயவுள்ளேன்.

வரும் நாள்களில் கூட்டுச் சுற்றுக் காவல், கூட்டுத் தேடல் சோதனைகளை ஆரம்பிக்கப்போகின்றோம். பொதுமக்களின் ஆதரவும் உதவியும் இதற்குத் தேவை. தகவல் தருபவர்கள் யார் என்கிற விவரங்களை எக்காரணத்தைக் கொண்டும் வெளியே சொல்லமாட்டோம். எந்தவொரு சட்டவிரோத நடவடிக்கையை நீங்கள் கண்டாலும் உடனடியாகப் பொலிஸாருக்கு அறிவியுங்கள். அது மணல் கடத்தலாக இருக்கலாம், ஆள் கடத்தலாக இருக்கலாம், வழிப்பறி கொள்ளையாக இருக்கலாம் எதுவானாலும் அறிவியுங்கள்.

என்னுடைய தொலைபேசி இலக்கத்தைக்கூடத் தருகின்றேன். இப்படியான தகவல்கள் இருந்தால் உடனடியாக அறிவியுங்கள். 0717582222 என்ற இலக்கத்துக்கு அறிவியுங்கள். 0718592020 என்ற இலக்கத்துக்கும் அறிவிக்கலாம்.

எங்களுடைய பொறுமைக்கும் எல்லையிருக்கிறது. எங்களுடைய சார்ஜன்ட் ஒருவர் அண்மையில் உயிரிழந்திருக்கிறார். மேல் நீதிமன்ற நீதிபதியின் நம்பிக்கைக்குரிய பாதுகாவலராக இருந்த அவர் கொல்லப்பட்டார். அது தேவையற்ற ஒரு சம்பவம். தம்மைக் கட்டுப்படுத்த முடியாத குடிகாரர்கள் இதுபோன்றவற்றை உருவாக்கி விடுகிறார்கள். சில மாதங்களுக்கு முன்னர் மற்றொரு சம்பவமும் இடம்பெற்றது. இவையெல்லாம் நிறுத்தப்படவேண்டும். சட்டமும் ஒழுங்கும் காக்கப்படவேண்டும். எந்த விலை கொடுத்தும் சட்டமும் ஒழுங்கும் பாதுகாக்கப்படும். எல்லோருக்கும் ஒரே சட்டம்தான். எந்த இனமானாலும் மதமானாலும் கட்சியானாலும் எல்லோருக்கும் ஒரே சட்டம்தான். எனவே மக்கள் ஒத்துழைக்கவேண்டும்- என்றார். (உ)

## கிளி...

இழந்து வீதியின் நடுவே இருந்த தடுப்புக்களை உடைத்துச் சென்று வீதியின் மறுபுறம் சென்ற பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்பட்டது.

கப் ரக வாகனத்தில் பயணித்த நால்வர் காயமடைந்தனர். பேருந்தில் பயணித்த சிலர் சிறு காயங்களுக்குள்ளாகினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-6-35)

## பொலிஸ்...

குற்றச்சாட்டில் தேடப்பட்டுவரும் உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் பொலிஸ் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த பொலிஸ்மா அதிபர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் தொடர்புடைய உப பொலிஸ் பரிசோதகர் சுந்தரேஸ்வரன் சிறிகஜன் தலைமறைவாகிவிட்டார் என குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கடந்த மாதம் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் அறிக்கை முன்வைத்திருந்தனர். (வ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

**ரி-20 துடுப்பாட்டம்**

புதுக்குடியிருப்பு மத்திய சமூதாயக் கழகத்தினால், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து அழைக் கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான ரி-20 துடுப்பாட்டத் தொடர், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகிறது. இன்று திங்கட் கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் டைமன்ட் விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து புதுக்குடியிருப்பு மத்திய சமுதாயக் கழக 'பி' அணி மோதவுள்ளது. பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் ஆட்டத் தில் புதுகுடியிருப்பு மத்திய சமுதாயக் கழக 'ஏ' அணியை எதிர்த்து பரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**திக்கம் மத்தியின் கால்பந்துத் தொடர்**

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட் டத்தில் நெடியகாடு விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கருணாகரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நசரேத் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரணவாய் மத்திய விளை யாட்டுக் கழக அணி மோதவுள்ளது.



**சரஸ்வதி ச.ச.நி. கரப்பந்தாட்டம்**

கைதடி தெற்கு சரஸ்வதி சனச மூக நிலையத்தின் 62ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மோகனதாஸ் விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி மத்திய வளர்மதி விளை யாட்டுக் கழக அணி மோதவுள் ளது. இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கச்சாய் வெளிகின்ஸ் விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து சீமா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23-422-108)




அரியாலை பிறிமியர் லீக் துடுப்பாட்டத் தொடருக்கான வெற்றிக் கிண்ணமும், தொடரில் பங்குபற்றும் அணிகளுக்கான ஜேர்சி அறிமுகம் செய்யும் நிகழ்வும் அரியாலை சிறி கலை மகள் சனசமூக நிலைய அரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. (ம-23)

## 2ஆவது டெஸ்ட் நாளைமறுதினம்

இலங்கை - இந்தியா அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்க ளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் கொழும் பில் நாளைமறுதினம் ஆரம்பமா கவுள்ளது.

காலியில் முடிவடைந்த முதலா வது ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிபெற்றது. இரண்டாவது ஆட்டத்தில் வென்றால் மட்டுமே மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் வரை தொடரில் தனது இருப்பைத் தக்க வைக்கக்கூடிய நிலை இலங்கைக்கு ஏற்படும். இதனால் கொழும்பு டெஸ்ட் ஆட்டம் இலங்கைக்கு அதிகளவில் நெருக்கடிகளைக் கொடுத்துள்ளது. காய்ச்சல் காரணமாக விலகியி ருந்த இலங்கை அணித்தலைவர் சந்திமல் இந்த ஆட்டத்தில் களமி றங்குகிறார். ஆனார் காயம் கார ணமாக ஹேரத் களமிறங்குவது சந்தேகத்துக்கு உரியதாக மாறி யுள்ளது. (ம)



## பலாலி விண்மீன் அரையிறுதிக்குள்

யாழ்ப்பாணம், ஓக. 1

உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழ கம் மின்னொளியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் பலாலி விண்மீன் அணி அரையிறுதிக் குத் தகுதி பெற்றது.

உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக அணி மோதியது. விண்மீன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. அரையிறுதி யில் விண்மீன் அணியும், நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியும் மோதவுள்ளன. (ம-23)

# சென். ஆன்ஸ் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஓக. 1

வலைப்பாடு சென். ஆன்ஸ் திரு விழாவை முன்னிட்டு வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழகத் தினால் நடத்தப்படும் 'கொன்சல் வேஸ்' வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் வலைப் பாடு சென். ஆன்ஸ் அணி கிண் ணம் வென்றது.

ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக மைதானத்தில் தொடரின் ஆட்டங் கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் வலைப்பாடு சென். ஆன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அந்தோனியார் புரம் சென். அன்ரனிஸ் விளையாட் டுக் கழக அணி மோதியது.

முதற்பாதியின் முடிவு வரை இரு அணிகளும் எந்தக் கோலையும் பதிவுசெய்யவில்லை. இரண்டாம் பாதியும் கோல்கள் இல்லாமல் நகர்ந்தது. ஆட்டம் முடிவதற்கு 3 நிமிடங்கள் இருக்கையில் வலைப் பாடு சென். ஆன்ஸ் அணியின் வீரர் லீனஸ் முதல் கோலைப் பதிவு செய்தார். முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் சென். ஆன்ஸ் அணி வெற்றிபெற்றது.

சிறந்த வீரராக வலைப்பாடு சென். ஆன்ஸ் அணியின் லீனஸ், சிறந்த கோல்காப்பாளராக அந்தோனியார் புரம் சென். அன்ரனிஸ் அணியின் ஆகாஸ் ஆகியோர் தெரிவானார் கள். (ம-23)

## யாழ். இளைஞர்மன்ற அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஓக. 1

இளைஞர் சேவை மன்ற அணிக ளுக்கு இடையிலான தேசியமட்ட கால்பந்தாட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட இளைஞர் சேவை மன்ற அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

பதுளை வின்ச நெற் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற அரையிறுதி யாட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட இளைஞர் சேவை மன்ற அணியை எதிர்த்துக் களுத்துறை இளைஞர் சேவை மன்ற அணி மோதியது.

கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் ஆரம்பத்தில் களுத்துறை இளைஞர் சேவை மன்ற அணி யின் சார்பாக முதலாவது கோல் பதிவானது. அடுத்த இரண்டு நிமி டத்தில் பதிலடி கொடுத்தது யாழ்ப் பாண மாவட்ட இளைஞர் சேவை மன்ற அணி. ரஜித் இந்தக் கோலைப் பதிவுசெய்தார். வேறெந்த மாற்றங் களும் ஏற்படவில்லை. இதனால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண் டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பா ணம் மாவட்ட இளைஞர் சேவை மன்ற அணி வெற்றிபெற்று இறுதி யாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-422)





இலங்கை கால்பந்தாட்டச் சம்மேள னத்தால் நடத்தப்பட்ட எவ்.ஏ. கிண்ணத் தொடரில் பங்குபற்றிய பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்குக்கு உட்பட்ட 15 கழகங்க ளுக்கு தலா 5 பந்துகள் வீதம் இலங் கைக் கால்பந்தாட்டச் சங்கத்தால் அண்மையில் வழங்கப்பட்டது. அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கழகங் களுக்கான பந்துகள் கையளிக்கப் பட்டன. (ம-108)

## சத்தப்பந்து துடுப்பாட்டம்

வடமாகாண சிறப்புத் தேவையுடையவர்களுக்கு இடையிலான விளை யாட்டு விழாவின் ஓர் அங்கமான விழிப்புலன் அற்றவர்களுக்கு இடை யிலான சத்தப் பந்து துடுப்பாட்டம் இன்று நடைபெறவுள்ளது.

ஸ்ரான்லிக் கல்லூரியில் இன்று காலை 10 மணிக்கு இடம்பெறும் இந்தத் தொடரில் வடக்கு மாகாணத்தில் இருந்து இரண்டு அணிகள், கிழக்கு மாகாணத்தில் இருந்து ஓர் அணி என மொத்தமாக மூன்று அணிகள் பங்குபற்றுகின்றன. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹற்ரிக் படைத்தார் மொயின் அலி

நான்கு ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரின் முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றிபெற்றது. இரண்டாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றது. நேற்று முடிந்த மூன்றாவது ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றுள்ளது. நான்காவது ஆட்டம் மன்செஸ்டரில் எதிர்வரும் 4ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றிபெற்றாலோ அல்லது ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தாலோ இங்கிலாந்து அணி கிண்ணம் வெல்லும். மாறாக தென்னாபிரிக்கா வெற்றிபெற்றால் தொடர் சமநிலையில் முடிவடையும். மொத்தத்தில் இறுதி டெஸ்ட்டைப் பொறுத்தவரை தென்னாபிரிக்க அணிக்கு வாழ்வா சாவா நிலை ஏற்பட்டுள்ளது.

# இங்கிலாந்து மிகப்பெரும் வெற்றி!

தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் 239 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மிகப்பெரும் வெற்றிபெற்றது இங்கிலாந்து அணி.

தென்னாபிரிக்க அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது.

இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, சகல இலக்குகளையும் இழந்து 353 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஸ்ரோக்ஸ் 112 ஓட்டங்களையும், அலிஸ்டர் குக் 88 ஓட்டங்களையும், பரிஸ்ரெளவ் 36 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மோர்கல், ரபாடா இருவரும் தலா 3 இலக்குகளையும், பிளன்டர் 2 இலக்குகளையும், மகாராஜ், மொறிஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்கா அணி வெறும் 175 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது. அதிகபட்சமாக பவுமா 52 ஓட்டங்களையும், ரபாடா 30 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அறிமுக வீரரான றோலன்ட் ஜோன்ஸ் 5 இலக்குகளையும், அண்டர்சன் 3 இலக்குகளையும், புரோட், ஸ்ரோக்ஸ் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

178 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி 8 இலக்குகளை இழந்து 313 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக பரிஸ்ரெளவ் 63 ஓட்டங்களையும், வெஸ்லி 59 ஓட்டங்களையும், ரூட் 50 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மகாராஜ் 3 இலக்குகளையும், மொறிஸ் 2 இலக்குகளையும், மோர்கல், ரபாடா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

492 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 252 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து 239 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது. எல்கர் 136 ஓட்டங்களையும், பவுமா 32 ஓட்டங்களையும், மகாராஜ் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மொயின் அலி 4 இலக்குகளையும், றொலன்ட் ஜோன்ஸ் 3 இலக்குகளையும், ஸ்ரோக்ஸ் 2 இலக்குகளையும், புரோட் ஓர் இலக்கையும் ஃகைப்பற்றினர்.

நான்கு ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரின் முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றிபெற்றது. இரண்டாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றது. நேற்றுமுடிந்த மூன்றாவது ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றிபெற்றுள்ளது. நான்காவது ஆட்டம் மன்செஸ்டரில் எதிர்வரும் 4ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றிபெற்றாலோ அல்லது ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தாலோ இங்கிலாந்து அணி கிண்ணம் வெல்லும். மாறாக தென்னாபிரிக்கா வெற்றிபெற்றால் தொடர் சமநிலையில் முடிவடையும். மொத்தத்தில் இறுதி டெஸ்ட்டைப் பொறுத்தவரை தென்னாபிரிக்க அணிக்கு வாழ்வா சாவா நிலை ஏற்பட்டுள்ளது. (ம)

# புஜாரா 50

இந்திய அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரரான புஜாரா தனது 50ஆவது டெஸ்ட் ஆட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறார்.

இந்திய அணி இலங்கைக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ளது. காலியில் நடைபெற்ற ஆட்டம் புஜாராவுக்கு 49ஆவது டெஸ்ட் ஆட்டமாக அமைந்தது. கொழும்பில் நாளைமறுதினம் நடைபெறும் ஆட்டத்தில் இந்திய அணியின் சார்பாக விளையாடும் குழாமில் புஜாரா இடம்பிடித்தால் அது அவரின் 50ஆவது ஆட்டமாக அமையும். புஜாரா இதுவரை 3 ஆயிரத்து 906 ஓட்டங்களை எடுத்துள்ளார். 7 இன்னிங்ஸில் ஆட்டம் இழக்காததால் அவரது சராசரி 50 இற்கும் அதிகமாக உள்ளது. கொழும்பில் நடைபெறும் ஆட்டத்தில் புஜாரா பெரும்பாலும் விளையாட வாய்ப்புள்ளது. இந்த ஆட்டத்தில் 94 ஓட்டங்களைப் பெற்றால் 50ஆவது ஆட்டத்தில் 4 ஆயிரம் ஓட்டங்களை எட்டிய பெருமை புஜாராவுக்குக் கிடைக்கும்.

இந்திய அணியின் சகலதுறை வீரரான அஸ்வின், கடந்த ஆட்டத்தில் தனது 50ஆவது ஆட்டத்தை நிறைவுசெய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



# இலங்கை பலமான அணியல்ல

## கங்குலி கணிப்பு

“இலங்கை பலம் வாய்ந்த டெஸ்ட் அணியாக தற்போது இல்லை" இவ்வாறு தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவரும், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஆலோசகருமான சவுரவ் கங்குலி.

இந்திய அணி இலங்கைக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ளது. காலியில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்றது. இரண்டாவது ஆட்டம் நாளைமறுதினம் நடைபெறவுள்ளது. இந்த நிலையிலேயே இலங்கை தொடர்பாக இவ்வாறு தெரிவித்தார் கங்குலி.

“துடுப்பாட்டம், பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பு என சகலதுறைகளிலும் இந்திய அணி வலுவாக உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக வெளிநாடுகளில் இந்திய அணி சிறப்பாக விளையாடி வருகிறது. ஆனால் இந்தியாவுக்கு நிகரான அணியாக இலங்கை தற்போது இல்லை. அந்த அணியில் தளம்பல்களும், கவலைக்குரிய அம்சங்கள் அதிகம் உள்ளன" என கங்குலி மேலும் தெரிவித்தார். (ம)

# சமுதாயக் கழக ‘பி’ அசத்தலான வெற்றி

புதுக்குடியிருப்பு மத்திய சமுதாயக் கழகத்தினால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் புதுக்குடியிருப்பு மத்திய சமுதாயக் கழக 'பி' அணி வெற்றிபெற்றது.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் புதுகுடியிருப்பு மத்திய சமுதாயக்கழக 'பி' அணியை எதிர்த்து டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று களத்தடுப்பைத் தீர்மானித்தது புதுக்குடியிருப்பு மத்திய சமுதாயக் கழக 'பி' அணி.

முதலில் துடுப்பெடுத்தாடிய டைமன்ஸ் அணி 93 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது.

120 பந்துகளில் 94 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய புதுக்குடியிருப்பு மத்திய சமுதாயக் கழக 'பி' அணி, 17 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றிபெற்றது. கோகுலன் 34 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். (ம-23)





வடமாகாண சிறப்புத் தேவையுடையவர்களுக்கான பரா விளையாட்டு போட்டிகள் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த சனி மற்றும் ஞாயிறு தினங்களில் நடைபெற்றன. தடகளப் போட்டிகள், கூடைப்பந்தாட்டங்கள் என்பன இதில் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்ப்பாண பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் சி.நந்தகுமார், முல்லைத்தீவு ஒளி வாழ்வு நிறுவனத்தின் தலைவர் இ.ராசகுமார் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ம-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு வாரம் 683
சீட்டிழுப்பு திகதி 31.07.2017 ஊதா
Y 16 22 26 55
சுப்பர் ஜக்பொட்
ரூ. 54, 378, 416/=
வெல்லப்படவில்லை
07 38 41 62
பச்சை நிற டிக்கட்டுகள் 2017.08.03 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2910 திகதி 31.07.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 09 13 17 48 D
போனஸ் இல.: 73
புதன்கிழமை ஜக்பொட்: 34, 329, 265/-
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்: 07 20 68 75
ஊதா நிற டிக்கட்டுக்கள் 2017.08.02 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1385
சீட்டிழுப்பு திகதி 2017.07.31
வெற்றி இலக்கங்கள்: 28 37 55 57 X
07 40 43 56
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 16,129,608/-
தொ.பே : 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## கண்ணீர் காணிக்கை



**பொன்னுத்துரை பாலகிருஷ்ணன்**
**(பாலா அண்ணை)**

(முன்னைநாள் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் நிர்வாக உத்தியோகத்தர், முன்னைநாள் UNHCR திட்ட அலுவலர்)

1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட பல இடப்பெயர்வுகளில் அரச சார்பற்ற நிறுவனங்களையும் அரச நிர்வாகத்தையும் இணைத்து இடம் பெயர்ந்த மக்களது துயரங்களைத் துடைப்பதில் அயராது உழைத்த வரும்.1995 இன் பின்னர் இடப்பெயர்வுகள் மீள்குடியேற்றங்கள், சுனாமி அனர்த்த காலங்களிலும் 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் பின்னர் வன்னியிலிருந்து யாழ்.மாவட்டத்தில் மீள்குடியேறிய குடும்பங்களுக்காகவும் அளப்பரிய சேவை புரிந்த மனிதருள் மாணிக்கம் 31.07.2017 இயற்கை எய்தியுள்ளார். இவரது ஈமைக் கிரியைகள் நாளை (02.08.2017) புதன்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

**அன்னாருடன் பணியாற்றிய சமூகப் பணியாளர்கள் சார்பாக சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம்**
CFCD
**077 723 8686**
**254, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.**

2000 கோடி ரூபா ஒப்பந்தத்தில்

# பார்சிலோனாவுக்கு செல்கிறார் கிரீஸ்மன்



பிரான்ஸ் அணியின் முன்னணி வீரரான கிரீஸ்மனை, இலங்கை மதிப்பில் சுமார் 2ஆயிரம் கோடி ரூபா கொடுத்து வாங்குவதற்கு பார்சிலோனா திட்டமிட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

பிரான்ஸ் அணியின் நம்பிக்கை வீரர்களில் ஒருவரான கிரீஸ்மன் கழகத்தைப் பொறுத்த வரை அத்லெட்ரிகோ மட்ரிட்டுக்காக விளையாடி வருகிறார். இந்த நிலையில் கிரீஸ்மனை வாங்குவதற்கு பார்சிலோனா விரும்புகிறது என்றும், அந்தக் கழகம் இலங்கை மதிப்பில் சுமார் 2 ஆயிரம் கோடி ரூபா வரை கொடுக்கத் தயாராக உள்ளது என்றும் பன்னாட்டு ஊடகங்களின் செய்திகளில் இருந்து அறியவருகிறது.

பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரரான நெய்மர் அந்த அணியில் இருந்து விலகி, பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணிக்குச் செல்லவுள்ளார் என்று தகவல்கள் வெளிவந்திருந்தன. இதனால் நெய்மருக்கு நிகரான ஓர் வீரரை தேடும் முயற்சியில், கிரீஸ்மனுக்கு பார்சிலோனா வலை விரிக்கிறதா என்ற சந்தேகங்களும் இல்லாமலில்லை.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் மன்செஸ்டர் யுனைற்ரெட், கிரீஸ்மனை ஒப்பந்தம் செய்ய எத்தனித்தது. எனினும் அத்லெட்ரிகோ மட்ரிட்டில் தொடர்ந்து விளையாடும் விருப்பத்தை கிரீஸ்மன் வெளிப்படுத்தியிருந்தமையும் கவனிக்கத்தக்கது. (ம)

நேர்முகத்தேர்வுகள்
பிரபல அழகுசாதனபொருள் உற்பத்தி நிறுவனத்தின் பொருள்களை ஊக்குவிக்க Promotion Girls உடனடியாகத் தேவை.
எண்ணிக்கை - 15 பேர்
வயதெல்லை - 18 - 30
சம்பளம் - 15 000/= - 30 000/=
காலம் - 01.08.2017, 02.08.2017
10 am - 3 pm
விரும்புவோர் அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படம், சுயவிவரக்கோவை, கல்விச்சான்றிதழ் பிரதிகளுடன் நேரில் வரவும்.
WINSTAR JOB BANK
106, தபாற் பெட்டிச்சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி.
T.P : 021 320 2789

Softlogic Finance தங்க கடன்
அவசர பணத்தேவைக்கு உங்கள் தங்கப் பவுணுக்கு அதிகூடிய முற்பணம்
முன்கூட்டிய அறிவித்தலின்றி தங்கநகைகளை துரிதமாக மீட்கும் வசதி
தங்க நகைகளுக்கு பூரண பாதுகாப்பு
செயற்றிறன் மிக்க சிநேகபூர்வமான ஊழியர்கள்
பகுதிக் கொடுப்பனவுகள் செய்யும் வசதி
தெரிவுசெய்வதற்கு முற்பண கொடுப்பனவு முறைமைகள் பல



24 கரட் ரூ. 45,500/-
22 கரட் ரூ. 38,000/-
சுன்னாகம் - 0722 527664, 0212 242775
யாழ்ப்பாணம் - 0722 334596, 0212 219444
*நிபந்தனைக்குட்பட்டது

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

### நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும்

**1816 – 2017**

அகத்தில் இருத்தியே - எம்மை
அகிலம் காணவைத்து அழகுபார்த்த - எம்
மத்திய தாய்க்கு இன்று - அகவை
இருநூறு கடந்து ஒன்றாகிறது...!!!
நேற்றுப்போல் இருக்கிறது - எம் தாயின்
தோற்றமும் வளர்ச்சியும் - இன்றும்
புத்தாடை உடுத்தி புதுப்பொலிவு பெற்று
சீவிச் சிங்காரித்து புதுக் கோலத்துடன் புன்னகைக்கிறாள்
சுமந்து சுமந்து சுகப்பிரவசமாகய்
எத்தனை ஆயிரம் சான்றோரை
தந்து சாதனை படைத்தவள்
இருநூற்றிஒன்று அல்ல ஈராயிரம் ஆண்டுகள்
கடந்தும் இப்படியே!! இன்னும் இன்னும்
வாழ்க வளர்க என்று எம் தாயை
வணங்கியே வாழ்த்துகின்றோம்.

– மத்தியின் மைந்தர்கள் –

பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.